# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்



ஏப்பிரல் 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100/=

# நிமிர்வு

இந்த மலைகள் மேல் சேர்ந்து வாழ்ந்த நாம்
இந்த மலைகள் மேல் உழைத்து வேர்த்த பின்
இந்த மலைகள் மேல் சாய்ந்து ஓய்ந்து நல்
ஆடல் பாடலால் சோர்வு நீங்கினோம்.
இந்த மலைகளின் வடிவை மாற்றியும்
இந்த மலைகள் மேல் அழகு போர்த்தியும்
இரண்டு நூறாண்டு காலமாய்
இந்த மலைகளோடு உறவு பூண்டுள்ளோம்.

இயற்கை சீறிய போதிலே எல்லாம்
பொறுமை காத்த எம் மலைகள் முறைமுறை
சரிவு காண்பதோ, அழிவு சூழ்வதோ?
மழை பொழிந்ததால் மலைகள் சாய்வதோ,
சரியு மண்ணிடை மனைகள் ஆழ்வதோ,
மனிதர் வீழ்வதோ, மாண்டு போவதோ?
உடைமை யாவையும் தேய்ந்து போனதால்
உழைத்து வாழ்வதிற் பெருமை கொண்ட பேர்
அகதி வாழ்வெனுஞ் சிறையில் மாய்வதோ?

மலைகள் சாய்வதன் உண்மை தேடுவோம்.
உழைப்பவர் பலர் உழைப்பிலே உடல்
கொழுப்பவர் சிலர் கொடுமையாற் புவி
இயல்பு மாறியே அழிவு காண்பதோ?
மனிதர் சூழலின் பகைவர் யாரெனும்
உண்மை ஆய்ந்தினி உலகை மாற்றிடும்
பணியினில் இனி ஒன்று சேருவோம்.

சரியு நெஞ்சுகள் உறுதி பூணுக,
சரியும் மலைகளும் நிமிர்வு காணுக.

(மீரியபத்த 29.10.2014 மண்சரிவையொட்டிய கவிதை, 2014 டிசம்பர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய ஜனநாயகம் புதிய வாழ்வு புதிய பண்பாடு

# தாயகம்

கலை இலக்கிய சமூக விஞ்ஞான இதழ்
இதழ் 93
ஏப்ரல் 2018


- பிரதம ஆசிரியர் :
  *க. தணிகாசலம்*
  *தொலைபேசி : +94765283003*
- நிர்வாக ஆசிரியர்:
  *ச. சத்தியதேவன்*
- ஆசிரியர் குழு :
  *சி. சிவசேகரம்*
  *குழந்தை ம சண்முகலிங்கம்*
  *சோ. தேவராஜா*
  *அழ. பகீரதன்*
  *தெ. ஞா. மீநிலங்கோ*
  *வே. தினகரன்*
  *லோ. நிலா*
  *க ஆதித்தன்*
- பக்க வடிவமைப்பு :
  *சிவ பரதன்*
- அட்டை படம் :
  *புகழ் பெற்ற இயற்பியல் (பௌதிகவியல்)*
  *அறிஞர் ஸ்டீஃபன் ஹாக்கிங்*
- ஓவியங்கள் :
  *நன்றியுடன் இணையத்திலிருந்து*
  *படங்கள் : எஸ். றி. அனுஜன்*
- தொடர்பு :
  *ஆசிரியர்,*
  *ஆடியபாதம் வீதி,*
  *கொக்குவில்*
- மின்னஞ்சல் :
  thajaham@gmail.com
  ISSN NO : 2335-9492
- அச்சுப்பதிவு :

வந்தனம் பிறைவேற் லிமிட்டெட்
சில்லாலை வீதி,
பண்டத்தரிப்பு


## உள்ளடக்கம்

### கவிதைகள்

த ஜெயசீலன்
அழ. பகீரதன்
வே. தினகரன்
எஸ். இராஜேந்திரன்
றொபின்
சோ. பத்மநாதன்
தங்கராஜா இராஜ ராஜேஸ்வரி

### சிறுகதைகள்

க. சிவகரன்
பிரசன்னா
வனஜா நடராஜன்

### கட்டுரைகள்

மருத்துவர் ஜமுனானந்தா
சோ.தேவராஜா
சி.சிவசேகரம்
அனுதினன் சுதந்திரநாதன்
தனயன்
தாயகன்
இராஜரட்ணம் தனிஸ்ரன்
ரஜனி எக்ஸ் தேசாய்

**தேசிய கலை இலக்கியப் பேரவை**
இல: 62, கொக்குவில் சந்தி,
கொக்குவில்

**நிதி அனுப்புதல்களுக்கு :**
தாயகம் ஆசிரியர் குழு
Editorial Board of Thayakam
S/A NO : 0072361444
BANK OF CEYLON, CHANKANAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயகம்
கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்

இதழ் 93

புதிய ஜனநாயகம்
புதிய வாழ்வு
புதிய பண்பாடு

ஏப்ரல் 2018

# விஞ்ஞானமும் மனிதத் துயர்களும்

'கஞ்சி குடிப்பதற்கிலார்- அதன்
காரணங்கள் எவையென்னும் அறிவுமிலார்'

இது மகாகவி பாரதி ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் பிரித்தானிய கொலனித்துவ ஆட்சிக்கு அடிமைப்பட்டிருந்த இந்திய மக்களின் நிலையை நினைந்து நெஞ்சு பொறுக்காது எழுதிய கவிதை வரிகள். மனிதத் துயர்களுக்குக் காரணத்தைத் தேடும் அறிவியல் விழிப்புணர்வும், விஞ்ஞான உலகநோக்கும் மக்களிடம் இல்லை என்ற ஏக்கத்தில் பிறந்த சொற்கள் இவை. ஒரு நூற்றாண்டுக்கு மேல் கழிந்தும் நவகொலனித்துவப் பொருளாதார அமைப்பின் கீழ், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் தொடர்வதும் வறுமையால் விவசாயிகள் தற்கொலை செய்வதும் இன, மத, சாதிக் கலவரங்களால் மாள்வதும் உலக நாடுகளில் தொடரும் யுத்தங் களில் சிறுவர்களும் குழந்தைகளும் உட்படப் பெருந்தொகையான மக்கள் பலியாவதும் அகதிகளாக அல்லலுற்று உலகெங்கும் அலைவதும் தொடர்கின்றன. உயிரினங்களின் வாழ்விடமான பூமியும் இலாப வேட்டைக்கு இரையாகி உயிர்ப்பை இழந்து வருகிறது.

மனிதத் துயரங்களுக்கு எதிரான அறிவியல்சார் விழிப்புணர்வையும் மானுட விடுதலைக்கான சமூக-விஞ்ஞான உலக நோக்கையும் மாணவர்கள் உட்பட இளந் தலைமுறையினரிடமும் பொதுமக்கள் அனைவரிடமும் ஏற்படுத்தும் தேவையை இன்று பலரும் உணர்வர். இப் பிரபஞ்சத்தின் தோற்றமும் அதில் உயிரினங்களின் உருவாக்கமும் விலங்கிலிருந்து மனித இனத்தின் படிப்படியான வளர்ச்சியும் வாழ்க்கைத் தேவைகட்கும் வசதிகட்குமான போட்டியிலும் போராட்டத்திலும் மனிதரை மனிதர் ஒடுக்கி வாழ்ந்த, இன்னமும் வாழ்கின்ற வரலாற்றுத் தொடர் நிகழ்சிகளும் பற்றிய விஞ்ஞானமுறையான அறிவு மக்களிடம் பரவலாக்கப்பட வேண்டும். இன்று மக்கள் எதிர்கொள்ளும் ஒடுக்குதல்களிலும் துயர்களிலும் இருந்து விடுபட இத்தகைய உலகநோக்கு அவசியம்

இத்தகைய ஒரு சூழலில், சமூக உணர்வுடன் கூடிய விஞ்ஞானமுறையான உலக நோக்குடன் வாழ்ந்து அண்மையில் மறைந்த இயற்பியல் விஞ்ஞானி ஸ்டீஃபன் ஹாக்கிங் அவர்களின் அறிவியல் பூர்வமான அறவாழ்க்கை அவைருக்கும் ஒரு பாடமாக அமையலாம். ஹாக்கிங் நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் ஒருவகை 'மோட்டார் நியூரொன்' நோயால் பாதிக்கப்பட்டமை அவரது இருபத்திரண்டாவது வயதில் தெரியவந்த பின்பும், பேசும் ஆற்றலை இழந்த பின்பும், சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி மிகுந்த மன உறுதியுடன் 76 ஆண்டுகள் வாழ்ந்து பிரபஞ்சம் பற்றிய தனது ஆய்வுக் கருத்துக்களை மக்களுக்கு விளங்குமாறு எளிமையாக வெளியிட்டுவந்தார். ஒரு தலைசிறந்த விஞ்ஞானியாக இருந்தும் விரிந்த உளப்பண்பாட்டுடன் உலகின் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை அவர் விடாது மேற்கொண்டிருந்தார். வியட்னாம் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்து நடந்த கண்டன ஊர்வலத்திற் கலந்து கொண்ட அவர், இஸ்ரேலின் ஆக்கிமிப்புக்கு எதிராகப் பலஸ்தீன மக்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டையும் கொண்டிருந்தார். பிரபஞ்சத்தில் வேற்றுலக மாந்தர் இருக்கலாம் எனக் கூறிய அவர் 'நமது தற்போதைய நிலையில் நாம் வேற்றுலக மாந்தரைச் சந்திப்பது, அமெரிக்காவின் பூர்வகுடிகட்கும் கொலம்பஸ{க்கும் இடையே நடந்த சந்திப்பின் நவீன வடிவமாகஇருக்கும். கொலம்பஸைச் சந்தித்த செவ்விந்தியர்களுக்கு நன்மை எதுவும் ஏற்பட்டதாக எனக்குத் தோன்றவில்லை' என்றார்.

விஞ்ஞான உலக நோக்கால் விரிந்த உளப் பண்பாட்டுடன் இத்தகைய கருத்துக்களை வெளிப்படுத்தியும் விடாது செயற்பட்டும் வந்த அவர், கடவுளின் இருப்புப் பற்றி வெளியிட்ட விஞ்ஞானமுறையான கருத்துக்கள் இன்றைய இளைஞர்களதும் மணவர்களதும் சிந்தனைக்கு உரியவை. கடவுள் பற்றிய கருத்தில் 'ஈர்ப்பு விதிகளின் காரணமாக பிரபஞ்சம் சுயமாகவே பூச்சியத்திலிருந்து மீண்டும் ஒருமுறை தொடங்கலாம். நமது இருப்புக்கும் பிரபஞ்சத்தின் இயக்கத்திற்கும் பொறுப்பு திடீரென்று நிகழும் வானியல் நிகழ்வுகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குக் கடவுளின் தேவையில்லை' என்றார்.

இக் கருத்தால் கிறிஸ்தவப் பாதிமாரின் பகையை அவர் சந்திக்த்தார். விஞ்ஞான வரலாற்றில் இது புதியதல்ல. உலகு பற்றியும் அதில் மனித வாழ்வு பற்றியும் மதங்கள் கொண்டுள்ள பழைய கற்பனைகளையும் நம்பிக்கைகளையும் யதார்த்தமான விஞ்ஞானக் கருத்துக்களாலும் கோட்பாடுகளாலும் கேள்விக்குட்படுத்திய பல விஞ்ஞானிகளை அதிகார வர்க்கத்தினர் சிறைக்கூடங்களுக்கும் கொலைக்களங்களுக்கும் அனுப்பியுள்;ளனர்.

அது மதத்தின் மீது அவர்களின் பற்றால் நிகழவில்லை. மாறாக மக்கள் மீதான ஒடுக்குதல்களை மக்களே வலிந்து ஏற்று வாழும் மனநிலையை உருவாக்க உதவும் மதக் கருத்துக்களும் நம்பிக்கைகளும் விஞ்ஞானக் கருத்துக்களால் கேள்விக்கு உட்படுவதனால் அதிகார வர்க்கங்களின் நலன்கட்கு வரும் ஆபத்தை அவர்கள் அறிவார்கள். மனிதர்களின் துயர்களை விளக்க, இறைவன் வகுத்த விதி, தலை விதி, ஊழ்வினைப் பயன், கிரக பலன் என்பவற்றை முன்வைப்பதன் மூலம் ஒடுக்குதல்களதும் துன்பங்களதும் உண்மைக் காரணங்களை அதிகார வர்கத்தினர் மறைக்கின்றனர். ஆண்டாண்டு காலமாக மக்கள்மீது திணித்தமையாற் பழகிய சிந்தனை முறையும் சடங்;கு சம்பிரதாயங்களின் ஊடாகத் தொடரும் பழைய நடைமுறைகளும் பழமைக்குப் பலம் சேர்க்கின்றன.

பிரெஞ்சுப் புரட்சிக்கு தலைமை தாங்கிய முதலாளி வர்க்கம் தனது வளர்ச்சியை எதிர்த்த நிலப்பிரபுத்துவ முடியாட்சியைப் பாதுகாத்த பழமைவாத மதக் கருத்தியலை விமர்சித்N;த அன்று பொதுமக்களை அணிதிரட்டியது. ஆனால் அதிகாரத்துக்கு வந்த பின், தொழிலாளர்கள் மீதும் விவசாயிகள் மீதும் உழைப்புச் சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் இலகுவாகத் தொடர்வதற்கு அதே பழமைவாதக் கருத்துக்களைப் பேண முற்பட்டது. இதுபோன்ற தடைகளை மீறி ரஷ்யப் புரட்சி ஏற்பட்ட பின், உலகின் பெரும்பாலான நாடுகளும் மக்களும் விஞ்ஞான உலகநோக்குடன் பழமைவாதக் கருத்துக்களிலிருந்து விடுபடும் நிலை தோன்றியது. பல இஸ்லாமிய நாடுகளும் இத்தகைய விஞ்ஞான உலக நோக்கை தமதாக்கின. இந்தியா போன்ற பல நாடுகள் பெயரளவிலேனும் மதசார்பற்ற நாடுகளாகத் தம்மை அறிவித்தன.

அறுபதுகளில் உலகெங்கும் எழுந்த புரட்சிப் பேரலைகளால் அஞ்சிய அமெரிக்கா இத்தகைய விஞ்ஞான உலக நோக்கின் வளர்ச்சிக்கு எதிராகக் கிறிஸ்தவ மத அடிப்படையிலான பழமைவாதச் சிந்தனைகளைத் தூண்டி வளர்த்தது. பின்னைக் காலங்களில் இஸ்லாமிய மத அடிப்படைவாதத்தை தூண்டியது. அதன் விளைவுகளை ஆப்கானிஸ்தான் முதல் சிரியா வரை தொடரும் யுத்த அழிவுகளாக மக்கள் அனுபவிக்கின்றனர்.

இந்திய ரத ஊர்வலச் சர்ச்சைகளிலும் இலங்கையின் இன-மதப் பகையின் அழிவுகளின் பின்னாலும் உலகத் தொழிலாளர் மே தினத்தை வெசாக் தினத்துக்காகப் பிற்போடும் செயலின் பின்னாலும் விஞ்ஞான உலக நோக்குக்கு எதிரான பழமைவாத மதக் கருத்துகளும் நவதாராளவாத பொருளாதாரமும் அதன் கட்டற்ற நுகர்வுக் கலாசாரமும் இருப்பதில் வியப்பில்லை. 'எட்டு மணி நேர உழைப்பு, எட்டு மணி நேர அறிவியல், கலை, பண்பாட்டுடனான நிறைவான வாழ்க்கை, எட்டு மணி நேர ஓய்வு' என்ற கோரிக்கையின் கீழ் இன, மத, சாதி, பால், நிற பேதங்களின்றி மனித வாழ்வின் உயர்ந்த விடுதலை இலக்குகளை நோக்கி உலகின் தொழிலாளர்கள், விவசாயிகள், உழைக்கும் மக்கள் ஒன்றுபடுவதைக் கண்டு அதிகார வர்க்கத்தினர் அஞ்சுகின்றனர். உயர்ந்த மானுட அன்பையும், மனித உறவுகளையும் சிதைத்துப் பொருளாதார வாழ்வுக்கான போட்டிகளுள்ளும், நுகர்வுப் போட்டிகளுக்குள்ளும் மக்களின் தலைகளைத் திட்டமிட்டே புதைக்கின்றனர்.

"உங்களுக்கு முன்னால் நடக்கும் மனிதப் பேரழிவுகளை மட்டுமல்லாமல் உலகில் எங்கு எது நடந்தாலும் அதை உங்கள் தலைகளுக்குள் போட்டுக் கொள்ளாதீர்கள். நாங்கள் உலகில் முதலானவர்கள். எல்லாம் நன்றாக நடந்தது, நடக்கிறது, நடக்கும். எல்லாவற்றையும் நாங்கள் கவனிப்போம். பல்தேசியக் கொம்பனிகளுக்கும் கோப்றேற் நிறுவனங்களுக்கும் முன் கைகட்டி கருத்தொருமித்து உழையுங்கள்" என்பதே இன்று நவகொலனிய உபதேசமாக உள்ளது.

இதுவே நடைமுறை என்றால் விஞ்ஞானி ஸ்டீஃபன் ஹாக்கிங் கூற்றுப்படி இன்று யுத்தங்களால் மக்கள் இடம் பெயர்வது போல, 'நூறு ஆண்டுகளில் இப் புவியை விட்டு வேறு கிரகங்களுக்கு மக்கள் இடம் பெயரத் தயாராக வேண்டும். எனவே தொடரும் மனிதத் துயர்களுக்கு விஞ்ஞானமுறையில் விடைகண்டு அவற்றை விலக்க முயல்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களும் உள்ளூராட்சியும்

கேவலமான மோசடிகளோ அவற்றினுங் கேவலமாக அவற்றை மறைக்கும் முயற்சிகளோ எம்மை வியப்பூட்டா. அவை பாராளுமன்ற அரசியலின் அங்கங்களாகி வெகுகாலம். எனினும், எந்தக் களவினூடும் எவ்வாறோ ஆட்சி மாறினால், மக்கள் ஒரு சிறு மாற்றத்தையேனும் எதிர்பார்க்கின்றனர். எனவே எக்கச்சக்கமாகப் பணத்தை இறைத்துப் போட்டியிடும் கட்சிகளும் கூட்டணிகளும் தூய ஆட்சியை உறுதிமொழிகின்றன. பாராளுமன்றக் கட்சிகளின் பொய்கள் மக்களுக்கு அலுத்தாலும், ஊழல்மிக்க எதேச்சாதிகார ஆட்சிகட்கும் சலியாத வாழ்க்கைத்தரச் சரிவிற்கும் நெடுங்காலம் உட்பட்ட மனங்களில் மேலோட்டமான ஒரு மாற்றமேனும் வராதா என்ற நப்பாசை ஊசலாடுவதால் மக்கள் வாக்களிக்கின்றனர். நமது அரசியல் முறைமையின் கோளாறு, அது சுரண்டி ஒடுக்கப்படும் சனத்திரளுக்கு மாறானது என்பதை மக்கள் இனியேனுங் கற்கவேண்டும்.

போர் முடிந்தாற் பொருளாதாரம் முன்னேறுமென்றும் வாழ்க்கை வழமைக்கு மீளுமென்றும் நம்ப நியாயமிருந்தது. போராற் கெட்டோர் புனர்வாழ்வு பெறுவரெனவும் சிதைந்த பிரதேசங்கள் மறுமலர்ச்சி காணுமெனவும் பொருளாதார, சட்ட-ஒழுங்குப் பிரச்சனைகளோடும் சனநாயக உரிமைகளின் மீட்சியோடும் நெருங்கிய உறவுடைய தேசிய இனப் பிரச்சனையைத் தீர்க்க ராஜபக்ச ஆட்சி முயலுமென்றும் மக்கள் நம்பினர். விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியின்போது ஆட்சியிலிருந்ததைப் பாவித்துப் "பயங்கரவாதத்தைத் வென்றமைக்கு" முழு உரிமை கோரிய ராஜபக்ச ஆட்சி, பிரச்சனைகளைப் புறக்கணித்து இனப் பிரிவுகளிடையே உறவுகளை மோசமாக்கி, விருத்தியின் பெயரில் நாட்டை மேலுங் கடனுள் ஆழ்த்தி, வெறுக்கத்தக்க ஊழல்மிக்க ஃபாஸிஸ ஆட்சியை நாட்டின் மீது சுமத்தியது. அந்த ஆட்சி மேலும் அதிகாரம் பெறவும் தனிப்பட்ட செல்வத்தைத் திரட்டவும் பாராளுமன்றம் உதவியதை நாம் மறக்கலாகாது.

மைத்ரிபால-ரணில் தலைமையில் ஆட்சியை மாற்றிய சந்தர்ப்பவாதக் கூட்டணியின் கீழ் ராஜபக்ச ஆட்சி தோற்றாலும் அதன் சிந்தனையும் செயலும் தொடர்கின்றன. பாரிய சமூகக் குற்றங்களை விசாரிப்பதாக வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாது வேண்டுமென்றே சட்ட நடவடிக்கைகளை இழுத்தடித்த புதிய ஆட்சி தனது மோசடிகளுட் தடுமாறுகிறது. நாட்டின் பொருளாதாரத்தைச் சர்வதேச நாணய நிதியமே தீர்மானிப்பதால், உறுதியளித்த வாழ்க்கைச் செலவுக் குறைப்பும் நியாய ஊதியமும் வரமாட்டா. கல்வியிலும் உடல்நலத்திலும் முதலீட்டை உயர்த்துவதாக உறுதியளித்த அரசாங்கம், முதலீட்டைக் குறைந்துக் கல்வியிலும் உடல்நலத்திலும் லாபமீட்டுமாறு தனியார் முதலீட்டை ஊக்குவிக்கிறது. போர் முடிந்து ஒன்பதாண்டுகள் போயும் பாதுகாப்புச் செலவு உறுதியாக ஏறுகிறது.

1977முதல், திறந்த பொருளாதாரம் என்ற பெயரில் நாட்டையும் அதன் பொருளாதாரத்தையும் ஏகாதிபத்தியத்திடம் அடகுவைத்த ஜே.ஆர். ஜயவர்தன ஆட்சியின் போக்கை அதை அடுத்து வந்த ஆட்சிகள் போர்ச் செலவின் பெயரில் மும்மரமாக்கின. போரை வெல்ல அரசாங்கத்துக்கு உதவிய ஏகாதிபத்திய, மேலாதிக்க வல்லரசுகள், மனித உரிமையையும் போர்க் குற்றங்களையும் தேசியப் பிரச்சனையையும் கொண்டு நாட்டைத் தமது பிணைக் கைதியாக்கியுள்ளன. இப் பின்புலத்தில் நாட்டில் வளர்ந்த சீனச் செல்வாக்கு ஏகாதிபத்திய–மேலாதிக்க வல்லரசுகளின் விசுவாசிகட்குப் பிரச்சனையாயிற்று. எனவே, தேச நலன்கட்கமையச் சீனச் செல்வாக்கைக் கட்டுப்படுத்தத் தெரியாத அரசாங்கம், ஏகாதிபத்திய, மேலாதிக்க அழுத்தங்கட்குப் பணிகிறது. தமிழ்த் தேசியவாதிகளும் அதையே வேண்டுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பொருளாதாரம், தேசிய இனப் பிரச்சனை, போருக்குப் பிந்திய புனர்வாழ்வு, சட்டமும் ஒழுங்கும், மோசமடையும் கல்வியும் உடல் நலமும் சார்ந்த சிக்கல்கள் உட்பட்ட சமகால அரசியற், பொருளாதார நெருக்கடிகளின் நடுவே, அரசாங்கம் நெடுங்காலந் தாமதித்த ஊராட்சித் தேர்தல்களை நடத்தியது. தேர்தல் அரசியலின் வங்கலோட்டுத்தனத்தால், ஊராட்சிகளைக் கைப்பற்றக் கட்சிகள் நடத்திய பிரசாரங்களிற் தேசியப் பிரச்சனைகளும் கவனம்பெறவில்லை; கவனிக்கவேண்டிய ஊராட்சி அலுவல்களுங் கவனம்பெறவில்லை. ஊராட்சி என்பது தேசத்தின் சட்டவாக்கம், பொருளாதாரம், அயலுறவு ஆதியன பற்றியதல்ல. அது நாட்டின் சட்டவிதிகட்கும் நிதி வளங்கட்குமமைய ஊராட்சிப் பகுதிகளில் மக்களின் நலமான இருப்புச் சார்ந்த அலுவல்களை நிருவகிக்கும் ஒரு அமைப்பு. சோஷலிச நாடுகளில் அது நாட்டின் சனநாயகத்தின் ஒரு முக்கிய உறுப்பாயிருந்தது. தங்கள் குறைநிறைகளை மக்கள் மேல்மட்டங்கட்குத் தெரிவிக்கும் ஒரு மார்க்கமாக அது இருந்தது. பல முன்னேறிய முதலாளிய நாடுகளிலும் பாடசாலை, சமூக நலன் செயற்திட்டங்களின் நிறைவேற்றல், ஊரின் திட்டமிடல், ஊரின் காவல் துறை ஆகியவும் அதற்குட்பட்டவை. அதிகாரப் பரவலாக்கலின் ஒரு முக்கிய கருவியாக அது இயங்க மிக்க இடமுண்டு.

இலங்கையில் நெடுங்காலம் முன்பிருந்தே தேசிய மட்ட அரசியல் அதிகாரத்தின் பகுதியாகும் விதமாக ஊராட்சியைப் பாராளுமன்ற அரசியல் சீரழித்தது. அதன் விளைவாகவும் பின்னர் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தாலும் ஊராட்சிகளில் மக்களின் பங்குபற்றல் மிக வலுவிழந்தது. ஊராட்சித் தேர்தல்களின் போது மக்களின் தேவை சார்ந்த விடயங்களைப் பேசுவதைப் பாராளுமன்றக் கட்சிகள் தவிர்ப்பது ஏனென்று நாம் சிந்திக்க வேண்டும். சுயலாபப் பாராளுமன்ற அரசியல் நோக்கங்களை முன்னெடுக்க வேண்டிப், பாராளுமன்ற அரசியற் கட்சிகள் இவ்வளவு காலமும் ஊராட்சிகளைச் சீரழித்து வந்ததை மக்கள் அறிவர். ஊராட்சிகளில் பெரிய அரசியற் கட்சிகளின் ஏகபோகத்தை முறித்து ஊராட்சிகளையும் உறுப்பினர்களையும் தத்தமது தொகுதிகட்குப் பதில்கூறக் கடமைப்பட்டோராக்க வட்டார அடிப்படையிலான தேர்தல் வழி செய்யலாம். அதன் மூலம் பாராளுமன்ற அரசியற் கட்சிகள் ஊராட்சிகளைத் தவறாகப் பாவிப்பதற்கு முடிவுகட்டலாம். அதைப் பாராளுமன்ற அரசியற் கட்சிகள் விரும்பா. எனவே, ஊராட்சித் தேர்தல் முடிவுகள் பாராளமன்ற அரசியலின் இடைக்காலப் பலப் பரீட்சை முடிவுகளாகவே பொதுப்பட அமைந்தன. இருந்தும், வடக்கின் ஊராட்சிகள் சிலவற்றிலேனும் கணிசமானோர் ஊராட்சிகள் மூலம் எவ்வாறு தமது உண்மையான, அடிப்படைத் தேவைகளை வலியுறுத்தலாம் என வழி தேடியுள்ளனர். இது ஆரோக்கியமான ஒரு மாற்றம். இந்த மாற்றத்தை எவ்வாறு முழு நாட்டுக்கும் ஒரு புதிய திசையாக்கலாம் என்பதும் ஊராட்சிகளின் அதிகாரங்களையும் ஊராட்சிகளில் மக்களின் நேர்ப் பங்கேற்றலையும் வலுப்படுத்துவது எவ்வாறு என்பதும் மக்கள் முன்னுள்ள சவாலாகும்.

ஊராட்சிகளிற் பொறுப்பிலுள்ளோர் பாராளுமன்றக் கட்சிகளதும் அரசாங்க, மாகாண அமைச்சர்களதும் நிழலிற் பாதுகாப்புத் தேடாமல் ஊராட்சிப் பிரச்சனைகளில் மக்களுக்கு வகைகூறச்செய்ய மக்கள் துணிவராயின் அது சனநாயகத்தை நோக்கிய வலுவான ஒரு நகர்வாகும். அதை இயலுமாக்க வெகுசனப் போராட்டங்கட்கு ஒரு பெரும் பங்குண்டு என்பதை உருவாகி வரும் வெகுசன இயக்கங்கள் கருத்திற் கொள்ளல் தகும்

**வாசகர்களுக்கு**

தாயகம் தனி இதழ் பெறவிரும்புவோர் ரூ100/= இனை முன்பக்கத்தில் குறிப்பிட்ட இலங்கை வங்கிக் கணக்கில் வரவு வைத்த வரவுத்துண்டின் நிழற்பிரதியை(மின் பிரதி) 077 104 1945 இலக்க கைபேசிக்கு viber அல்லது whatsapp மூலம் தபால் முகவரியுடன் அனுப்பி வைத்தால் தபால்மூலம் இதழை அனுப்பிவைப்போம். அவ்வாறே நாலு இதழ்களுக்கான ரூபா 400/= சந்தா பணம் வழங்கி தாயகம் இதழின் தொடர்ச்சியில் உங்கள் பங்களிப்பை நல்குங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Stephen Hawking

# ஸ்டீபன் ஹொக்கிங்கின் ஆய்வுப்புலம்

மருத்துவர் சி. யமுனாநந்தா

*அண்மையில் மறைந்த ஸ்டீபன் கக்கின்ஸ் பற்றிய சிறப்பு சமூகவிஞ்ஞான படிப்பு வட்டக் கருத்தரங்கு கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கருத்துரைத்த மருத்துவர் சி.யமுனாநந்தா அவர்களின் உரையின் சுருக்க வடிவம்.*

நியூட்டனின் இயக்கவியல் கோட்பாடுகளுக்கு அப்பால் உலகில் மாற்றத்தை ஏற்படுத்திய பௌதீகக்கோட்பாடுகளை அல்பேட் ஜயன்ஸ்டீன் எமக்கு எடுத்துரைத்தார். இவை 1915ம் ஆண்டளவில் நிகழ்ந்தது. ஜயன்ஸ்டீனின் சார்புக் கோட்பாடுகள் திணிவும் சக்தியும் அகிலத்தில் எவ்வாறு உள்ளன என்பதை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. இவர் வெளிக்கும் காலத்திற்கும் வரைவிலக்கணப்படுத்தி எவ்வாறு இவை விளைவுறுகின்றன என கணிதமுறையில் நிறுவினார். முற்றாக வெறுமையான வெளியினை உய்த்தறிந்தார். இவை சார்புக்கோட்பாடாகப் பரிணமித்தன. அடுத்து சிறிய துணிக்கையானது நலிவான புலத்தில் எவ்வாறு செயற்படும் என்பதனை குவாண்டம் பௌதீகம் என்ற அடிப்படையில் ஜயன்ஸ்டீன் விளக்கியிருந்தார். ஜயன்ஸ்டீனின் சமன்பாடுகளை நடைமுறையில் புரிந்து கொள்வது மிகவும் கடினமாகவே இருந்தது. பின் கார்ல் சுவார்ஸ்சைல்ட் Karl Schwarzschild என்பவர் வெளியில் உள்ள புள்ளித்துணிக்கை பற்றி வெளிப்படுத்தினார். இதன் அடிப்படையில் கருந்துளைகள் (Black hole) விளக்கப்பட்டது Karl Schwarzschild இன் சமன்பாட்டில் கருந்துளைகள் (black hole) நிலையான தன்மையை உடையது எனக்காட்டப்பட்டது. ஆனால் Stephen Hawking தவறானது என நிறுவி கால வெளியில் மாறும் தன்மையுடையது எனக்கூறி black hole காலத்துடன் மேலும் கதிர் வீச்சினை மேற்கொள்கின்றன என நிறுவினார். இதுவே Stephen Hawking இனால் விஞ்ஞான உலகிற்கு அளிக்கப்பட்ட மிகப்பெரிய கண்டுபிடிப்பாகும் அக்கதிர் வீச்சு கருந்துளைகளில் இருந்து $E=mc^2$ சமன்பாட்டிற்கு அமைய நிகழ்கின்றது.

Black Holes- space time கால வெளியில் நிலையானது அல்ல.

Black Holes - மிகவும் அடர்த்தியானவை.

Black Holes - தமது மேற்பரப்பின் அளவிற்கு விகித சமனாக கதிர் வீச்சினைக் காலுகின்றன.

Black Holes - அருகில் வரும் திணிவுகளை உள்ளெடுத்து விடுகின்றன.

அகிலத்தில் மிகப்பெரியது Black Holes ஆகும் இதன் அருகில் செல்லும் எல்லா துணிக்கைகளையும் அது உள்ளெடுத்து விடும். இதனாலேயே Black Holes ஆகாயத்தில் கருமையாக உள்ளது.

இது ஒளி அலைகளையும் உள்ளெடுத்து விடும் ஆனால் கதிர் வீச்சினைக் காலும்.

குவாண்டம் புலக் கோட்பாடு வெறுமையான வெளியில் வெற்றிடம் வெளி தட்டையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள போது எவ்வாறு செயற்படும் என்பதை கூறுகின்றது

Stephen Hawking வளைந்த பரப்பில் வெற்றிடத்தில் திணிவு செயற்படுவதைக் விளக்குவதற்கு Black Holes இன் இயல்பினை எடுத்தாண்டார்.

Black Holes இனை கருந்துளைகள் என்பதிலும் பார்க்க கரும்பூதம் என அழைத்தல் மிகவும் பொருத்தமானதாக இருக்கும் அல்பேட் ஐயன்ஸ்டீன் சார்பியல் கோட்பாட்டினையும் குவாண்டம் பௌதிக சக்தியையும் ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

Stephen Hawking இதில் வெற்றி கண்டார். Quantum Gravity கோட்பாடு மூலம் பொதுமைப்படுத்துவதில் வெற்றி கண்டார். அகிலத்தின் இயல்பினை வாழ்நாள் முழுவதும் ஆராய்ந்தவர் ஸ்டீபன் கக்கின்ஸ்ய

*1970*இல் spring theory இனை ஆராய்ந்தார். இதில் அடிப்படைத் துணிக்கைகள் நுண்ணிய குழாய் போன்ற இழை அமைப்பாக விபரிக்கப்பட்டது

*1980*இல் spring theory இல் புதிய பரிமாணம் ஏற்பட்டது அதாவது ஒவ்வொரு துணிக்கைக்கும் எதிரான சமச்சீரான மாற்றுத்துணிக்கை உண்டு என்ற கோட்பாடு உருவாக்கப்பட்டது.

*1995*இல் spring theory இல் இருந்து M Theory இல் உருவாக்கப்பட்டது இதில் ஏற்கனவே வகைப்படுத்தப்பட்ட 05 வகையான spring மாறிவரும் ஒரே நிலையில் வெவ்வேறு அவத்தைகளென பொதுமைப்படுத்தபடபட்டுள்ளன.

இதனால் இன்று அகிலத்தின் இயல்பை Theory of Everything E 8 Model மூலம் விளக்க முடிகின்றது இதில் எமக்கு தெரிந்த கணியங்களாக நீளம், அகலம், உயரம் காலம் என்ற நான்கு பரிமாணங்களுடன் தற்போது ஈர்ப்பு விசையும் இணைந்துள்ளது. இவற்றை விட எமக்கு புலப்படாத பரிமாணங்களும் சேர்ந்து 10 பரிமாணத்தில் அகிலத்தின் தன்மை உள்ளதாக வடிவமைந்து உள்ளனர். இதன் வடிவம் நுண்ணிழைகள் அமைப்பில் உள்ளது.

இறுதியாக Stephen Hawking அவர்களது ஆய்வு பின்வருவனவற்றை உள்ளடங்கியது

(01) multiverse theory பல்பிரபஞ்சக்கோட்பாடு

(02) infinite number of Big Bangs (முடிவில் பிரபஞ்ச உற்பவம்) பல் பிரபஞ்ச உற்பவங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அகிலத்தை உருவாக்குகின்றது

(03) விண்வெளியில் இருந்து எமது அகிலத்தின் கதிர்வீச்சுக்களை அளவிடலாம் என்பது பற்றி

(04) எமது பிரபஞ்சத்தில் நட்சத்திரங்கள் சக்தியை இழக்கும் போது எதிர் காலத்தில் பிரபஞ்சம் இருளடைந்து விடும் என்பனவற்றைப்பற்றியுள்ளன.

இறுதியாக இம்மாதம் 4ம் திகதி பிரபஞ்ச உற்பவத்திற்கு (Big Bang) இற்கு முன்பான நிலை தொடர்பாக, (பிரபஞ்சத்தின் ஆரம்பத்திற்கு முன்னான நிலை தொடர்பாக), பிரபஞ்ச பௌதீக காரணிகளை எதிர்வு கூறியிருந்தார்.

Stephen Hawking இன் ஐந்து எதிர்வுகூறல்கள்:

(01) Artificial Intelligence செயற்கையான மதிநுட்பம்/கணினிகளின் முன்னேற்றம் மனிதனுக்கு ஆபத்தானவையாக மாறலாம். அதாவது மானிட நேயத்திற்கு தீங்காகலாம் மனித மூளையைக் கைப்பற்றி அதனைவிட வேகமாகச் செயற்படலாம் செயற்கை மதிநுட்பம் மனித மதிநுட்பத்திற்கு உதவுவதாக அமையலாம். மனித மதிநுட்பத்தை அழிக்கலாம் அல்லத மனித மதிநுட்பத்தைப் புறந்தள்ளலாம்.


(02) Meeting Aliens வேற்றுக்கிரக வாசிகளின் சந்திப்பு ஆபத்தாக முடியலாம்.

(03) அண்மைக்காலத்தில் வேற்றுக்கிரக வாசிகளை எதிர்கொள்ளச் சாத்தியமில்லை எமது பிரபஞ்சத்தில் 100பில்லியன் உடுத்தொகுதிகள் உள்ளன.

(04) இன்னும் 1000 அல்லது 10.000 வருடங்களுக்குப்பின் மனிதன் ஏனைய உடுத்தொகுதியில் உள்ள கிரகங்களிற்கு குடிபெயரவேண்டிய அவசியம் உள்ளது

(05) கால நிலை மாற்றம் பூமியை வெகுவாகப் பாதிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஸ்டீஃபன் ஹாக்கிங்

தொகுப்பு: தனயன்

***யார் இந்த ஸ்டீபன் ஹாக்கிங்***

1942 ஜனவரி 8-ம் தேதி இங்கிலாந்தில் உள்ள ஆக்ஸ்ஃபோர்டில் பிறந்தவர் ஸ்டீஃபன் ஹாக்கிங். 1959ல் இயற்கை அறிவியல் படிக்க இவருக்கு ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் இடம் கிடைத்தது. பிறகு கேம்பிரிட்ஜில் பட்டமேற் படிப்பு சேர்ந்தார்.

படிப்படியாக உடல் இயக்கத்தை முடக்கும் 'மோட்டார் நியூரோன் நோய்' எனப்படும் அரிய நோய் இவருக்கு இருப்பது 1963ல் கண்டு பிடிக்கப்பட்டது. அது முதல் படிப்படியாக இவரது உடல் இயக்கம் முடங்கிவந்தது. இப்போது ஏறத்தாழ இவரது மொத்த உடலும் முடங்கிப் போயுள்ளது.

1974-ம் ஆண்டு விண்வெளியில் உள்ள கருந்துளைகள் கதிரியக்கத்தை வெளியிடுவதைப் பற்றிய ஒரு கோட்பாட்டை வெளியிட்டார் இவர்.

1988ம் ஆண்டு இவர் எழுதி வெளியிட்ட 'ஏ பிரிஃப் ஹிஸ்ட்ரி ஆஃப் டைம்' (காலம் பற்றிய சுருக்க மான வரலாறு) என்ற நூல் 1 கோடி பிரதிகள் விற்பனையாகியுள்ளது.

இவரது வாழ்க்கை 'எல்லாவற்றையும் பற்றிய கோட்பாடு' (த தியரி ஆஃப் எவரிதிங்) என்ற பெயரில் 2014ல் திரைப்படமாக எடுக்கப்பட்டது.

**இயற்பியலாளர் ஸ்டீஃபன் ஹாக்கிங் 76 வயதில் மரணம் எய்தினார்,**

இயற்பியல் விஞ்ஞானி ஸ்டீஃபன் ஹாக்கிங், தனது 76ஆவது வயதில் மரணமடைந்தார் என அவரது குடும்பத்தினர் தெரிவித்திருந்தனர்.

***சில நாள்களில் 20 லட்சம் முறை பார்க்கப்பட்ட ஹாக்கிங்கின் பி.எச்டி. ஆய்வேடு***

புகழ் பெற்ற இயற்பியல் (பௌதிகவியல்) அறிஞர் ஸ்டீஃபன் ஹாக்கிங் 1966-ம் ஆண்டு செய்த பி.எச்டி. ஆய்வேடு, இணையத்தில் இலவசமாக வெளியிடப் பட்ட சில நாள்களில் சுமார் 20 லட்சம் முறை பார்க்கப்பட்டு சாதனை படைத்துள்ளது.

'விரிவடையும் பேரண்டத்தின் பண்புகள்' என்ற தலைப்பிலான இந்த ஆய்வு 133 பக்கம் கொண்டது. கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் டிரினிடி ஹால் கல்லூரியில் தமது 24-வது வயதில் இந்த ஆய்வினைச் செய்தார் ஹாக்கிங்.

இதுவரை கட்டணம் செலுத்தி மட்டுமே படிக்க முடியும் என்றிருந்த இந்த ஆய்வேட்டினை, கடந்த அக்டோபர் மாதம் முதல் இலவசமாகப் படிக்கும் வகையில் தங்கள் இணைய தளத்தில் வெளியிட்டது கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம்.

***செயலிழந்த இணைய தளம்***

உடனே கேம்பிரிட்ஜ் தளத்தினை பெருமளவில் மொய்க்கத் தொடங்கினார்கள் இயற்பியல் ஆர்வலர் கள். அதிகம் பேர் இந்த ஆய்வேட்டினை ஒரே நேரத்தில் படிக்க வந்த காரணத்தால் கேம்பிரிட்ஜ் இணைய தளமே திணறி செயலிழக்கும் நிலைக்குப் போனது.

இந்த ஆய்வு இலவசமாக வெளியான சில நாள்களில் உலகம் முழுவதிலும் இருந்து 8 லட்சம் பேர் மொத்தம் 20 லட்சம் முறை இந்த ஆய்வேட்டை இணையத்தில் புரட்டிப் பார்த்துள்ளனர். இது தவிர, 5 லட்சம் பேர் இதைத் தரவிறக்கம் செய்ய முயற்சித் துள்ளனர்.

"எங்கள் பல்கலைக்கழகத்தின் 'அப்பல்லோ தொகுப் பில்' உள்ள கட்டுரைகளிலேயே அதிகம் படிக் கப்பட்டது இந்த ஆய்வேடுதான்," என்று கூறியுள் ளார் இப்பல்கலைக்கழகத்தின் அறிவுசார் தகவல் தொடர்புத் துறைக்கான துணைத் தலைவர் டாக்டர் ஸ்மித்.

எந்த ஆய்வுத் தொகுப்பிலும் அதிகம் படிக்கப்பட்டது இந்த ஆய்வுதான் என்று கணிப்பதாகவும், இதைப் போன்ற எண்ணிக்கை யில் ஆய்வேடு ஒன்று படிக்கப்பட்டதை எப்போதும் பார்த்ததில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இதற்கு அடுத்தபடியாக, அதிகம் படிக்கப்பட்ட பி.எச்டி. ஆய்வேடுகள் பட்டியலில் இரண்டாமி டத்தில் உள்ள கட்டுரை, வெறும் 7,960 முறைதான் தரவிறக்கம் செய்யப்பட்டுள்ளது.

இலவசம் என அறிவிக்கப்படும் முன்பு இந்த ஆய்வேட்டைப் படிக்கவோ, ஸ்கேன் செய்துகொள் ளவோ 65 பவுண்டு பணம் செலுத்தவேண்டும். தற்போது ஹாக்கிங் தமது ஆய்வை படிப்பதை இலவசமாக்கியுள்ளதைப் போல கேம்பிரிட்ஜின் மற்ற முன்னாள் கல்வியாளர்களும் தங்கள் ஆய்வை இலவசமாகத் தருவதை ஊக்குவிக்க முடியும் என கேம்பிரிட்ஜ் நம்புகிறது.

"அறிவைப் பூட்டி வைப்பதால் யாருக்கும் பயனில்லை," என்று கூறியுள்ளார் டாக்டர் ஸ்மித்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்டீஃபன் ஹாக்கிங்கின் கருத்துகள் புகழ்பெற்றவை.**

பிரபல இயற்பியல் விஞ்ஞானி ஸ்டீஃபன் ஹாக்கிங், தனது 76-ஆவது வயதில் மரணமடைந்தார். பிரிட்டனை சேர்ந்த இவர், 'கருந்துளை மற்றும் சார்பியல்' சார்ந்த ஆராய்ச்சிகளுக்கு புகழ்பெற்றவர்.

விஞ்ஞானத் துறையில் ஆய்வு செய்ய கோடிக்கணக்கான இளைஞர்களுக்கு உத்வேகம் அளிப்பவராக இருந்தார் அவர். கடவுளின் இருப்பு, பூமியில் வாழும் மனிதர்களின் முடிவு மற்றும் வேற்று கிரக மனிதர்களின் (ஏலியன்களின்) இருப்பு போன்ற முக்கியமான விடயங்களின் மீது விஞ்ஞானத்தின் கோணத்தில் இருந்து அவர்கள் சொன்ன கருத்துகள் வித்தியாசமானவை.

இதுபோன்ற கடுமையான கருத்துகளுக்காக மத அமைப்புகளிலிருந்து கடுமையான எதிர்ப்பை எதிர்கொண்டார் ஹாக்கிங்.

'தி கிராண்ட் டிசைன்' என்ற புத்தகத்தில் ஸ்டீஃபன் ஹாக்கிங் கடவுளின் இருப்பை நிராகரித்தார்.

**கடவுள் பற்றி ஸ்டீஃபன் ஹாக்கிங்கின் கருத்து என்ன?**

ஒரு புதிய கிரகத்தை கண்டுபிடிப்பதைப்பற்றி பேசும்போது, நமது சூரிய மண்டலத்தின் சமன்பாடு மற்றும் கடவுளின் இருப்பு பற்றி கேள்வி எழுப்பினார்.

நமது சூரியனை சுற்றாமல் வேறொரு சூரியனை சுற்றிக்கொண்டிருந்த ஒரு புதிய கிரகம் 1992ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

ஒரு உதாரணத்துடன் புதிய கண்டுபிடிப்பு பற்றி ஹாக்கிங் கூறியது இதுதான்: "ஒரு சூரியன், பூமி மற்றும் இந்த இரண்டிற்கும் இடையிலான தூரம், சூரியனின் நிறை என நமது சூரிய மண்டலத்தின் வானியல் கூட்டமைப்பு தற்செயலானது என்பதையே இந்த கண்டுபிடிப்பு உணர்த்துகிறது. மனிதர்களை மகிழ்விப்பதற்காக பூமி கிரகம் மிகவும் கவனமாக இருந்ததை நம்புவதற்கு தேவையான ஆதாரங்கள் போதுமானதாக இல்லை."

பிரபஞ்சம் உருவாவதற்கு காரணம் ஈர்ப்புவிசை விதியே என்று அவர் திடமாக தெரிவித்தார்.

ஹாக்கிங் கூறுகிறார், "ஈர்ப்பு விதிகளின் காரணமாக பிரபஞ்சம் சுயமாகவே பூஜ்ஜியத்திலிருந்து மீண்டும் ஒருமுறை தொடங்கலாம். நமது இருப்புக்கும், பிரபஞ்சத்தின் இயக்கத்திற்கும் பொறுப்பு திடீரென்று நிகழும் வானியல் நிகழ்வுகள்தான், இதற்கு கடவுளின் அவசியம் தேவையில்லை."

ஸ்டீஃபன் ஹாக்கிங்கின் இந்த கருத்துக்கு கிறித்துவ மத குருக்களிடம் இருந்து கடுமையான எதிர்ப்பு எழுந்தது.

பிரிட்டனை சேர்ந்த இவர், 'கருந்துளை (Black Holes) மற்றும் சார்பியல்' (Relativity) சார்ந்த பணிகளுக்கு புகழ்பெற்றவர்.

'எ ஃப்ரீஃப் ஹிஸ்டிரி ஆஃப் டைம்'( A Brief History of Time) என்ற புத்தகம் உட்பட பல புகழ்பெற்ற அறிவியல் புத்தகங்களையும் இவர் எழுதியுள்ளார்

"எங்களது அன்புமிக்க தந்தை இறந்துவிட்டார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம்" என அவரது குடும்பத்தினர் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தன்னுடைய 22ஆம் வயதில், மூளை மற்றும் நரம்புகளை பாதிக்கும் 'மோட்டார் நியூரான் நோய்' என்னும் அரிய நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என தெரிய வந்தது மேலும் அந்த நோயால் அவர் சில நாட்களே உயிருடன் வாழ்வார் என்றும் கூறினர்.

அந்த நோயால் அவர் சக்கர நாற்காலியை பயன்படுத்தும் நிலை ஏற்பட்டது; மேலும் அவர் பேச முடியாத நிலைக்கும் போனார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திற்கு அருகில் இருக்கும் அவரது இல்லத்தில் அவரின் உயிர் அமைதியாக பிரிந்தது என அவரின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

அவரின் பிள்ளைகளாகிய லூசி, ராபட் மற்றும் டிம், "ஸ்டீஃபன் ஹாக்கிங் ஒரு மிகப்பெரிய விஞ்ஞானி மேலும் அவரின் பணிகள் ஆண்டாண்டு காலம் நிலைத்திருக்கும்" என தெரிவித்துள்ளனர்

அவரின் மன தைரியம் மற்றும் உறுதியை புகழ்ந்த அவரின் பிள்ளைகள், அவரின் புத்திசாலித்தனமும், நகைச்சுவை உணர்வும் உலகளவில் அனைவரையும் ஈர்த்துள்ளது என்றும் தெரிவித்தனர்.

**ஸ்டீஃபன் ஹாக்கிங்: கோட்பாடுகள் மூலமாக நவீன அறிவியலுக்கு திசைவழி காட்டியவர்**

**எனக்கு மரணம் குறித்த அச்சம் இல்லை. அதற்காக விரைவாக இறந்து போக வேண்டும் என்றில்லை. நான் முடிக்க வேண்டிய பணிகள் அதிகம் உள்ளன என்று ஒரு முறை கூறினார் ஸ்டீஃபன் ஹாக்கிங். அந்த அனைத்து பணிகளையும் முடித்துவிட்டாரா என்று தெரியவில்லை. 76 வயதில் இந்த பூவுலகை விட்டு சென்றிருக்கிறார் ஹாக்கிங்.**

ஹாக்கிங் இறப்பு குறித்து சில விஞ்ஞானிகளின் கருத்துக்கள் வருமாறு... அவர்கள், இயற்பியலை அனைவரும் புரிந்து கொள்ளும்படி விளக்கியவர் ஹாக்கிங் என்கிறார்கள்.

*'சமகால ஐன்ஸ்டீன்'*

சமகாலத்தில் நம்முடன் வாழ்ந்த ஐன்ஸ்டீனை இழந்திருக்கிறோம் என்கிறார் சென்னை பிர்லா கோளரங்கத்தின் இயக்குநர் அய்யம்பெருமாள்.

"கருந்துளை விரிவடைகிறது என்ற கருத்து இருந்த நிலையில், 'இல்லை' கருந்துளை சுருங்குகிறது என்ற கோட்பாட்டை முன்வைத்து நிறுவியவர் ஸ்டீஃபன். பெருவெடிப்பு கோட்பாட்டை அவரை விட யாராலும் எளிமையாக விளக்க முடியாது. அண்டவியல் ஆராய்ச்சியில் அவரின் பங்கு மகத்தானது." என்கிறார் அய்யம்பெருமாள்.

*திசைவழி காட்டியவர்'*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹாக்கிங் மரணம் அறிவியல் உலகுக்கு பேரிழப்பு என்கிறார் இளம் அறிவியலாளர் ரிஃபாத்.

ரிஃபாத், "இன்றைய தலைமுறைக்கு அறிவியல் குறித்து உத்வேகம் அளிப்பவராக இருந்தார். இளம் விஞ்ஞானிகள் யாரிடம் வேண்டுமானாலும் பேசி பாருங்கள். அவர்கள் நிச்சயம் ஹாக்கிங்கால் ஈர்க்கவும், தூண்டவும் பட்டிருப்பார்கள்."

"கோட்பாடு அறிவியலை விளக்குவது கடினம். ஆனால், ஹாக்கிங் அதனை அனைவரும் புரிந்து கொள்ளும்படி விளக்கினார். தனது கோட்பாடுகள் மூலம் இயற்பியல் துறைக்கு வெளிச்சமும், நவீன அறிவியலுக்கு திசைவழியும் காட்டியவர் அவர். நரம்பு தொடர்பான நோயினால் சிறுவயதிலேயே பாதிக்கப்பட்ட போதும், அதனையெல்லாம் கடந்து அவர் தொட்ட உச்சம், அனைத்து காலத்துக்குமான பாடம் " என்கிறார் ரிஃபாத்.

**'உந்து சக்தி'**

ஹாக்கிங், கலிலீயோ இறந்த நாளில் பிறந்து, ஐன்ஸ்டீன் பிறந்த நாளில் இறந்திருக்கிறார். வாழ்வு மட்டும் அல்ல ஹாக்கிங் இறப்பும் அறிவியல் சுற்றியே இருந்திருக்கிறது என்கிறார் கல்வியாளரும் அறிவியல் குறித்து தொடர்ந்து எழுதி வருபவருமான ஆயிஷா இரா. நடராஜன்.

"கருந்துளை கோட்பாடு, வேறு கோள்களில் உயிரினம் இருக்கிறதா என்ற ஆய்வு, பெரு வெடிப்பு கோட்பாடு என்று சமகாலத்தின் அனைத்து முக்கிய ஆராய்ச்சிகளிலும் இவரது பங்கு இருந்திருக்கிறது. தான் அறிந்த அறிவியலை பிறருக்கு கடத்துவதிலும் மிக தெளிவாக இருந்தார் 'தி பிரீஃப் ஹிஸ்டரி ஆஃப் டைம்', 'தி கிராண்ட் டிசைன்' என்று தொடர்ந்து எழுதிக் கொண்டு இருந்தார்"என்கிறார் நடராஜன்

மேலும் அவர், "அறிவியலை நேர்மறையாக அணுகி, நம்பிக்கை அளித்ததில் அவரது பங்கு மகத்துவமானது. அவரது கணித கோட்பாடுகள் ஆராய்ச்சியாளர்கள் அனைவருக்கும் வழிகாட்டும். அதுமட்டுமல்ல, அண்டவியல் ஆராய்ச்சியையும், குவாண்டம் இயற்பியலையும் ஒற்றை புள்ளியில் கொண்டு வந்து நிறுத்தியவர்."என்று விவரிக்கிறார் நடராஜன்.

அறிவியலை கடந்து அவரது அரசியல் புரிதல் தெளிவானது. மாற்று திறனாளிகளுக்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்து வந்திருக்கிறார் அவர்.

கடவுள் குறித்து ஸ்டீஃபன் ஹாக்கிங் கூறியது என்ன?

**ஸ்டீஃபன் ஹாக்கிங் கடவுளைப் பற்றி சொன்னது என்ன? விஞ்ஞானத்தின் பார்வையில் கடவுள் இருக்கிறாரா? ஏலியன்களின் இருப்பு பற்றிய ஹாக்கிங் ஏலியன்கள் பற்றி சொன்னது என்ன?**

பிரபஞ்சத்தின் வேறு கிரகங்களில் ஏலியன்கள் இருப்பதாக கூறிய ஸ்டீபன் ஹாக்கிங், அதுபற்றி எச்சரிக்கையும் விடுத்தார்.

'பிரபஞ்சத்தில் வாழ்வு' தனது புகழ்பெற்ற உரையில், மனிதர்களும், ஏலியன்களும் எதிர்காலத்தில் சந்திப்பார்களா என்பது பற்றிய தனது கருத்தை ஹாக்கிங் கூறியிருந்தார்.

இந்த மாபெரும் இயற்பியல் விஞ்ஞானி கூறுகிறார், "பூமியில் மனிதர்கள் உருவான காலம் நேரம் சரி என்றால், பிரபஞ்சத்தில் பூமி போன்ற வேறு பல நட்சத்திரங்கள் இருக்க வேண்டும், அவற்றில் பல பூமி உருவாவதற்கு ஐந்து பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே உருவாகியிருக்கும்."

"அப்போது, விண்மண்டலத்தில் உயிரியல் வாழ்வு ஏன் நமக்கு புலப்படவில்லை? வேற்று கிரகங்களில் வசிக்கும் யாரும் ஏன் இதுவரை பூமிக்கு வரவில்லை, பூமியை கைப்பற்ற முயற்சிகள் ஏன் மேற்கொள்ளப்படவில்லை? பறக்கும் தட்டுகளில் (Unidentified flying object, UFO) களில் வேற்று கிரகவாசிகள் இருப்பதாக என்னால் நம்பமுடியவில்லை. பூமி, வேற்று கிரகவாசிகளுக்கும் முற்றிலும் திறந்திருப்பதாகவே நான் நினைக்கிறேன், இது அநேகமாக நமக்கு நன்மையளிக்கூடியதாக இருக்காது" என்று அவர் தெரிவித்தார்.

"பிரபஞ்சத்தில் உயிரினங்களின் இருப்பை ஆராய்வதற்காக, "சேடி" (search for extra-terrestrial intelligence (SETI)) என்ற திட்டம் முதலில் செயல்பட்டது. இதன்படி, ஏலியன்களிடம் இருந்து செய்திகளை பெறுவதற்கு வசதியாக ரேடியோ அலைகள் ஸ்கேன் செய்யப்பட்டன. இந்தத் திட்டத்தை நாம் முன்னெடுத்து சென்றிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். பணத் தட்டுப்பாட்டின் காரணமாக இந்தத் திட்டம் நிறுத்தப் பட்டுவிட்டது."

"ஆனால், இந்த முறையில் பெறும் எந்த செய்திகளுக்கும் பதிலளிக்கும்போது நாம் கவனமாக இருக்க வேண்டும், அறிவியலில் இன்னும் சற்று முன்னேற்றம் அடையும்வரை காத்திருக்க வேண்டும், தற்போது இருக்கும் நிலையில் நாம் ஏலியன்களை சந்திப்பது என்பது, அமெரிக்காவின் பூர்வ குடிமக்கள் மற்றும் கொலம்பஸ் இடையிலான சந்திப்பின் நவீன வடிவமாக இருக்கும். கொலம்பஸை சந்தித்த செவ்விந்தியர்களுக்கு நன்மை எதுவும் ஏற்பட்டதாக எனக்குத் தோன்றவில்லை" என்று அவர் தெரிவித்தார்.

**மனிதர்களிடம் இருப்பது வெறும் 100 ஆண்டுகளே**

ஸ்டீஃபன் ஹாக்கிங் பூமியில் மனிதகுலத்தின் எதிர்காலம் பற்றி ஒரு ஆச்சரியமான விடயத்தை அறிவித்தார்.

"மனிதர்கள் பூமியில் இருந்து வெளியேறி, மற்றொரு கிரகத்தை சொந்தமாக்கிக் கொள்ளவேண்டும் என்று நினைக்கிறேன், மனிதகுலத்தை காப்பாற்ற வேண்டுமானால் இந்த பூமியில் இருந்து அடுத்த 100 வருடங்களில் வெளியேற மனிதர்கள் தயாராக வேண்டும்" என்று ஸ்டீஃபன் ஹாக்கிங் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாரோடு நோவேன்

பிரசன்னா

காலையிருள் முற்றாகக் கலையாத நேரம்.

வழமைபோல முற்றத்தைப் பெருக்கிக் குப்பைகளை ஒதுக்கிக் கொண்டிருந்தபோது, பக்கத்து வீட்டிலிருந்து அலறல் சத்தம் கேட்டது.

குசினிக்குள் அலுவலாயிருந்த மனைவியும் பரபரத்துப்போய் என்னிடம் ஓடிவந்து நின்றாள். என்ன எதுவென்று அறியாத பதட்டம் எங்களைப் பற்றிக் கொண்டது.

நின்று நிதானித்துவிட்டுச் சேட்டை மாட்டிக் கொண்டு வருவதற்குள் அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் யூலியாயாவின் வீட்டில் கூடியிருந்தனர். கேட்ட குரலுக்கு அனுதாபப்பட்டு உதவிக்காக ஓடிவந்தவர்கள் போக, எதிலும் ஒட்டாமல் தூர நின்று விடுப்புப் பாக்க வந்தவர்கள் அதிகமிருந்தனர்.

படுக்கை அறையை எட்டிப்பார்த்தபோது வித்தியாசமான வாடை முகத்தில் குப்பென்று அடித்தது. கீழே நிலத்தில் போத்தலொன்று சரிந்தபடி கிடந்தது. பக்கத்தில் மூடி வீசப்பட்டிருந்தது.

நிலைமை தெட்டெனப் புரிந்தது. யூலியாவைப் பார்த்ததும் ஒருகணம் பிரக்ஞையற்றுப் போய் நின்றேன்.

யூலியா... யூலியா... என அலறியபடியிருந்தான் சிவா.

யூலியா நிலத்தில் வளர்த்தப்பட்டிருந்தாள். மிஞ்சிமிஞ்சிப் போனாலும் முப்பது வயதுக்கு மேலிருக்காது. வாட்ட சாட்டமான ஆகிருதி அவளுக்கு. இளந் தளிரின் தளதளப்பும் பொலிவும் கொண்ட அவள் விறைத்துக் கிடந்தாள். உடல் நீலம் பாரித்துக் கிடந்தது. நெஞ்சுக்கூடு சிறிது விம்பித் தணிந்தபடியிருந்தது. உணர்வடங்கிப் போயிருந்தவளைப் பார்த்து சிவா அழுதுகொண்டிருந்தான். பக்கத்தில் பிள்ளைகள் இரண்டும் நிலைமை புரியாது அவனது கால்களைப் பற்றியபடி ஏம்பவித்து நின்றனர். யூலியாவின் தாய் திரேசா ஐயோ... ஐயோ... எனத் தலையிலும் மார்பிலும் அடித்தபடி மயங்கிக் கிடந்தவளின் நெஞ்சினை நீவிக் கொண்டிருந்தாள்.

பயம் என்னையும் தொற்றிக்கொண்டது. உடன் செயற்பட வேண்டிய உந்துதல் என்னுள் மேலிட, ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல ஏற்பாட்டில் இறங்கினேன்.

இதற்குள் கணேசுவின் ஓட்டோ கேற்றடியில் வந்துநின்றது. அங்கிருந்தவர்களின் ஒத்தாசையுடன் யூலியாயை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல உதவினேன்.

★★★

வீட்டுக்கு வந்து முகம் கழுவி உடை மாற்றிக்கொண்டு பெரியாஸ்பத்திரிக்கு விரைந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் ஒருநிலைப்படாமல் தவித்தபடி இருந்தது.

மோட்டார் சைக்கிளை தரிப்பிடத்தில் நிறுத்திவிட்டுப் பார்த்தபோது, வெளியே முக மறிந்த அயலவர்கள் சிலர் கூடியிருந்தனர். கவலை தோய்ந்த முகங்களுடன் கூடிப் பேசியபடி நின்றனர்.

நான் வாசலைத் தாண்டி உள்ளே போன போது, வெளி நோயாளர் பிரிவில் போடப் பட்டிருந்த வாங்கில்களில் யூலியாவின் உறவினர் அமர்ந்திருந்தனர்.

யூலியாவின் அம்மா திரேசா அழுதபடி இருந்தாள். அவளது பருத்த உடல் குலுங்கிய படி இருந்தது. அருகே திரேசாவை அணைத் தபடி தங்கை பிலோமினா அமர்ந்திருந்தாள். அவளிலும் பயமும் பதட்டமும் தெரிந்தது.

தவிர, அயவர் எனச் சைக்கிள் கடை யோகன், மெக்கானிக் குமார், புரோக்கர் இரத்தினம், பெயின்ரர் ரூபன், ஓட்டோ கணேஸ், கூடவே நானும் இணைந்து கொண் டேன்.

யூலியாவின் கணவன் சிவாவும் சந்திர னும் உள்ளே போயிருப்பதாகக் கூறினார்கள். யூலியாவை அவசர சிகிச்சைப் பிரிவில் அனு மதித்துள்ளதாகவும் தகவல் அறிந்தேன்.

ஒருத்தரோடு ஒருத்தர் பேசாமல் பயப் பிராந்தியுடன் உள்ளிருந்து வரும் செய்திக் காகக் காத்திருக்கும் அந்தக் கணங்கள் என்னை வதைப்பதாக இருந்தது.

அடிக்கொரு தடவை உள்ளேயிருந்து வரு வோரை ஏக்கத்துடன் பார்ப்பதும், அறிந்த முகமானால் ஓடிச்சென்று என்னவாம் என்று கேட்பதிலும் கரிசனை காட்டியபடி நின்றிருந் தனர்.

திரேசா இடையிடையே வாங்கிலில் தலையை மோதிக்கொண்டு பிலாக்கணம் வைத்தபடி இருந்தாள்.

அந்தக் கணங்கள் சூழலை மிகவும் பர பரப்பாக்கி சோகத்தை உண்டு பண்ணியது.

ஒருமணிநேரம் கழிய சிவாவும் சந்திர னும் வெளியே வந்தனர். சிவாவின் கண்கள் கொவ்வைப்பழமாய்ச் சிவந்திருந்தது. முகம் இருளடர்ந்திருந்த அந்தச் சூழலில் அவனை நேர்கொண்டபோது என் மனம் துவண்டு போனது.

சிவா என்னருகில் வந்து இப்படி அவச ரப்பட்டுவிட்டாளே என்று விக்கித்தபடி நின்றான். அவனை நெஞ்சுடன் அணைத்து ஆறுதல் படுத்த முயன்றேன்.

யூலியா கண்களை விழித்துப் பார்த்துத் தண்ணீர் கேட்டதாகக் கூறினான்.

மதியவேளை ஏழாம் வாட்டில் வந்து பார்வையிடலாமெனத் தாதியர் கூறியதாக வும் கூறினான். அச்செய்தி கூடியிருந்தவர் களுக்குத் தெம்பினைத் தந்தது. என்னையும் ஆசுவாசுப்படுத்தியது.

திரேசாவும் எழுந்திருந்து சேலைத் தலைப் பினால் கண்களைத் துடைத்துத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

★★★

எனது வீட்டுக்குப் பக்கத்து மாமர வளவினை வாங்கி, அதற்குள் குறுகிய காலத்திற்குள் புதிதாக வீட்டினையும் கட்டி தடல்புடலான வாழ்க்கையை ஆரம்பித்தது சிவாவின் குடும்பம். கடல் கடந்த ஏதோ வொரு தீவுப் பகுதியிலிருந்து அவர்கள் வந்ததாக அயலில் பேசிக்கொண்டார்கள்.

ஆடம்பரமான வீடு, வாகனம், கழுத்து நிறையக் கலகலத்த நகைகள் என வசதி யான வாழ்க்கை அயலவர்களை மலைக்க வைத்தது. ஆரம்பத்தில் யூலியாவின் குடும் பத்துடன் ஒட்டியும் ஒட்டாமலும் பழகி னோம். நாளடைவில் அவளது இங்கிதமான போக்கினால் நெருக்கம் ஏற்பட்டு விட்டது. அவளது கணவன் சிவாவிடம் இருந்த ஓட்டோவும் அவ்வப்போது எழுகின்ற தேவைகளுக்கு உதவியது. ஆஸ்பத்திரிக் கிளினிக்குக்குப் போய் வர, பேரப்பிள்ளை களைப் பாடசாலைக்கு ஏற்றியிறக்க, நன்மை தீமைகளுக்குப் பிரசன்னம் கொடுக்க எனப் பல வகையில் அவன் அனுசர ணையாக இருந்திருக்கிறான். பணம் வசூ லிப்பதிலும் நியாயமாகவே நடந்து கொண் டான். இதைவிடப் பெரிய ஆறுதல் மனைவி சுகயீனமுறுகின்ற வேளைகளில் அவளுக்கு ஒத்தாசையாக யூலியா இருந்திருக் கிறாள். குறிப்பறிந்து பழகுகின்ற சுபாவம் அவளுக்குரியது. அது எங்களையும் ஆட் கொண்டுவிட்டது.

இந்தச் சம்பவம் திடீரெனச் சம்பவித்த போதிலும் ஜீரணிக்க முடியாமல் எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சை வருடிக்கொண்டிருந்தது. அவளுடன் பழகிய வகையில் தன்னை மாய்த்துக் கொள்ளுமளவுக்குப் புத்தி பேதலித்தவளல்ல. அந்தளவுக்குத் தன்னைத் துணிச் சல்காரியாகக் காட்டிக் கொண்டவளுமல்ல. விரக்தியின் விளிம்பில் இருப்பவளாகத் தன்னை இறுதி வரை வெளிப்படுத்தியவளுமல்ல. கலகலப் பாகப் பழகிவருபவள்.

என்னதான் தலைபோகிற காரியமானாலும் இப்படியொரு முடிவை அவள் எடுத்திருக்கக் கூடா தென என் மனம் எண்ணிக் கொண்டது.

★★★

சமீப நாட்களாக அக்குடும்பம் பற்றி அயலில் அரசல்புரசலாகப் பல கதைகள் பரவியது. அது எங்கள் காதுகளுக்கும் எட்டி யது. யூலியாவின் குடும்பம் கடன் சுமையில் தலைமுழுகிவிட்டதாக அக்கம் பக்கத்திலுள்ள வர்கள் கதைகளைக் காவித் திரிந்தனர். கணவன் மனைவிக்கிடையில் இரவு வேளை களில் வாய்த்தர்க்கம் முற்றி கைகலப்பில் முடிகிறதையும் பார்க்க நேர்கிறது. சிவாவும் குடிப்பழக்கத்துக்கு ஆளாகிவிட்டான். இருவ ருக்கும் எதிலுமே ஒத்துப் போகவில்லை. சிவா தனது ஊதாரித்தனத்தினால் கடன் சுமைக்குள் தள்ளிவிட்டான் என்பது யூலியா வின் குற்றச்சாட்டு. சிவாவின் பேராசை அவளுக்கு ஆறா அவலத்தைப் பரிசாகக் கொடுத்திருக் கிறது. சிவா மீற்றர் வட்டிக்குப் பணம் எடுத்து யார்யாருடனோ கொடுக்கல் வாங்கல் செய்து ஏமாந்து போனதாகவும், ஓட்டோ முதல் யூலியாவின் கழுத்தில் கல கலத்த நகைகள் விற்றுத் தீர்ந்து விட்ட தாகவும், இறுதியில் வீடு வளவு கூட ஈட்டில் இருப்ப தாகவும் அயலவர் வந்து கூறிச் சென்றார்கள். நுகர்வுக் கலாசாரம் என்ற மாய மானை நம்பிக் கெட்டு நடுத்தெருவுக்கு வந்து விட அவர்கள் மீது பச்சாதாபம் ஏற்பட்டது.

யூலியாவும் நிர்ப்பந்தத்தால் நிதி நிறுவ னங்களிடம் நுண்கடனைப் பெற்று வட்டிக்கு மேல் வட்டி கட்டி அலுத்துப்போனாள். தினமும் அவள் வீடு தேடி பலர் வந்து போனார்கள். விதவிதமான மோட்டார் சைக் கிள்களில் கழுத்துப்பட்டியுடன் கனவான்கள் புதிதாக வந்து போனார்கள். யூலியாயும் சிலவேளைகளில் தலை மறைவாகியும் விடு கிறாள். ஓரிரு வாரங்களாக எங்கள் வீட் டுக்கு வருவதையும் நிறுத்திவிட்டாள். அவ ளது நடத்தை ஒரு மாதிரி என்றும் அயலில் பேசத் தலைப்பட்டுவிட்டனர். அவளும் தன்னை ஒறுத்துக் கொண்டாள். முன்னர் போல யாருடனும் கலகலப்பாகப் பேசுவ தில்லை. தினமும் குடித்துவிட்டுவரும் சிவா எதையாவது காரணம் காட்டி அவளுக்கு அடிக்கவும் செய்வான். யூலியாவின் அழு குரல் கேட்டு என்மனம் பதைத்திருக்கிறது. ஓரிரு தடவை சிவாவிடம் பேசப்போய் அவமானப் பட்டுத் திரும்பியிருக்கிறேன். அவளாலும் எத்தனை நாள்தான் அவனுடன் சகித்துப் போவது.

★★★

மூன்று நாட்களாக ஆஸ்பத்திரியில் இருந்தவளை ஓரிரு தடவை போய்ப் பார்த்தேன். உணர்வு திரும்பி என்னுடன் ஓரிரு வார்த்தைகள் பேசியது இனிமேல் பிழைத்துவிடுவாள் என்ற நம்பிக்கையைத் துளிர்க்க வைத்தது. தினமும் அவளைப் பார்த்துவிட்டு வருபவர்களும் அதையே வலுப் படுத்தினர்.

தொடர்ந்தும் நிலைமை நீடிக்க, அவள் தேறிவருவதாகத் தகவல் தந்தவர்கள் மூன் றாம் நாள் திடீரென யூலியா இறந்து விட்டதாகச் சொன்னார்கள். அந்தத் துயரச் செய்தி அயலெங்கும் பரவ யூலியாவின் வீட்டில் சனம் கூடி விட்டது. அவளது உடல் வரும்வரை காத்திருந்தார்கள். இந்த இடை நேரத்துள் அவள் தன்னை மாய்த்துக் கொண்டதற்கான காரணங்களைப் பலவாறு அலசிக்கொண்டார்கள். தத்தமது நியாயங் களை நிறுவ பிரயத்தனம் செய்துகொண்டி ருந்தார்கள்.


சிவாவின் பேராசை பிடித்த குணம், வேறு பெண்களுடனான தொடர்புகள், ஆடம்பர வாழ்வின் மீதான அவா, மீற்றர் வட்டிக்குப் பணம் கொடுத்து ஏமாந்தது, குடிப்பழக்கத்துக்கு அடிமையானது, யூலியா வின் நடத்தை கெட்டதனம் எனப் பலவற் றைக் கற்பிதம் செய்தபடியிருந்தனர்.

இச்சம்பாசனைகள் எதிலும் என்மனம் ஒட்டிக் கொள்ளவில்லை. அவர்களால் பகி ரப் பட்டவை வெறும் அம்புகளாக எனக் குள் வலுவிழந்து நின்றன. ஆனாலும் யூலி யாவின் மீது இன்னும் கழிவிரக்கம் கொண் டேன். நிஜத்தில் அவளொரு அப்பாவி. அவளுக்கென்று ஒரு முகமே இல்லாமலாக் கப்பட்டுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி

## அமரர் எஸ்.திருக்கேஸ்வரன்



புத்தூர் கலைமதி கிராம சத்தியாகிரக போராட்டத்தில் அமரர் எஸ். திருக்கேஸ்வரன் உரையாற்றும்போது..

சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தியாலயத்தில் அதிபராக கடமைபுரிந்த அமரர் எஸ் திருக்கேஸ்வரன் கலை இலக்கிய ஈடுபாடு நிரம்பப்பெற்றவராகவும் சமூக செயற்பாட்டாளராகவும் திகழ்ந்தவர். தொண்ணூறுகளில் இடம்பெயர்வு புலம்பெயர்வு துயரங்களை எழுத்தாக்கங்களாக படைத்து தனது படைப்பாற்றலை வெளிப்படுத்தியிருந்தமையோடு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நாடகம் தனி நடிப்பு ஆற்றலை வெளிப்படுத்தி அசத்தியவர்.

தாயகம் இதழின் நீண்டகால வாசகராகவும் பங்காளராகவும் திகழ்ந்த இவரது சிறுகதையான வீடுதேடி சிறுகதை தாயகம் இதழில் பிரசுரமானது. தனது சொந்த கிராமத்து பாடசாலையையும் கிராம மாணாக்கரையும் உயர்த்தும் நோக்கோடு கடமைபுரிந்த அமரரின் இழப்பு ஈடுசெய்ய முடியாத இழப்பாக குடும்பதவரையும் மக்களையும் மாணவரையும் துயரில் ஆழ்த்துவதாக உள்ளது.

புத்தூர் கலைமதிக் கிராம மக்கள் மக்கள் குடியிருப்புப் பகுதியிலிருந்து மயானங்களை அகற்றக்கோரும் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஒருநாள் கலந்து கொண்டு உரையாற்றி மக்கள் போராட்டத்திற்கு வலுச்சேர்த்தார்.

பேரிடம்பெயர்வின்பின் பொதுச் செயற்பாடுகளிலிருந்து பலரும் ஒதுங்கிப்போகும் சூழலில் சமூகச்செயற்பாடுகளில் இளைஞர்களை வழிப்படுத்தும் வகையில் காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் தலைவராக பொறுப்பேற்று திறம்பட செயலாற்றி தேசிய கலை இலக்கியப் பேரவையின் செயற்பாடுகளுக்கும் உறுதுணையாக திகழ்ந்த அமரருக்கு தாயகம் தனது இறுதி அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கின்றது.

கடன் உதவி என்ற பேரில் ஆசை காட்டி அப்பாவிகளின் அற்ப சேமிப்புக்களையும் உறிஞ்சி பலியெடுக்கும் நிதி நிறுவனங்கள் தான் யூலியாவின் உயிரையும் காவுகொண்டு, குடும்பத்தை நிர்க்கதி யாக்கியிருக்கிறது. மூலைக்கு மூலை முகாமிட்டு மக்களை ஏய்த்துப்பிழைக்கும் நிதி நிறுவனங்கள் மீதான வெறுப்பு என்னுள் கிளர்ந்தெழ உண்மைநிலையைக் கூடியிருந்தவர்களுக்குக் கூறிக் கொண்டிருந்த போது, கேற்றடியில் யூலியாவின் உடலைச் சுமந்து வந்த வாகனத்தின் சத்தம் கேட்டது.

முற்றத்தில் கூடியிருந்தவர்கள் பரபரப்புடன் வெளியே விரைந்தார்கள்.

தகுதிக்குமேல் செலவு செய்பவன் தன் உயிரை முடித்துக் கொள்ளக் கயிறு திரிக்கிறான் என்ற பழமொழி நினைவுக்கு வந்தது. கூடவே யூலியாவின் அப்பாவித்தனமான முகமும் மனதை ஆக்கிரமித்து நின்றது.

★★★

உழைப்பு என்பது மனிதனும் இயற்கையும் இணைந்து பங்கேற்கிற ஒரு இயக்கம் காரல் மார்க்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காற்றில் எழுந்த கவிதைகள்

**தாயகன்**

"பூவாசம் அறியாத
எம் பிஞ்சு பிள்ளைகள்
பிணப் புகையை
சுவாசிப்பதா"

முற்றத்தில் அமைந்த மயானத்தின் காற்று சுமந்து வரும் பிணப்புகைக்குள் தமது சந்ததியின் வாழ்வை தொடர்ந்தும் புதைத்து விட விரும்பாத ஒரு தாயின் எழுச்சிக் கவிதையின் சில வரிகள் இவை. தமது வாழ்க்கைச் சூழலை மட்டுமல்ல மனித நடத்தைகளால் பாதிக்கப்படும் புவிச்சூழலை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எழுகின்ற கவிதைகள் இவை. வடபுலத்தில் அமைந்திருக்கும் பல மயானங்களுக்கு உறவினரின் தகனக் கிரிகைகளுக்காகச் சென்று வருபவர்கள் கண்டும் காணாது விடும் காட்சிகளின் பின்னால் எழுகின்ற மக்களின் உணர்வுகளின் வெளிப்பாடுகள் இவை. இதுபோன்ற மக்களின் பிரச்சினைகளுக்கு எழுத்தில் இடம் கொடுத்தாலே தீட்டு, துடக்கு என்று கருதும் அறிவுலகமும். "அது அவர்கள்", "அது அவர்கள் தலைவிதி" என்று எண்ண வைக்கும் பழமைவாத சாதி, மத, பண்பாட்டு ஆதிக்கக் கருத்தியல் திணிப்புக்களும் இருப்பதனாலேயே இதுபோன்ற மக்களின் துயர்களும் இழப்புக்களும் இம்மண்ணில் தொடர்கின்றன.

இக்கருத்தியல் தடைகளையும் மீறி சூழலிய விழிப்புணர்வுடன் மக்கள் வாழ்விடங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள மயானங்களை அகற்றக் கோரி நடைபெற்ற வெகுஜனப்பேராட்டங்களில் பங்கு கொண்டவர்களின் உணர்வுந்தல்களே கவிதைகளாக உருவாகியுள்ளன. அதிலும் இப்போராட்டக் களத்தில் நின்ற பெரும் எண்ணிக்கையான ஆண்களும் பெண்களும் கைதாகி சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் அறுபத்தெட்டு நாட்களுக்கு மேல் கவனயீர்ப்பு சத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெற்றது. அப்போராட்டத்தில் பெரும் எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொண்டதுடன், அதற்கு தமது ஆதரவை தெரிவிக்கும் வகையில் சமூக நலச் செயற்பாட்டாளர்கள், கலை இலக்கியப் படைப்பாளிகள், சூழலிய ஆர்வலர்கள், அரசியல் தலைவர்கள் என நாட்டின் பல பாகங்களிலும் இருந்து அங்கு வந்து கலந்து கொண்டனர்.

இக்கவனயீர்ப்புச் சத்தியாக் கிரகத்தில் கலந்துகொண்ட பெரும் எண்ணிக்கையான மக்கள் முன் கருத்துரைகள், நாடக ஆற்றுகைகள், குறுந்திரைப்படங்கள் என பலநிகழ்வுகள் நடந்தன. அவற்றுள் அரங்கக் கவிதைகளாக படிக்கப்பட்ட கவிதைகளே இங்கு நூல் வடிவில் வெளி வந்துள்ளன. இவை வெகுஜனப் போராட்டத்தில் மக்களோடு மக்களாக கலந்து கொண்ட இளம் கவிஞர்களின் கவிதைகளாகும். இங்கு படைப்பாளிகள் மக்கள் என்ற இடைவெளி மறைந்து, மக்களும் படைப்பாளிகளும் ஒன்றாகி விடும் மக்கள் கலை இலக்கியத்துக்கான களம் உருவாகின்றது. உழைக்கும் மக்களுக்கான கலை இலக்கியம் உழைக்கும் மக்களிடம் இருந்து விடுதலைக்கான தத்துவத் தெளிவுடனும், அழகியல் நிறைவுடனும் தோன்றும் போதுதான் மக்கள் இலக்கியமாக அவை மலரும். இக்கவிதைகள் கூட உருவாகிய களத்தின் தன்மைக்கு ஏற்ப நயத்தலுக்கான கவிதைகளாக மட்டுமன்றி, விழிப்புணர்வு, ஐக்கியம், செயற்பாடு என்பவற்றை தூண்டும் உணர்வூக்கிகளாகவும் உள்ளன. கள அரங்கில் படிக்கப்பட்ட கவிதை என்பதால் சில கவிதைகளில் கோபக்குரல்கள் வெளிப்படுகின்றன.

அதுபோன்றே பொருள் பொதிந்த கவிதைகள் பல இவறில் உண்டு. எடுத்துக்காட்டாக சில கவிதை வரிகளைக் குறிப்பிடலாம். கிரமத்தின் ஐக்கியத்தையும், உயர்ந்த இலக்கையும் குறிப்பதாக வரும் கவிதை வரிகள் இவை

"தனித்திருந்த மூங்கிற் தடிகளை
ஒன்றாக்கி ஓடம் அமைத்தோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு கவிதைகள்

1.
தன்
நான்கு குழந்தைக்குமான
புத்தாடைகளுக்காக
தெருவில் விரிந்த அங்காடிக்கடைகளின்
ஏளன கூவல்களிடையே ஏறி
இறங்கி
'புத்தாடை பொதியோடு' "அப்பாடா"என்று வீடுவந்து சேர்ந்த போதுதான்
அம்மா எழுந்துவந்து கதவைத்திறந்தாள்.
அவன் குழந்தையாக
இருந்தபோது
எத்தனையோ தீபாவளிகளை இப்படித்தான்
கடந்திருக்கிறாள்.
தன் பிள்ளை
நாட்கூலியாவான் என அவள் நினைத்தாளா என்ன..

2.

காற்றுக்கு காத்திருந்த
களைத்தவனின் முகத்தைக்
கடந்து போயிருந்தது
காலத்தின் கொலைவாள்.
அந்த தேர்தல் முடிந்திருந்தது.

வே. தினகரன்
பத்தனை

எம் வெற்றி நோக்கி

பயணத்தை தொடர்கிறோம்

பல எதிர்பார்ப்புக்களுடன்.."

வெகுஜனப் போராட்டத்தில் திரண்டெழுந்து சிறைக்குச் சென்று மீண்ட பெண்களின் உணர்வுகளை வெளிப் படுத்தும் கவிதையாக கு. ஜெனிற்றாவின் "விழித் தெழுந்த கலைமதிப் பெண்கள்" எனும் கவிதை உள்ளது.

"அகப்பை மாத்திரம் ஏந்தி சமயலறையில்

முடங்கிக் கிடக்கும் பெண்கள் இல்லை நாம்

பதாகை ஏந்தி நீதிக்காய் குரல் கொடுக்கும்

பாரதியின் புதுமைப் பெண்கள் நாம்"

எனும் கவிதை வரிகள் வெறும் கவிதையாக அன்றி செயல்பூர்வமாகவே அமைகின்றன.

முற்றத்து மயானக் காற்றால் பாதிக்கப்படுபவரின் கவிதை வரிகளாக

"சுதந்திரக் காற்றை

சுவாசிக்க முயன்றபோது

பிணக்காற்றை எமக்கு

பரிசாய் தருகிறீர்களே"

என வரும் கவிதை வரிகள் விடுதலை உணர்வின் இலக்குகள் விரியவேண்டிய அவசியத்தை சுட்டி நிற்கின்றன.

"தர்மத்தின் வாழ்வுதனை சூது கௌவும்

தர்மம் மறுபடி வெல்லும்"

என்ற பாரதியின் கவிதை வரிகளின் ஒரு நூற்றாண்டின் பின்னரான அனுபவத்தையும் கருத்தில் ஏற்று

"ஜனநாயக வாழ்வுதனை

பணநாயகம் கௌவும்

மறுபடியும் புதிதாய்

ஜனநாயகம் வெல்லும்"

என வரும் வி. எம். சிவானந்தத்தின் கவிதை வரிகள் நம்பிக்கை தருகிறது. ருஷ்யப் புரட்சியின் நூற்றாண்டு நினைவு நிகழ்வுகளை நாம் முன்னெடுக்கும் காலத்தில் ஒரு கிராமத்தின் உழைக்கும் மக்களின் எழுச்சிக் குரலாக இக்கவிதை நூல் வெளிவருவது மேலும் சிறப்பானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெடுவாசல்

க. சிவகரன்

அப்பாவின் முகமும் சாரங்கனின் முகமும் மாறி மாறித் தோன்றியது.

அப்பாவின் படத்தை அம்மா வைத்து நெடுக நெடுகப் பார்க்கும் பொழுது இவளும் பார்ப்பதுண்டு.

இளமையில் அவளின் ஒன்பது அகவையில் அப்பாவை அடிக்கடி பார்த்ததே கிடையாது.

எப்போதாவது ஓடி வருவார். அவசர அவசரமாகச் சாப்பிடுவார். அவளை அள்ளி அணைத்து முத்தமிடக் கூட நேரம் கிடைப்பதில்லை.

அப்பாவின் பரிசம் அவர்பற்றிய சிறு வயது ஞாபகங்களில் மட்டும் ஓர் உணர்வாக அவளிடம் இப்பொழுதும் அதற்காக ஏங்கும் வாஞ்சையில் மட்டும் ஒட்டிக் கொண்டிருக்கின்றது.

எப்பொழுதும் வேலை, வேலை என ஓடும் அவரினால் ஓடாத வாகனங்கள் எல்லாம் ஓடியதாய் அம்மா பெருமையாகப் பேசியது அவளிற்கு ஞாபகம்.

இரவு முழுவதும் கனவும் தூக்கமுமாக மாறி மாறிக் காட்சிகள் தோன்றி அவளை அலைக்கழித்தன.

கனவிடை அம்மாவும் அப்பாவும் பேசிச் சிரித்துக் கொண்டிருப்பதும், அந்த அப்பாவின் சிரிப்பில் சாரங்கனின் அசைவையும் அவள் கண்டாள்.

அப்பாவின் சுருண்ட முடிகள் உயர்ந்த மூக்கு சிறிய கண்கள் உயர்ந்த கழுத்து இவற்றையெல்லாம் உரித்துப் படைத்திருந்தால் மட்டும் போதாதா. கனவில் அவர் சிரிப்பின உதட்டசைவும் பல்வரியும் கூட சாரங்கனிடம் நிஜத்தில் அவள் கண்ட பொழுதுகளை எண்ணி, எண்ணி புரண்டு, புரண்டு படுத்திருந்தாள்.

என்னடி மூஞ்சை வீங்கிப்போய் கிடக்கு. என அம்மா காலையிலே கேட்ட பொழுது, சும்மா, சளியாய் கிடக்கு எனச்சும்மா கூறினாள். பின் கனவிடையும் நனவிடையும் தோய்ந்து கிடந்த கதையை அம்மாவிடம் கூற முடியுமா?

அம்மாவிடம் முகத்தை மறைக்கத்தான் முற்பட்டாள். ஆனால் அம்மா எதேச்சையாகப் பார்த்த பொழுதே கண்டுவிட்டாள். அம்மாவிடம் எதையும் மறைக்க முடியாது என்பது அவளிற்குத் தெரியும். சாரங்கனிடம் அடிக்கடி வாங்கிக் கொண்ட புன்னகைகள் அனைத்தும் அவள் மனதில் பூத்துக் குலுங்கி காய்ப்பதற்கு காத்திருக்கும் வேளையில்தான் நேற்றவனைக் கண்ட இடத்தில் சட்டென்று திடுகிட்டு, அவன்மேல் தன் பார்வை படவிடாமல் அறுத்து வேறு திசை பார்த்து அவனைக் கடந்து வந்து சேர்ந்த பின்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அப்பாவின் சிரிப்பின் சாடைகளில் ஒட்டு ஒட்டி நின்று இராக்குழியின் வேதனை களில் அவளைத் தள்ளிவிட்டிருந்தான்.

படிப்பதற்கு எவ்வளவோ விடயங்கள் இருக்கிறது. இன்னும் ஆறு மாதங்களில் பரீட்சை அவள் நினைவுகளை அறுத்தெறிந்து மனதைக் கல்லாக்கி புத்தகத்தை எடுத்து பக்கங்களைப் புரட்டிய பொழுதும் எழுத்து களின் கருமை நிறம் அவன் நிறத்தை காட்டி அவளைப் பார்த்துச் சிரித்தும் பல் இளித்தது. பக்கங்களைப் புரட்டி புரட்டி அதை மறைக்கலானாள்.

அப்பாவின் நினைவுகளில் அம்மா ஒன்பது வருடங்களை கடந்துவிட்டாள். அப் பாவின் மேல் அம்மா கொண்ட பிரியத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது என்பதை அப்பா இல்லாத பின்நாளில்தான் இவள் கண்டுகொண்டாள். இவள் சிறுபிள்ளையாக இருக்கும்பொழுது அப்பா எப்போதும் தோன்றி மறைவதையே இவள் கண்டுள் ளாள். அப்பா இல்லாத பல இரவுகளில் அம்மா இவளை அணைத்துக் கொண்டு படுத்திருக்கும் வேளைகளில் அநேகமாக துப் பாக்கி ஓசைகளே தூரத்தே கேட்டுத் தாலாட் டாய் ஒலிக்கும். இடையிடையே ஓங்கி ஒலித்து தவிழும் எறிகணைகள் ஓசை அம்மா வின் கண்களை ஆறாக உடைத்து விடும். இவளும் குடங்கிக்கொண்டு அம்மாவின் மடிச்சூட்டில் உறங்கிப்போவாள். காலை யிலே அப்பாவும் சூரியனும் வந்திருப்பது இவளிற்கு ஆனந்தமாய் இருக்கும். அம்மா கோபம் மறந்து இவள் போலக் குழந்தை யாகி அப்பாவுடன் பேசிச் சிரிப்பதை பார்த்து ஓடிப்போய் முற்றத்துப் பூச்செடியில் பூப்பறித்து பிள்ளையார் படத்தின் முன் வைத்துக் கும்பிடுவாள். முருகன் படத்தை அவள் நிமிர்ந்தும் பார்ப்பதில்லை. இரு கரையும் பெண்களுடன் நிற்கும் காட்சி அவளிற்குப் பிடிப்பதில்லை.

அப்பா பகல்வேளைகளில் வீட்டில் நின் றால் அம்மா சுவையாகச் சமைப்பாள். அந் நாட்களில் சமைத்த அவள் கை பக்குவத்திற் பாதிதானும் இன்நாளில் கூடிவருவதில்லை. அம்மா, சமைக்கின்ற பொழுது சில வேளைகளில் அடுப்புப் புகையிடையே கண்கலங்குறாளா அல்லது அப்பாவின் நினைவுகளில் விழி கலங்குகிறாளா என்பது தெரியாது. இவள் மௌனமாய் இருந்த நாட்கள் உண்டு. அப்பாவின் நினைவுகளில் அவள் அடுக்களையில் கிடக்கும் உப்பாகிப் போய் இருந்தாள். எப்போதும் கசிவாள். இந்த நினைவுக் கொடுமைகளில் இருந்து மரணத்தால் மட்டும் தான் அவளிற்கு விடுதலை கிடைக்கும் என்பது சுதாவிற்கு நன்கு தெரியும். ஆனாலும் அம்மா ஏதோ வாழப் பழகிவிட்டாள். தொண்ணூறாயிரம் பேரில் ஒருத்தியாக. ஒரு பால்மாட்டின் சொந்தக்காரியாக. தையல் இயந்திரத்தின் சடசடப்பின் நீட்சியாக, உலகில் நடப்ப வற்றை அறிந்தும் அறியாதவளாக. அதில் கலந்தும் கலவாதவளாக. எப்பொழுதும் ஓர் பேதைப் பெண்ணாக. ஆனால் நல்ல தாயாக வாழப்பழகிவிட்டாள்.

அம்மாவின் கண்டிப்புகள் சுதாவிற்குப் பிடிக்கும். அம்மா மெல்ல மெல்ல வாழ்க் கையைப் பிடித்துக்கொண்டு வெளியே வரு கின்றாள் என்பதுபோல் அந்த வார்த்தைகளில் அர்த்தத்தை இவள் தேடுவாள். சிலவேளை களில் அம்மா. இறுகக்கட்டிப் பிடித்து முத்த மிடும் பொழுது அப்பாவின் உருவத்தில் அவள் பாதி இவள் பாதியாகி இல்லாத உறவொன்று இடையே சிலிர்க்கும். அப்போ இவள் கண்கள் பனிக்கும்.

இன்று சனிக்கிழமை. பொங்கலுக்கு முதல்நாள் சுதாவிற்கு தனியார் வகுப்புகள் இன்றில்லை. படிப்பதற்கு நிறைய விடயங் கள் கிடந்தன. முன்விறாந்தையில் கிடந்த மேசையின் முன் இருந்துதான் புத்தக்களைப் புரட்டுகின்றாள். பாரதியின் குயில் பாட்டிற் கூவிய குயில் போலும் குயில் ஒன்று வந்திருந்து கூவும். அயலில் இருக்கும் வேப்பமரத்தைப் பார்க்கின்றாள். அது தன் கிளைகளை உழவர்க்குப் பசளையாகக் கொடுத்துவிட்டு வசந்தகாலத்தை பார்த்து தவம் கிடக்கின்றது. குயிலும் எங்கோ பறந்து போயிருக்க வேண்டும்.

அடுக்களையில் அம்மா கத்தரிக்காய் பொரிக்கின்றாள். சுதாவிற்காய் அவள் வீட்டில் இருக்கும்பொழுது அம்மா ஏதாவது கைப்பக்குவம் பார்ப்பது வழக்கம்தான். அநேகமாக நல்லெண்ணெய்யில் பொரித்த கத்தரிக்காய்ப் பொரியலுடன் இன்று பிட்டுக் கொடுப்பாள் போலும். கத்தரிக்காய் சற்று கருகி மணக்கின்றது. அதன் வாசம் பரவி சுதாவின் நினைவும் கலக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று சனிக்கிழமை என்றால் நேற்று வெள்ளிக்கிழமைதானே. நேற்று மாலைதான் அவள் சாரங்கனை சில நாட்களின் பின் கண்டாள். அவள் அவனை கடைக்கண்ணாற் பார்த்தாள். அவள் பார்க்கவில்லை. முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு ஏதோ பெரிய கடும் வேலை போலத் தீவிரமாய் நின்றான். உள்ளூராட்சி மன்றத் தேர்தற் சுவரொட்டிகளை மதிலில் ஒட்டிக்கொண்டிருந்தான். அந்த வட்டாரத்தில் போட்டியிடும் ஒன்பது கூட்டங்களில் ஒன்றின் சுவரொட்டி. இவன் தொண்டன். இவனுடன் இன்னும் சிலர். படித்துவிட்டுச் சும்மா இருப்பவர்கள். அப்பாவைப் போல இவனும் கூட்டத்தோடு அவள் திடுக்கிட்டாள்.

இவன் மூக்குமுழி எல்லாம் அப்பாவைப் போல இருப்பதனால்தான் இவள் பார்வை அவன்மேல் எதேச்சையாக அவளையும் மீறிப் பாய்வதுண்டு. பார்வைகள் பட்டால் தீப்பற்றிக்கொள்ள என்ன தீப்பெட்டியா வேண்டும். இவள் அகன்ற விழிகளில் ஒட்டியுள்ள ஈரமும் தீரமும் எந்த ஆடவனையும் அடித்துவிழுத்தி விடும் பாவம் பயல் சுருண்டுபோனான். அவள் பார்வை ஒன்றிற்காய் மட்டும் ஏங்கும் பாவியானான். அவள் போகும் பாதைகளில் தாவும் மந்தியானான். அவனைப் பார்த்த விழிகளைக் கொண்டு அம்மாவை பார்ப்பதற்கு இவள் கூசினாள். அம்மாவிடம் விழி களை அடிக்கடி ஒழிக்கலானாள்.

அம்மாவின் விழிகளுக்குள் மட்டும் விழுந்து கிடந்த அப்பாவை பிரித்துக் கொண்டு போனவர்கள் யார் என்பது சுதாவிற்குத் தெரியும். அவர்கள் அடிக்கடி அங்க வாகனம் ஓடவில்லை. இங்க வாகனம் ஓடவில்லை என்று கூட்டிப் போவார்கள். அப்பாவும் மறுக்கமுடியாது போவார். அப்பா பின்நாட்களில் அதிகப் பிரிந்துபோய் விட்டார். நீண்ட நாட்களின் பின் செல் ஓசையிடை அம்மாவின் அழுகையிடை நிறைய வேலை கிடக்கு என்று போனவர் தான்.

ஓடாத, ஓட்டங்கள் ஓடி உலைந்தலைந்து மீண்டும் வீடுவந்து சேர்ந்த பொழுதும் அப்பா இல்லை. எப்போதாவது வருவார் வருவார் என அம்மா ஆரம்பத்தில் நெடுக, நெடுக வாசலையே பார்த்துக் கிடப்பாள். நிமிர்ந்து பார்த்தாள் வாசற்கதவு மூடிக் கிடக்கின்றது.

எடி தேத்தண்ணி ஆறிப்போச்சு. என்ன செய்கின்றாய் என்ற அம்மாவின் குரலில் திடுக்கிட்டாள். ஓடிப்போய் எடுத்துவந்தாள். ஆறிப்போனாலும் குடித்தாள்.

கடந்த இரண்டுமூன்று நாட்களாக சில குழுக்கள் மாலைகருகும் வேளைகளில் துண்டுப் பிரசுரத்துடன் வந்தார்கள். அம்மா அவர்களிடம் முழிப்பதில்லை. இவள்தான் பிரசுரங்களை வாங்குவாள். அப்பாவை இவர்கள் எல்லோரும் சேர்ந்துதான் தொலைத்தார்கள் என அம்மா எண்ணுகின்றாள் போலும். அவர்களிடம் விழித்தால் அப்பாவின் நினைவுகளைக்கூட தங்களின் தேவைக்காகப் பறித்துக் கொண்டு போய் விடுவார்கள் என்று அம்மா பயந்திருக்கவும் கூடும். அவளிற்கும் அவர்களைப் பார்க்கப் பிடிப் பதில்லை. அவர்கள் கண்முன்னேயே பிரசு ரங்களை கிழித்தெறிந்து ஓவென்று அழ வேண்டும் போலிருக்கும் மனதை அடக்கிக் கொண்டிருப்பாள்.

நேரம் பத்துமணி, வாசற் கதவிடையே ஒரு கூட்டம் கதவைத் திறந்து உள்ளே வருகின்றது. கூட்டத்தில் அவனும் அவன் தான் சாரங்கன். முற்றத்தை அடைந்து கூட்டம் நின்றது. பின்னால் நின்று பளிச் பளிச் என மின்னல் போல் அவளைப் பார்த்து கண்களால் வெட்டுகின்றான். அவள் ஈர விழிகளில் மட்டும் அவை பட்டுத் தெறிக்கவில்லை. ஓடிப்போய் வேட்டியுடன் நின்ற மொத்தமானவரிடம் பிரசுரத்தை வாங்கினாள். யாருடைய முகத்தையும் பார்க்க வில்லை. அம்மா வெளியே எட்டிப் பார்க்க முன்னமே அவர்கள் போய்விட வேண்டுமென்று அவசரம் காட்டினாள். அவர்களும் திரும்பிப் போயினர்.

அம்மா நெடுக, நெடுகப் பார்த்திருந்த வாசற்கதவை அவர்கள் மீளவும் மூடாது திறந்துவிட்டே சென்றார்கள். அவள் வெறுமையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள், நேரே குச்சொழுங்கை. அப்பாலே வீதி நீண்ட நெடுவாசல் அவள் கண்களில் தெரிகின்றது.

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறை(த்) தாய்

த. ஜெயசீலன்

ஒருவேளை முக்குருத்தில் ஒன்றே
வளர்ந்துயர்ந்து
இருநூறு கோடிசேர்த்து
எக்கடனும் அடைத்திருக்கும்....
ஏன் அதற்குள் மரணத்தை இவைக்கும்
பரிசளித்தாய்?
"துணைக்கு நின்றாலும் பிணைக்கு
நில்லாதே"
எனும்வேதப் பொருளறியா தின்று
குடும்பத்தைக்
காவு கொடுத்தாய்!
கவிந்த கடன் மழைக்காய்
ஏன் ஏதும் அறியா
இளமைகளைப் பலியிட்டாய்?
தூக்கிய சுமையிறக்க முடியா
வலி திரண்டு
தாக்க ...
அதிலிருந்து தப்ப வழி அற்று ....அதோடு
மோதாது.... தனைமாய்த்து தப்பினான்
முன்
நின்....கணவன்!
நீசுமக்க முடியாது திண்டாடி,
கடன் தந்தோர்
கோபம் குறைக்க உதவியின்றி,
இவ்விடர்த் தீ
தாண்டச் சா வழிதான் சரியென்றாய்!
ஐந்தகவும்
எட்டாத மூன்று இளமை களிலும்...ஊர்
திட்டமிட்டு இச்சுமையை திணிக்கும்
எனப்பயந்தா....
கட்டாயம் அவர் வாழ்வு சீரழியும்
எனநினைந்தா....
அவர்களுக்கும் சாவவ அருளினாய்?
'கடன்', 'பொறுப்பு'
என்னவெனப் புரியாத,
'உம் தவறை ' உணராத ,
கவிதைகள்....
பால்வாசம் கடக்கா

கொழுகொழென்று
பூத்த புதுமலர்கள் ....
புதிரான மரணத்தை
நேற்று தகப்பனின் 'நித்திரையில்'
மட்டுந்தான்
பார்த்தவைகள்....
சாவின் சுவையைப் பழகாத
பாலகர்கள்....
விரும்பும் ஐஸ் க்ரீமை
கசக்கிறது
வேணாம் எனஒதுக்க வீம்புக்கு
பருக்கிவிட்டு
துடிதுடித்து ஒருவயது, மூன்று, பின் நான்கு.
வயதுத் தளிர்கள் வதங்க
கண்டு இடியாது
மீதி ஐஸ் க்ரீமை விழுங்கி உயிர் துறந்தாய்!
கேட்ட கணமிருந்து
தலை கிறுகிறுக்க, நெஞ்சம்
ஏற்கா இக் 'கூட்டுத் தற்கொலை'யின்
கொடுமைவாட்ட,
சீரணிக்க முடியா இச் செய்தி உறுத்த, மனம்
வாடுகிறேன்!
இத்தனை வலியை வழங்கியோர்கள்;
நம்பவைத்து கழுத்தறுத்து
நட்புக்கு துரோகமிட்டு
தம் இலாபம் பார்த்தவர்கள்;
"தடையற்ற பெருவாழ்வை
எங்கோ ருசித்துளாராம் இப்பாவப் பணத்தாலே"
என்றால்....அவர்களென்ன அறம் செய்தார் ?
கேட்கின்றேன்!
'இவை ' செய்த பழிபாவம் என்ன?
விதித் தீர்ப்பு,
கடவுளது தண்டிப்பு, நீதி எங்கு தேடுகிறேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரோகரா



வனஜா நடராஜன்

"கமலம், கமலம்" மணியத்தார் இரு முறை தன் மனைவியை அழைத்துப் பார்த்தார். பதிலைக் காணோம். வீடு திறந்து கிடந்தது.

"என்ன பொம்பிளைகளப்பா, வீட்டை திறந்து விட்டிட்டு எங்கை கதை அளக்கப் போட்டாளோ? இந்த நேரத் திலை."

மணியத்தார் உரக்கவே புறுபுறுத்துக் கொண்டார். நேரே குசினிக்குள் சென்று ஒரு செம்புத் தண்ணீரை 'மடக்.. மடக்' என வாயில் ஊற்றிக் கொண் டார். நாக்கை வறட்டிய தாகம் தணிந் தது. மெல்ல வெளி விறாந்தைக்கு வந்தார்.

கமலம் வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு வருவதற்குச் சரியாக இருந்தது. மணியத்தா ருக்கு மனதில் பற்றிக் கொண்டு வந்தது.

"என்னப்பா, இந்த நேரத்திலை எங்கை கதை அளந்துபோட்டு வாறாய்?"

"என்ன எறிஞ்சு விழுகிறியள். உவள் நாக முத்துவுக்குக் காய்ச்சலாம். அதுதான் பாத்து விட்டுவாறன்."

"வீட்டைத் திறந்துவிட்டிட்டோ, காலம் கெட்ட நேரத்திலை."

"யாரப்பா இஞ்சை கள்ளன்?..."

"ஓ..ஓ... நான் வீட்டை திறந்துவிட்டால் கள்ளன். நீ வீட்டைத் திறந்துவிட்டால் கள்ளன் இல்லையோ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏனப்பா இண்டைக்கு என்னோடை பொருதிறியள்."

"நான் உன்னோடை பொருதவில்லை. சாத்திரியார் இண்டைக்கு இஞ்சை வாறாராம். பாலன்ரை சாத கத்தை எடுத்துவை. இரண்டு மணிபோலை வாறன் எண்டவர். நானும் உதிலை ஒருக்கால் போட்டு வாறன்" சொல்லிவிட்டுப் போய்விட்டார் மணியத் தார்.

மணியத்தாருக்கென்ன சொல்லிவிட்டுப் போய் விட் டார். இனிக் கமலத்துக்குத் தானே தவிப்பு. சாத்திரி யார் வரும்வரை, வந்து அவளுக்குச் சாதகமாய்ப் பலன் கணித்துச் சொல்லும் வரை அவளின் தவிப்பு சொல்லி அடங்காது.

கமலத்தின் வாழ்வு உலகத்துச் சாத்திரிமார் களின் வாய்மொழியில்தான். அப்படியானால் கமலம் தன்னப் பிக்கை குறைந்தவளோ? இல்லை, அவளுக்கு சாதகக் கணிப்பு முற்று முழுதான உண்மை என்ற குருட்டுத் தனமான நம்பிக்கைதான். கமலத்தின் பிரதான அலு வல்களில் ஒன்று அடிக்கடி சாதகபலன் பார்ப்பதும் அதற்குப் பரிகாரம் தேடுவதும் தான்.

பத்திரிகைகளோ, வாரமலர்களோ அவற்றி னில் கமலத்தின் கருத்தைக் கவர்வது சோதிட மலர்தான். அதனைத் தான் முதலில் கமலத் தின் மனமும் கண்ணும் பார்க்கும். பிறகு தான் நாட்டை உலுக்கும் போராட்டமோ, குண்டுவெடிப்போ. அப்படி ஒரு பிறவி கமலம்.

கமலத்திற்கு இந்தப் பழக்கம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. சிறு பிராய பருவம் தொட்டு ஏற்பட்டது. ஐந்தில் வளையாதது ஐம்பதில் என்ன வளையுமா? தொட்டதற்கெல்லாம் பலன் பார்ப்பாள். கொழும்பு செல்வதற்கு, நெல்லு வெட்டுவதற்கு என்று சிறிய அலு வல்களுக்கே பார்ப்பவள். முக்கிய அலுவல் களை விடுவாளோ?

கமலத்தை மணம் முடித்த தொடக்கத்தில் மணி யத்தார், கமலத்தின் இவ்வழக்கத்தை எள்ளி நகையா டுவார். கமலம் மசியாள். கமலத்தின் கெட்டித்தனம் என்னவென்றால், சாதகம், பேய், பூதம் என்பவற்றில் துளியும் நம்பிக்கை இல்லாத மணியத்தாரைத் தன் பக்கத்திற்கு இழுத்துக்கொண்டமைதான். இது கமலத் திற்குக் கிடைத்த வெற்றிதான்.

ஆனால் தன் ஏக புத்திரன் பாலனை இது விடயத்தில் தன் பக்கத்திற்கு இழுக்க முடியாமையில் கமலத் திற்குத் தோல்வி தான். இதனால் கமலத்தின் மனதில் குறை. தன் பக்கம் பாலனை இழுக்க முயற்சி செய்து கொண்டுதான் இருந்தாள் கமலம்.

பாலன் தாயின் விருப்பத்திற்கு மசிபவனல்லன். பாலன் சற்று வித்தியாசமானவன். கொள்கைப் பிடிப்பு உள்ளவன். முற்போக்கு வாதி. ஆரம்பத்தில் தாயுடன் இது விடயமாக வாதாடினான். பல னில்லை. பின்னர் தாயிடம் இது குறித்துக் கதைப்ப தில்லை. தாயின் இவ்வழக்கத்தை எண்ணி அவனால் சிரிக்கத்தான் முடிந்தது.

கமலத்தின் தற்போதைய பிரச்சனை இது தான். சோதிடமலர் ஒன்றில் சோதிட பலன் பார்த்தாள். அவள் மகன் பாலனின் கன்னி ராசிக்குப் பலன் மோசமாக இருந்தது. 'கன்னி ராசிக்கு ஏழரை நடுக் கூறு. சனி தோஷம் மாணவர்க்குக் கல்வி இடையில் குளம்பும்.' என்றிருந்தது அந்தப் புத்தகத்தில்.

கமலத்திற்கு இதயம் நூறில் அடித்துக் கொண்டது. ஏனெனில் பாலன் இந்த வரு டம் தான் உயர்தரப் பரீட்சை எடுக் கிறான். பரீட்சையும் நெருங்கிவிட்டது. எஞ்சினியர் படிப்புக்கு எடுபட்டு கம்பஸ் போவான். போகவேண்டும். இது கமலத்தின் கனவு. நம்பிக் கையும். பாலன் கெட்டிக்காரன் தான். அதில் சந்தேகத் திற்கு இடமில்லை. ஆனால் கமலம் பாலனைவிட, பாலனின் முயற்சியை விட சாதக பலனுக்கு முக்கிய பங்கு கொடுத்தாள்.

சோதிடமலரில் பலன் பார்த்ததில் இருந்து கமலம் மணியத்தாரிடம் நச்சரிக்கத் தொடங் கினாள். "இஞ்சா ருங்கோ, ஒருக்கால் எங்கடை சாத்திரியாரை வரச் சொல்லுங்கோ."

"அவர் கிளிநொச்சிக்குப் போட்டார். வந்ததும் சொல்றன்."

"என்னங்க எல்லாம் தடங்கல் தடங்கலாக் கிடக்குது."

கமலத்துடன் சேர்ந்து மணியத்தாரும் புலம்பினார். வேறு சாத்திரிமாரிடம் செல்லவும் அவர்களுக்கு மனம் இல்லை. எனவே தங்கள் சாத்திரியார் வரும் வரை காத்திருந் தனர்.

கிளிநொச்சியால் சாத்திரியார் வந்துவிட்டார் என்று கேள்விப்பட்டவுடன் மணியத்தார் அவரிடம் போய் விட்டார்.

"இன்றைக்கு எங்கடை பாலன்ரை குறிப்புப் பாக்க வேணும். ஒருக்கால் வீட்டுக்கு வாங்கோ சாத்திரியார்"

சாத்திரியாருக்குக் கமலத்தினதும் மணியத்தாரி னதும் குணம் நன்றாகத் தெரியும். இதுவிடயத்தில் பார்த்தும் பாராமலும் கொடுப்பார்கள். எனவே உடனடியாக ஒத்துக் கொண்டார்.

பாலன் பரீட்சைக்குப் படிப்பதற்காக தன் நண்பன் ரவி வீட்டுக்குச் சென்றிருந்தான். "பாலன் மத்தியானம் சாப்பிட வரும் பொழுது அவனை மறித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்திரியார் சொல்லுவதைக் கேட்கச்சொல்ல வேணும்." எண்ணிக் கொண்டு சமையலை விரைந்து முடிக்கும் நோக்குடன் சமையலில் ஈடுபட்டாள்.

மணியத்தார் தன் வெளி அலுவல் முடித்துக் கொண்டு நேரத்துடன் வந்துவிட்டார். கமலமும் தன் வேலை களை முடித்துவிட்டாள். சாத்திரியார் வரும் நேரமும் நெருங்கிவிட்டது. பாலனைத் தான் இன்னமும் காண வில்லை.

"என்னபிள்ளைகளப்பா, வாற நேரத்துக்கு வரானுகள்" கமலம் புறுபுறுத்தாள்.

"நீ ஏன் சும்மா குதிக்கிறாய், அவன் வந்திடுவான்" மணியத்தார் மனைவியைச் சமாதா னப்படுத்தினார்.

பாலன் கம்பஸ் எடுபட முடியாமல் அவனது கிரக பலன் தடுத்துவிடுமோ என்ற மன அழல் அவளை அலைக்கழித்தது. பாலனைப் பற்றி எத்தனை கற்பனை களை மனதில் உருப்போட்டு வைத்திருக்கிறாள். அத் தனையும் கானல் நீராகி விடுமா?

கமலத்தை அதிகநேரம் பாலன் சஞ்சலப்பட விட வில்லை. அவளின் சஞ்சலம் தீரும் வண்ணம் பாலன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

"வாடா, உனக்காகத்தான் காத்திருக்கிறோம்" கமலம்.

"என்னம்மா, என்ன நடந்தது." பாலனின் குரலில் சற்றுப் பதட்டம்.

"ஒன்றுமில்லையடா..." எனத் தொடங்கி மணியத்தார் மனைவிக்கு முழு விபரத்தையும் சொன்னார்.

"சாத்திரம், சாத்திரம். ஏனம்மா இப்படி மனதைப் போட்டு உடைக்கிறியள். படிக்கி றவன் கட்டாயம் கம்பஸ் எடுபடுவான். உங்களுக்குத் தெரியுமோ உதிலை... உங்க ளுக்கு எங்கை விளங்கப் போகுது." பாலன் கோபப்பட்டான்.

"நீ ஒன்றும் கதைக்கப்படாது. சாப்பிட்டுப் போட்டு கொஞ்சநேரம் இரு" கமலம் கட்டளை இட்டாள்.

"அம்மா, ரவி அங்கை படிப்பதற்கு எனக்காகக் காத்துக் கொண்டிருப்பான்." தாயிடம் விஷயத்தை விளக்கி னான்.

"கொஞ்சநேரம், ஒருநாளைக்குப் பொறுத்தால் ஒன்றும் குறைந்துபோகாது." கமலம் கண்டிப் பாகக் கூறினாள்.

இப்பொழுது பாலனுக்கு தாயை நினைக்கச் சிரிக்கத் தான் முடிந்தது. சாப்பாட்டை முடித் துக் கொண்டு நடப்பதைப் பார்ப்போம் என இருந்துவிட்டான் பாலன்.

கமலத்தின் பரபரப்பு அடங்கும் வண்ணம் சாத்திரி யாரும் வந்து சேர்ந்தார். கமலத்திற்கு நெஞ்சுக் கூட்டினுள் தண்ணீர் இல்லை. என்ன சொல்லித் தொலைக்கப் போகிறாரோ?

"வாங்கோ சாத்திரியார், உங்களைத் தான் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம்" என்றாள் கமலம்.

"பாலன்ரை குறிப்புத் தானே பார்க்க வேணும்."

"ஓமோம் சாத்திரியார்."

"ஓ இந்த முறை பரீட்சை எடுக்கிறான் என்ன?" என்றவாறே சாத்திரியார் கதிரையில் அமர்ந்தார்.

கமலம் ஏற்கனவே கரைத்து வைத்திருந்த எலும்பிச்சம் பழத் தண்ணியை எடுத்து வந்து கொடுத்தாள். தேநீரோ, குளிர்பானமோ குடிக்காமல் சாத்திரியார் தன் வேலையைத் தொடங் கமாட்டார். சாதகம் பார்த்து முடிந்ததன் பிற்பாடு தான் வெற்றிலை பாக்குப் போடுதல்- இது அவர் நடைமுறை.

கமலம், பாலனின் சாதகத்தை தன் குல தெய்வமான முருகனை மனதுக்குள் வேண் டுதல் செய்தவாறே சாத்திரியாரிடம் கொடுத் தாள்.

சாதகத்தைப் பெற்றுக்கொண்ட சாத்திரியார் தன் கணிப் பைத் தொடங்கினார்.

கூட்டிக் கழித்து கிரக பலன் எல்லாம் கணித்து முடிய அரைமணிநேரம் எடுத்தது சாத்திரியாருக்கு. கவிழ்ந் திருந்த தன் தலையை மெல்லச் சாத்திரியார் நிமிர்த் தினார். அவரையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த கமலம் அவர் சொல்லப் போகும் வார்த்தைக் காக...

இஞ்சைபார் கமலம் பாலனுக்கு ஏழரை நடுக் கூறு. சனியன் தன்ரை வேலையை செய்யாமல் விடாது. எப்பிடியும் படிப்பைக் குழப்பத்தான் பார்க்கும். ஒவ் வொரு சனியும் விரதம் பிடிக்கவேணும். என்றாலும் கொஞ்ச காலத்துக்கு போட்டு அலைக் கழிக்கத்தான் செய்யும். தாய் தகப்பன்ரை சொல் கேட்க மாட்டான். தான் நினைத்தது தான் சரி என்று நிற்பான். ஒரு மாதிரி அனுசரித்துப் போங்கோ. எதற்கும் எங்கடை முருகன் சக்தி வாய்ந்தவர். அவருக்கு ஒரு பெரிய நேர்த்தி வை. எல்லாம் சுலபமாக முடியும்." எனச் சிறு ஆறுதல் கூறினார்.

ஆழ் கடலில் தத்தளித்தவனுக்கு சிறு மரக் கட்டை கிடைத்தது போல கமலத்துக்குச் சிறு துரும்பு கிடைத்தது. "அதுதான் முருக னுக்கு நேர்த்தி வை" என்ற சாத்திரியாரின் வார்த்தைகள் அவ்வார்த்தை களைக் கமலம் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

"ஓமோம் சாத்திரியார் நான்தானே உதுக ளுக்கு பின்நிற்பதில்லை" என்றாள் கமலம். சமாளித்தபடி. சாத்திரியார் அதன் பின்பு வெற்றிலை போட்டு, ஊர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷயங்களை ஒரு அலசல் அலசி விட்டு கமலத்திடம் இருந்து தனக்கு வேண்டியதைப் பெற்றுக் கொண்டு சென்றுவிட்டார்.

"கேட்டியளோ சாத்திரியார் சொன்னதை. எதற்கும் நாங்கள் பரீட்சைக்கு முன்னரேயே முருகனுக்கு ஒரு அபிஷேகம் பெரிதாய் செய்வம். மறுக்காதேங்கோ."

"கமலம் நான் மறுக்கமாட்டன். அடுத்தது, எங்கட பரமேஸ்வரக் குருக்கள் அபிஷேகம் செய்தால் விலகாத சனியும் விலகும். மனிசன் சொல், செயல், எண்ணம் எல்லாவற்றிலும் தூய்மை பெற்ற மனிசன்.

"ம்... ம்..."

"அதோடை கமலம் குரு தட்சனை வடிவாய் கொடுக்கவேணும்."

"ஓம், ஓம் எனக்கு உதுகள் தெரியாதோ எங்கடை குடும்பம் பரம்பரை பரம்பரையாய் இறைவனை இடைவிடாது தொழுது நல் லாய் இருந்த குடும்பம்" கமலம் பதிலளித்தாள்.

"ஏன் அம்மா வீணாய் சஞ்சலப் படுகிறியள். எனக்கு என்னிலை நம்பிக்கை இருக்குது" என்றான் பாலன்.

"டேய் நீ குறுக்கை கதைக்கப் படாது என்று எத்தினை தடவை சொல்றது."

"சரி அம்மா, நான் குறுக்கை கதைக்க வில்லை. ரவி அங்கை படிப்பதற்கு எனக் காக காத்துக்கொண் டிருப்பான். இப்பவே எவ் வளவு நேரம் போட்டுது. பேசப் போறான். நான் போறன். நீங்கள் என்ன வாக்கும் செய்யுங்கோ" பாலன் சற்றுக் கோபத்துடன் கூறிவிட்டுப் போய்விட்டான் ரவி வீட்டுக்கு.

★★ ★★ ★★

ஏன் இன்னும் பாலனைக் காணோம். சாப்பிட்டு விட்டு விரைவாய் வந்துவிடுபவ னாச்சே பாலன். ஏதேனும்... ரவி பலவாறு எண்ணமிடுகையில் பாலன், ரவி வீட்டை வந்து சேர்ந்தான்.

"என்னடா, ஏதேனும் பிரச்சனையோ? முகம் ஒரு மாதிரியாய் கிடக்குது" ரவி.

"அம்மாவையும் அப்பாவையும் நினைக்க ஆத்திரம் ஆத்திரமாய் வருகுது."

"ஏன், ஏன் என்ன விஷயம்"

"சாதகம், சனிதோஷம், குருதட்சனை தலை யங்கம் தலையங்கமாய் பிரித்து வீட்டில் நடந்ததை ரவிக்கு விளக்கினான்.

"பேய், பூதம் இவற்றை விட்டதுதான் குறை."

"ம்... ம்"

"என்னடா ம்... ம்.. எனக்கு ஆத்திரம் ஆத்திரமாய் இருக்குது. எவ்வளவு நேரம் வீணாய் போட்டுது."

"பாலன் எல்லாவற்றையும் மனதில் எடுக்காதே. ஆனால் குரு, குரு தட்சனை இவற்றை மட்டும் அலட்சியப் படுத்தாதே."

"என்னடா நீ சொல்றாய்."

"பாலா எனக்குத்தெரியும். கடவுளுக்கும் எமக்கும் இடையே இடைத்தரகராக ஒருவர் தேவையா என நீ கேட்பவன்"

"ம்... ம்.."

"பாலா சில விடயங்களை காலப் போக்கில் மக்கள் மனதில் அர்த்தத்தில் திசை மாறி விடுகின்றன."

"உண்மைதான்" பாலன்.

அதேபோல சாதாரண மனிதனின் அஞ் ஞானத்தை அகற்றி மெய்ஞானத்தை அளிப் பவர் தான் குரு. எல்லா மதத்திலும் குருக் கள் இருக்கிறார்கள். அம் மக்கள் நேரான அர்த்தத்தில் அவர்களை மதிக் கிறார்கள்."

"சரி ஏற்றுக் கொள்கிறேன். குரு தட்சணை தேவையா?"

"டேய் குரு தட்சணை அன்று தொட்டு, குருகுலக் கல்வி முறை தொட்டு உண்டு." இவ்விடயங்கள் உணர்வு பூர்வமாக விளங்கிக் கொள்ள வேண்டும்."

"..."

"பாலா அடுத்தது குரு ஆசி கட்டாயம் வேண்டும். எங்கடை கோயில் பரமேஸ்வரக் குருக்களை எடுத்துக் கொள்ளேன். அவரிடம் பொக்கிஷமாய் இருக்கும் மெய்ஞானத்தைப் பாரேன். அவர் குருவின் இலக்கணம்."

தந்தை தாயிடம் ஆசி வேண்டுகிறோம். அதேபோல அஞ்ஞானத்தை அகற்றுபவரிடம் வேண்டுவதும் அவசியம். குருவின் ஆசி தெய்வத்தின் ஆசி."

"வேண்டத்தான் வேண்டும்" பாலன்.

"டேய் எங்கும் போலிகள் உண்டு. போலி களைக் கண்டு உண்மைகளை வெறுக்காதே."

"..."

"உன் அம்மாவும் அப்பாவும் செய்வதைச் செய் யட்டும். நீ கோயில் கும்பிட்டு எங்கடை குருக்களின் ஆசியை வாங்கு நானும் குரு ஆசி வாங்கத்தான் போறன்."

பாலனின் மனம் இப்பொழுது இலேசானது. பாலன், ரவி இருவரும் தம் முயற்சியில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★ ★★ ★★

இன்று முருகமூர்த்தி கோயிலில் மணியத்தார்-கமலம் தம்பதியினின் அபிஷேகம். சாதாரண அபி ஷேகமல்ல. சங்காபிஷேகம். கமலம் அதிகாலையே எழுந்து விட்டாள். மணியத்தார் கமலத்தை விட ஒரு படி மேல். கமலத்துக்கு முன்னரே எழுந்து விட்டார். இது விடயத்தில் கமலத்துக்கு திருப்தி.

கமலம் மாட்டில் பால் கறந்து அபிஷேகத் திற்கு எடுத்துக் கொண்டாள். "நல்ல வேளை மாடு வளர்த்ததால் தாராளமாக அபிஷேகத் திற்கு பால் கொடுக்கலாம். மற்றவர்களிட்ட பல் இளிக்கத் தேவையில்லை" வாய் விட்டுச் சொல்லிக் கொண் டாள் கமலம்.

முதல் நாளே இளநீர் தொட்டு அபிஷேகத்திற்கான எல்லாப் பொருட்களும் தயாராகி விட்டன.

பாலன் தான் ஆயத்தமாகச் சற்று நேரம் எடுத்தது. ஆனால் பாலனுக்குப் பேச்சு விழவில்லை.

முருகமூர்த்தி கோவிலில் மணியத்தார் வீட்டு அபி ஷேகம் விமரிசையாக நடைபெற்றன. கமலமும் மணியத்தாரும் மனமுருகப் பிரார் த்தித்துக் கொண் டனர். கமலம் கண்களில் நீர் மல்க முருகன் சந்நிதானத்தில் நின்றிருந்தாள். தன் மனக் குறைகளை ஒன்றும் விடாமல் முருகனிடம் ஒப்புவித்தாள்.

"முருகா அப்பாவுக்கும் அம்மாவுக்கும் மெய் யறிவைக் கொடு." மனதுக்குள் பாலன் பிரார்த்தித்துக் கொண்டான்.

மணியத்தார் குருக்களுக்கு உயரிய தொகை தட்சணையாகக் கொடுத்தார். கமலம் அபிஷேகப் பதார்த்தங்களை வீட்டுக்கு எடுத்துச் செல்லாமல் அடியவர்களுக்கே கொடுத்தாள்.

பரமேஸ்வரன் குருக்களிடம் கமலம் விபரம் கூறி னாள். மணியத்தார் "குருக்கள் உங்கடை அர்ச்சிப்பில் எங்கள் குறைகள் கரைந்து விடு கின்றன. மகனுக்கு ஆசி கூறுங்கள்" என்றார்.

"இஞ்சை பாருங்கோ நீங்கள் ஒன்றிற்கும் கவலைப் படாதேங்கோ நடப்பவை எல் லாம் நன்மைக்கே" என்றார் குருக்கள்.

பாலனிடம் வந்த குருக்கள் "தம்பி தெய்வ அனுக் கிரகம் தேவைதான். முயற்சியும் உழைப் பும் தான் மனிதனை உயர்த்தும். அப் பொழுது தெய்வம் அருள் பாலிக்கும். இன்னுமொன்று உள்ளது. தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சி தன் மெய்வருந்தக் கூலி தரும்."

முருகன் உனக்குத் துணை இருப்பான். உளத் தூய்மையோடு உன் காரியத்தை ஆற்று. எல்லாம் வெற்றி பெறும்" என்றார். பாலனின் மனம் கசிந்துருகியது.

கோவிலில் இருந்து பாலனும் தாயும் தகப்பனும் வயல் வரம்புகளினூடாக வந்து கொண்டிருந்தனர்.

"என்னங்க இன்றைக்கு ஐயருக்கு எங்களாலை நல்ல வருமானம். என்ன"

"ஓமோம், அதைவிட ஐயருக்கு செவ்வாய் வெள்ளி யிலை சரியான கூட. எங்கடை ஐயருக்கு இந்தக் கோயிலிலை நல்ல வருமானம்."

"ஓமப்பா" கமலம் கணவனின் கணிப்பை வெகு சாதாரணமாக ஆமோதித்தாள்.

பாலன் "அரோகரா" என்று தனக்குள் கூறிக் கொண்டான்.

★

**படைப்பாளிகளுக்கு**

தாயகம் இதழுக்கு சமூக நோக்கிலான கலை, இலக்கிய, சமூகவிஞ்ஞான படைப்பாக்கங்களை (சிறுகதை, கவிதை, கட்டுரை, விமர்சனம்) thajaham@gmail.com என்ற ஈ மெயில் முகவரிக்கு அனுப்புவதுடன் 0771041945 இலக்க viber or whatsapp மூலம் அனுப்பியமைக்கான உறுதிப்பாட்டை வழங்கி தாயகத்தின் வரவை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். ஆசிரியர் குழுவின் முடிவுக்கமைய தங்களது ஆக்கம் இதழில் பிரசுரமாகும்.

**ஆசிரியர் குழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்ரோபர் புரட்சியும் இன்றைய உலகும்

இராஜரட்ணம் தனிஸ்ரன்

ஒக்ரோபர் புரட்சி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தேசிய கலை இலக்கியப் பேரவை அகில இலங்கை மட்டத்தில் நடாத்திய கட்டுரைப்போட்டியில் திறந்த பிரிவில் முதல் பரிசு பெற்ற கட்டுரை.

"மனிதனாய் பிறந்தவன் பிறர்க்கு
பயனில்லாமல் அழியக் கூடாது"

-கார்ல் மார்க்ஸ்

உலக வரலாற்றில் ஒவ்வொரு சகாப்தமும் ஆளும் வர்க்கத்திற்கும் ஆளப்படும் வர்க்கத்திற்கும் சுரண்டும் வர்க்கத்திற்கும் சுரண்டப்படும் வர்க்கத்திற்கும் இடையிலான வர்க்கப் போராட்டமாகவே தனது - வரலாற்றை பதிந்துள்ளது. இன்றும் அவ்வாறே பதிந்து கொண்டிருக்கின்றது. இப்போராட்ட வரலாற்றில் - மாபெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியது ரஷ்ய தேசம். ஜார் மன்னர்களின் கொடுங் கோல் ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடந்த தேசம் சினந்தெழுந்தது. விளைவு, வெடித்தது புரட்சி. புரட்சியின் இறுதி வெற்றி வடிவம் தான் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட நூற்றாண்டு வரலாறாகி நிற்கும் 1917 ஒக்ரோபர் 25 இல் லெனின் தலைமையிலான பொல்செவிக்குகளின் "ஒக்ரோபர் புரட்சி".

உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளுக்காகவும் பாட்டாளிவர்க்கத்தின் சுதந்திரத்திற்காகவும் பொருள்முதல்வாத சுரண்டல் ஆதிக்கவர்க்கத்திற்கு எதிராகவும் பொதுவுடமை ஒளியை இவ்வுலகிற்கு ஊட்டிய மாமேதை கார்ல் மார்க்ஸ். அந்த ஒளி விளக்குதான் "கம்யூனிசம்". பாட்டாளி வர்க்கத்தின் உரிமைகளை மீட்பதற்காக "உலக தொழிலாளிகளே! ஒன்று சேருங்கள்" என்ற அறைகூவலோடு மார்க்சும் ஏங்கெல்சும் இணைந்து எழுதிய "கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை" உலகெங்கும் பரவியிருந்த வர்க்க பாகுபாடுகளுக்கு எதிராக போராட்டங்களையும், எதிர்க்குரல்களையும் வழிப்படுத்தியது. வலுப்படுத்தியது.

ஜார் என்றால் ரஷ்யா. ரஷ்யா என்றால் ஜார் என்ற நிலையில், ஆட்கள் மாறினாலும் ஆட்சி மாறாத தேசத்தில் மக்கள் மந்தைக் கூட்டம் போல அடிமைகளாக நடத்தப் பட்டனர். கீழ்ப்படிவது மட்டுமே அவர்களுக்கு இருந்த ஒரே உரிமை. இறுதிஜார் மன்னன் இரண்டாம் நிக்கோலஸ் மக்கள் மீது அக்கறையற்று, ஆடம்பர சுகபோகங் களில் மூழ்கி, "ரஷ்புத்தின்" என்ற மத குருவிற்கு கட்டுப்பட்டவனாக மக்கள் வறுமையில் வாடுவதை பொருட்படுத்தாது கொடுங்கோல் ஆட்சி செய்தான். ரஷ்ய இராணுவத்தில் சேவைபுரிந்த வீரர்களுக்கே உழைப்பிற்கு உரிய ஊதியம் வழங்கப்படாத நிலையில் சாமானிய மக்களின் நிலை பல மடங்கு மோசமாக இருந்த காலம் அது.

அடிமை விலங்கை உடைத்து சுதந்திர காற்றை சுவாசிக்க பலமுறை முயன்றும் அதிகார வர்க்கத்தின் இரும்புக் கரங்களால் ரஷ்ய மக்கள் நசுக்கப்பட்டனர். இந்நிலையில் தான் மார்க்ஸிசத்தை முழுமையாக உள்வாங்கிய லெனின் களத்தினுள் புகுந்தார். தெளிவான ஓர் சித்தாந்தத்தையும் அச்சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய முற்போக்கு செயற்திட்டங்களையும் வகுத்துக் கொண்டு களத்தில் இறங்கினார். அவர் தலைமையில் திரண்ட தொழிலாளர் வர்க்கமும் பொல்செவிக்குகளும் மேற் கொண்ட தொடர்ச்சியான போராட்டத்தின் வெற்றி தான் இன்றைய நூற்றாண்டு கொண்டாட்டம் ஒக்ரோபர் புரட்சி. மார்க்ஸின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்த லெனின் கம்யூனிசத்தின் முதல் வெற்றியை ஒக்ரோபர் புரட்சியாக வரலாற்றில் பதிந்தார். விளைவு, உலகெங்கிலும் பரவி இருந்த அடிமைச் சங்கிலியை உடைக்க வெற்றிக் கொடியாக மாறியது கம்யூனிசத்தின் சிவப்புக் கொடி.

ஒக்ரோபர் புரட்சியின் வெற்றி முதலாளித்துவ வர்க்கத்தின் அடிமைத்தனத்தை தகர்த்து பாட்டாளி வர்க்கத்தின் பலத்தை உலகிற்கு பறை சாற்றியது. ஆயினும் இன்று முதலாளித்துவ வர்க்கம் தன்னுடைய சுரண்டல் நிலையின் பரிமாணங்களை வேறு தளத்திற்கு எடுத்துச் சென்றுள்ளது. அதன் இன்றைய பெயர்தான் "பல்தேசியக் கம்பனிகள்". இன்றைய முதலாளித்துவத்தின் ஒக்ரோபஸ் கரங்கள் ஒவ்வொரு தனிமனிதனையும் உடலியல், உளவியல், உணர்வியல் ரீதியாக பற்றி அவனை அடிமை யாக்கித்தான் வைத்துள்ளது. இதில் மிகப் பெரிய வேடிக்கையான அதே நேரம். சோக மான உண்மை என்னவென்றால் உலகில் உள்ள பெரும்பாலான மனிதர்கள் நாங்கள் அடிமையாகத்தான் இருக்கிறோம் என்ற உணர்வே இல்லாதிருப்பதுதான். உண்மையை சொன்னால் ரஷ்ய தேசத்தில் இருந்த நேரடியான அடிமைப்படுத்தலை விட இன்றைய உலகில் உள்ள மறை முகமான அடிமைப்படுத்தல் மிகமிக கொடூரமானது. ஒவ்வொரு மனிதனும் தான் சுதந்திரமானவன் என்ற எண்ண ஓட்டத்தை கொண்டவன். ஆனால் அவனும் தன்னை அறியாமலே மிகப்பெரியதொரு அடிமை வலையில் சிக்கியுள்ளவன் தான்.

இன்றைய அறிவியல் ரீதியான சமூகத்தில் அறிவியல் ரீதியான சுரண்டல் முறைகளையே முதலாளித்துவமும் கைக்கொள்கிறது. இயற்கை முறையாக- இருந்த விவசாயத்தில் கிருமிநாசினிகள் களைகொல்லிகள் போன்ற இரசாயனங்களின் பயன்பாடு மண் வளத்தை அழிப்பதுபோல் ஆலைத் தொழிற்சாலைகளின் முறையற்ற கழிவு வெளியேற்றம் நீர், காற்று என்பவற்றை மாசடையச் செய்வதுமாகப் புதிய புதிய நோய்களை உருவாக்குகின்றது. உண்ணும் உணவுகள் நஞ்சாகின்றது. Fast Food கலாசாரம் விரைந்து பெருகுவதுடன் பல்தேசிய கம்பெனிகளின் மருந்து மாபியாக்கள், சர்வதேச உணவு நிறுவனங்கள் போன்றன மக்களை அடிமைப் படுத்துகின்றன. கல்விக் கூடங்கள், வைத்தியசாலைகள் என அனைத்து அத்தியாவசிய தேவைகளுக்கும் எங்களை அறியாமலே முதலாளித்துவ வர்க்கத்தினர் தங்கி இருக்க வேண்டிய கட்டாயத்திலேயே இருக்கின்றோம்.

தகவல் தொடர்பாடல் விஞ்ஞானத்தின் வளர்ச்சி மக்களை உளவியல் ரீதியாக அடிமைப்படுத்துவதற்கு பெரிதும் உதவியது. தொலைக்காட்சி, தொலைபேசி, சமூகவலைத் தளங்கள் போன்ற நவீன ஊடகங்கள் மனிதனின் சுய சிந்தனை நேரத்தை அழித்து அவர்களை சுறுசுறுப்பு அற்றவர்களாக மாற்றி இயந்திர வாழ்க்கைக்கு நாகரீகம் என்ற போர்வை போர்த்தித் தள்ளுகிறது. ஊடகங்கள் மக்களின் பலவீனங்களை காசாக்குவதற்கு விளம்பரம் மூலம் உதவுகின்றது. எந்தவித பயனுமே இல்லாத பொருளைக் கூட திரும்பத் திரும்ப விளம்பரப்படுத்தி மக்களை மூளைச்சலவை செய்து அதனை வியாபாரம் செய்வதில் இன்றைய முதலாளித்துவ வர்க்கம் மிகவும் இராஜதந்திரமான சூழ்ச்சிகளில் முன் நிற்கிறது.

மக்கள் கூட்டத்தை இன்றைய முதலாளித்துவம் அடிமை என்ற உணர்வு இல்லாத சுதந்திர அடிமைகளாக அன்றாட வாழ்வியலின் ஒவ்வொரு பகுதியிலும் இறுகப் பற்றித்தான் உள்ளது. எந்தவிதமான புரட்சி எண்ணங்களும் தோன்றாதவாறு விஞ்ஞானம், நாகரீகம் எனும் பதங்களைக் காட்டி ஒரு இனத்திற்கு தனித்துவமாக உள்ள கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை மெல்ல மெல்ல அழித்து வருகின்றது. தன்னுடைய சுய அடையாளங்களை இழந்த இனம் தனி மனிதன் புரட்சி என்ற எழுச்சியை ஒரு போதும் செய்ய முடியாது என்பது இன்றைய முதலாளித்துவ அரசியலின் உள்நோக்கமாக வுள்ளது. ஆனால் உலக வரலாற்றில் எந்தவொரு இனமும்/ மக்கள் கூட்டமும் தொடர்ந்து அடிமைகளாகவே இருந்ததில்லை. இன்றைய மக்கள் சமூகமும் அறியாமை இருளில் இருந்து மீளும் போது சுயநலமற்ற பொதுவுடமை சிந்தனையும் மார்க்சின் கருத்துகளும் லெனினின் செயல்முறைகளும் மீண்டும் முதலாளித்துவ வர்க்கத்தை நிச்சயமாக வீழ்த்தும். ஆனால் முதலாளித்துவ வர்க்கத்தை முற்றாக அழிக்க, மக்கள் பேராசை, சுயநலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர்களின் காலங்கள்

த. ஜெயசீலன்

சுடரொவொன்றும் சூரியனாய் சுடர்ந்த
தொரு காலம்!
"புதைந்த கனவொவொன்றும் போய்ச்
சுடரில் முகம் காட்டி
ஒளிருமெனும் நம்பிக்கை தனில்
உயிர்த்த தக்காலம்!
சுடர்களை மூழ்கடித்த தொடர்
வெள்ளத்தால் இருண்ட
யுகமொன்றில்....மின்மினிகள் போலச்
சுடர்களினை
அகக்கண்கள் மட்டுமே
காணவைத்த திடர்க்காலம்!
"சுடர்கள் நினைவுகளைச் சுமக்கும் கழுதைகள்....
நினைவுகளை நீக்க
கழுதைகளைக் கொல்க" என
சுடர்க்கழுதை பலதை தொலைத்தது
கடந்தகாலம்!
வெள்ளம் குறைந்து,
மிரட்டிய இருள்குலைந்து,
மனத் திரிகள் காய்ந்து,
உறைந்த நினைவு நெய்
உருகி வழிந்து, மீள
எரிப்பற்று நிலையடைந்து,
சுடர்கள் எரிய....
தொலைந்த முக விம்பங்கள்
சுடர்களில் தெரிய....
துளிர்த்தது இணக்ககாலம்!
"சுடர்களை சுடர்களாக ஒளிர விடுங்கள்" என்றும்,
"சுடர்கள் சுடர்களாகத் தொடர உதவும்" என்றும்,
"சுடர்கள்....பல தூறல் சூழ்ச்சிகளுள்
அடிபட்டே
அணையுமோ" என்றும், ஏங்கி
அழுகிறது நிகழ்காலம்!

அற்ற பொது வுடமை சிந்தனை உடையவர் களாக மாறுதல் அவசியம்.

இறுதியாக, கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின் ஆங்கிலப் பதிப்புக்கான முகவுரையில் எங் கெல்ஸ், மார்க்ஸிய சிந்தனையை இவ்வாறு குறிப்பிடுகின்றார். "வரலாற்றின் வழிவந்த ஒவ்வொரு சகாப்தத்திலும் அப்போது ஓங்கிய நடப்பிலுள்ள பொருளாதார உற்பத்தி, பரிவத் தனை முறையும் இதிலிருந்து இன்றியமை யாதவாறு பெறப்படும் சமூக அமைப்பு முறையும் தான் அந்த சகாப்தத்தின் அரசி யல், அறிவுத்துறை வரலாற்றின் அடிநிலை யாகின்றது. அந்த அடிநிலையில் இருந்து மட்டுமே அந்த அரசியல், அறிவுத்துறை வரலாற்றினை விளக்கமுடியும். ஆகவே மனித குல வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டங்களதும் சுரண்டும் வர்க்கத்திற்கும் சுரண்டப்படும் வர்க் கத்திற்கும் இடையி லான போராட்ட வரலாறே ஆகும். முதலா ளித்துவ வர்க்கத்தில் இருந்து விடுதலைபெற பாட்டாளி வர்க்கம் போராட வேண்டியது அவசியமாகின்றது" அது இன்றும் அவ் வாறேயுள்ளது.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஹா என்று எழுந்தது பார் யுகப் புரட்சி

தங்கராஜா இராஜ ராஜேஸ்வரி

ஒக்ரோபர் புரட்சி
நூற்றாண்டு விழாவை
முன்னிட்டு தேசிய கலை
இலக்கியப் பேரவை அகில
இலங்கை மட்டத்தில்
நடாத்திய கவிதைப்
போட்டியில் திறந்த பிரிவில்
முதல் பரிசு பெற்ற கவிதை.



ஜார்எனும் மன்னன் ஆண்டு
நலிந்திட்ட தேசம் ஒன்றில்
பார்புகழ் புரட்சி ஒன்று
பாய்ந்தது கரைகள் மீறி
ஜேர்மனி நாட்டில் தோன்றி
ஜெகத்தினை மாற்ற வென்று
மார்க்ஸ் எனும் மேதைசெய்த
மாற்றத்தில் இதுவும் ஒன்று.

உழைத்தவர் வீழ்ந்து போக
உடன்முத லாளி வர்க்கம்
களித்திடும் நிலையை எண்ணிக்
கலங்கியே புரட்சி என்னும்
விளக்கினை ஏந்திக் கொண்டு
வெகுண்டது கிழக்குத் தேசம்
தளைத்தது மக்கள் ஆட்சி
தாழ்ந்தது மன்னர் மாட்சி.

சென்றநம் காலம் தன்னை
சிரத்தையாய் பகுத்து நோக்கி
எந்தையும் தாயும் வாழ்ந்த
இழிவான வாழ்வைக் காட்டி
வென்றிட எழுவீர் என்ற
வீரனின் சொற்கள் பின்னால்
சென்றது மக்கள் வெள்ளம்
சிரித்தது லெனினி னுள்ளம்.

பழங்குடி சமூகம் என்ற
பண்டைய நிலைமை மாறி
விலங்குகள் போல மண்ணில்
வீழ்ந்தனர் அடிமைப் பட்டு
வளர்ந்திட்ட பிரபுக் குலங்கள்
வளத்தினைக் கொள்ளை கொள்ள
கலங்கியே பலநாள் மக்கள்
கவலையோ டுயிரோ டிருந்தார்.

வெண்படை கொண்ட மாந்தர்
வேட்டையைக் கண்ட லெனின்
செம்படை கொண்டு மண்ணைச்
செந்நிற மாக்கிப் பின்னர்
தம்படை யாலே நாட்டின்

சரித்திரம் மாற்றக் கண்டு
நம்புதல் இன்றி வேறு
நாட்டவர் ஏங்கி நின்றார்.

பொன்னுல கொன்றைக் காண
புறப்பட்ட மானி டர்கள்
விண்ணிலே முதன் முதலாய்
வீரனை நடக்கச் செய்தார்
மண்ணிலே இவர் புரிந்த
மாற்றங்கள் பலதைக் கண்டு
புண்பட்ட மேற்கத் தேயம்
புகைந்தது உள்ளுக் குள்ளே.

உலகத்தின் மூலை எங்கும்
ஒடுங்கிய மக்கள் கூட்டம்
கலகத்தை செய்யும் காட்சி
கண்முன்னே தோன்றக் கண்டு
சிலபல நாட்டுக் கூட்டம்
சிரத்தையாய்க் கூடிப் பேசி
தலைகீழாய்க் கிடந்து ருண்டும்
தளையிட முடிய வில்லை.

பசித்தவர் வாடி நிற்க
பாரினைக் கூறு போட்டு
புசித்தவர் களித்து வாழ்ந்தால்
பொறுக்குமோ நல்ல உள்ளம்
கசிந்திடும் கண்ணீர் வேண்டாம்
கைவிலங் கொன்றைத் தவிர
விசித்திர உலகில் நாங்க்ள்
விலக்கிட ஒன்றும் இல்லை.

பாட்டாளி வர்க்கம் ஒன்றே
படைத்தது உலகை என்ற
கூட்டொலி கேட்ட பின்னும்
கொடுமையில் பயந்து சாகும்
கூட்டமாய் இருக்க வேண்டாம்.
கும்பிட்டேன் இனிமேல் தானும்
வீட்டினை விட்டுக் கொஞ்சம்
வெளியிலே வந்து நிற்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இது பூமியாய் இருக்கும் படியால்..

இது பூமியாய் இருக்கும் படியால்
லடாக்கிலிருந்து மலபார் வரை
மொகாசுங் தொடக்கம் காத்தியவார் வரை
எந்தக் குறிச்சியிலிருந்தும்
எந்தக் கிராமத்திலிருந்தும்
எந்த யன்னலில் இருந்தும்
எந்தக் கதவிலிருந்தும்
எந்த வாசற்படியிலிருந்தும்
முக்காடுகளின் நிழலைத்தாண்டி
எந்தக் கிராமத்து வீட்டிலிருந்தும் எட்டிப்பார்க்கும்
இம்முகங்கள் யாருடையவை?
சொல்லுங்கள் இம்முகங்கள் யாருடையவை?
ஆம், இந்தப் பெரிய நாட்டின் எண்ணிறந்த கிராமங்களின்
ஏழைப் பெண்களுடைய முகங்கள் இவை
சட்டிகள் கழுவிக்கொண்டு
முற்றங்களைப் பெருக்கிக்கொண்டு
மண்தரையைச் சாணத்தால் மெழுகிக்கொண்டு
விடியற்காலை மாடுகளுக்கத் தீன் போட்டுக்கொண்டு
நீண்ட, இருண்ட, தொலைதூரத்திலிருந்து
தண்ணீர் எடுத்துக்கொண்டு
காடுகளிலிருந்து மாட்டுத்தீனும்
விறகும் சுமந்து கொண்டு
சதா அரைத்துக்கொண்டிருக்கும் ஆலைகளில்
தாமே மாவாய் அரைபட்டுக்கொண்டு
குழந்தைகளின் சாணைச்சீலைகளைக் கழுவிக்கொண்டு
மாமியாரின் ஏச்சுக்கிலக்காகி
குந்தியிருக்கும் மாமனாரின்.......
பற்றவைத்துக்கொண்டு
அரிசி கொழித்துக்கொண்டு
பருப்பை வறுத்துக்கொண்டு
எரிய மறுத்து மூச்சடைக்கும் கரும்புகை கக்கும்
................ இருந்து வரும்
சப்பாத்திகளின் வாசனையை அறுவடை செய்து
கொண்டிருக்கும்
ஏழைப்பெண்களின் முகங்கள்
இந்தப் பெரிய நாட்டின் கிராமத்து ஏழைப்பெண்களின்
முகங்கள்
இந்த முகங்களின் கொலாஜை
உற்றுப்பாருங்கள்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுக்குத் தெரியாத கீறல்களைக் காண்பீர்கள்
அவர்கள் பாதங்களில் கொப்புளங்களைக் காண்பீர்கள்
கண்ணுக்குத் தெரியாத பூட்டக்களால்
அவர்கள் உதடுகள் முத்திரையிடப்பட்டிருக்கும்
இவர்கள் தாம் தங்கள் உழைப்புக்கான ஊதியம் மறுக்கப்படும்
இந்தப் பெரிய நாட்டின் கிராமத்து ஏழைப்பெண்கள்
உற்பத்திப் படிமுறையிலிருந்து அந்நியப்பட்டவர்கள் இவர்கள்
'வேலை' என்ற வரைவிலக்கத்திலிருந்து ஒதுக்கப்படாத இவர்கள் பணி
'மனிதர்' என்ற கண்ணியம் மறுக்கபபட்டவர்கள் இவர்கள்
என்ன செய்கிறார்கள் இவர்கள்?
பாட்டுப்பாடுகிறார்களா?
என்ன பாட்டு?
தேய்ந்து கொண்டிருக்கும் ஒரு நாட்டின்
அழிழ்ந்து போகும் கூட்டிசைப் பாடுகிறார்கள்!
அழுக்குப் பாத்திரங்களில் இருக்கும்
எச்சில் உணவின் கரைசலைப் பருகி
பசிவிழாவைக் கொண்டாடுகிறார்கள்!
ஆழ்நீரில் இடுப்புவரை தோய்ந்தபடி
முதுகெலும்பு வில்லாய் வளைய
உங்கள் வயல்களில் நாற்று நடுகிறார்கள்
மண்டல் மேள ஒலிக்கும்
ஒருவர் இடையை மற்றவர் பற்றியபடி
'கர்ம நாச்சா' லயம் படைக்கிறார்கள்
கிராமத்து கிணறு குளத்தங்கரைகளில்
ஏதோ அற்ப பகிடிக்கு ஒருவர் விழுந்து
காரணமின்றிச் சிரிக்கிறார்கள்
அவர்களால் இன்னும் சிரிக்க முடிகிறதே
அதனால் தான் பூமி இன்னும் இருக்கிறது
அதனால் தான் தூக்கணங்குருவிகளின்
பாட்டுக்கள் தப்பி இருக்கின்றன
அதனால் தான் இன்னும் றொட்டி சுவையாய்
இருக்கிறது

**ஹிந்தி மூலம் : அனூப் குமார்**

**தமிழ் மூலம் : சோ.ப**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யுத்தத்தின் பின்

எளிமைக் கவி றொபின்

முடிந்து விட்டது தானே
புதிய வாழ்வு மலர்ந்துவிட்டதென
சொல்கிறது அரசு
முடியவில்லை இன்னும்
தினமும் நிகழ்ந்து கொண்டே
இருக்கிறது வாழ்க்கைப்
போராட்டம்!

ஆக்கிரமிக்கப்பட்ட
எமது நிலம்
எமக்கு வேண்டுமென
அகிம்சைப் போராட்டம் நடக்கிறது
காணாமல் போனவர்களை
காண்பதற்காய்
கையில் புகைப்படங்களோடு
கண்ணீர்ப் போராட்டம்
நடக்கிறது.

பட்டப்படிப்பு படித்தும்
வேலை கேட்டு
போராட்டம் நடக்கிறது
மனை நடுவே மயானங்கள்
அதையகற்ற போராட்டம்
நடக்கிறது.

வடக்கிற்கு வலுச்சேர்த்த
இளைஞர்கள்
வலுவிழந்தவர்களாய்
படும் துயரம் பரிதாபம்!

உடலினுள் பாய்ந்த சன்னங்கள்
இன்றா? நாளையா?
உயிர் பறிக்குமென
வலியோடு நகர்கிறது
பலர் வாழ்க்கை.

போர் முடிந்தும்
போராட்டம் தொடர்கிறது.
கணவன் உயிரை
குண்டுகள் கொன்றதனால்
பிள்ளைகள் உயிர்வாழ
தன்னுடல் விற்கும்
தாய்களின் நிலை
யாரறிவார்?

உணர்வாகப் பேசி
ஆட்சிக்கு வந்து
சேவைக்குப் பதிலாய்
ஊழலே செய்கிறார்கள்
ஈழத்தை வைத்து
பிழைப்பு நடாத்தும்
மானங்கெட்ட அரசியல்வாதிகள்.

புதிய வாழ்வு
மலரவில்லை இன்னும்
யுத்தத்தின் பின்னும்
யுத்தம்தான் நடக்கிறது
எஞ்சிய உயிர்களாவது
நிம்மதியாய் வாழ்வதற்கு...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் கலைஞர்
## நாடகர் அ. பிரான்சிஸ் ஜெனம்

சோ.தேவராஜா

1

சிரித்த முகம், இனித்த வார்த்தை, இதயம் நெகிழும் உருகிய அன்புப் பரிவு, அணைக்கும் கரங்களுடன் சிவந்த மேனிக் கம்பரம். கண்டவுடன் கனிவுடன் குதூகலம் கொள்ளும் கலைஞர் கூட்டம்.

நாடக அரங்கக் கல்லூரியில் களம் பயில் முன்னவராய், பயிற்சிப் பட்டறையின் உடல், குரல் விந்தைகளின் வெளிப்பாட்டு வித்தகராய் அருடன் கூடிக்களித்த பொழுதுகள்- நெஞ்சை விட்டகலா நினைவுகளுடன் பிறப்பது; இன்பம் பயப்பது.

பயிற்சிக் களத்தில் எழுவது, நடப்பது, துள்ளுவது, மூச்சை இழுப்பது, வெளித்தள்ளுவது, ஆடுவது, பாடுவது, அநாயசமாய் அமர்வது, அமைதியாய் கதைப்பது, மல்லாந்து கைகால் வீசிக் கிடப்பது, உள்ளங்கால் நுனி விரலிலிருந்து உச்சந்தலை மயிர்வரை முள்ளந் தண்டுகளூடாய் மூச்சாய், நினைவாய், உணர்வாய், ஊர்ந்து உள்நுழைந்து இரும்புடலை உருக்காக்கிப் புதிய வார்ப்பாக்கும் புதுப்புனைவை நிகழ்த்திப் புதிதளித்து பொலிவாய் மகிழ்வது ஜெனம் உட்பட்ட நாடகர்களின் கூட்டுக் கலை.



ஜெனம் என்ற நாடகர் தனி மரமல்ல. நாடகப் பெருவனத்தின் படர் கொம்பு, பல்லாயிரம் பார்வையாளர் கண்ணூறுபட்ட கலைஞன். பல பத்து நாடகக் கலை வல்லுனர்களின் கடாட்சத்துக்காட்பட்ட புடம் போட்ட நடிகன். பல நூற்றுக் கணக்கான நாடகத் துளிர்களைத் தன்னகப்படுத்தி ஆட்கொண்டு, கூடு விட்டுக் கூடு பாய்ந்து குதூகலித்தவர் ஜெனம்.

2

கத்தோலிக்க சமயக்குடும்பத்தில் சில்லாலையில் அல்பிறெட், முத்தம்மா தம்பதிகளுக்கு முதல் மகனாக 1941.03.08ம் திகதி பிறந்தார். பின்னர் சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் தனது ஆரம்பக்கல்வியைப் பயின்றார்.

இப்பாடசாலையில் 1951ல் பத்தாவது வயதில் பைபிள் கதையான 'ஜூடித்' என்னும் நாடகத்தில் 'ஜூடித்' என்ற விவிலியப் பெண் பாத்திரத்தில் நடித்தார். இந்நாடகத்தை எழுதியவர் பாடசாலை ஆசிரியர் சுவாம்பிள்ளை. நாடகம் பழக்கியவர் பெரிய விளான் சி.டி. செல்வராசா அண்ணாவியார்.

'ஜூடித்' மேடையேறிய பிறகு அந்த ஊரில் ஒரு கிளுகிளுப்பு ஏற்பட்டது' என்று கூறும் ஜெனம், "அதன் பின் அந்த ஊரில் மேடையேறிய எல்லா நாடகங்களிலும் பெண் வேடம் எனக்குத் தான் என்று சிரிப்பார்" என கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தாய்நாடு' பத்திரிகையில் எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் குறிப்பிடு கின்றார்.

சில்லாலை கிராமம் 'சின்ன றோம்' என்று அழைக்கப்பட்ட கிராமம். பத்துத் தலை முறையாக ஆயுர்வேத வைத்தியர்கள் இன் னாசித்தம்பி, அத்தனாசியார் போன்றோர் பணிசெய்த கிராமம். ஒல்லாந்தர் காலத்தில் ஜோசப் வாஸ் என்ற புனிதர் சில வருடங் கள் தலைமறைவாக வாழ்ந்து கத்தோலிக்க சமயத்தை மீட்டெடுத்த கிராமம். அதனால் ஒல்லாந்தரின் ஆயுதப் படைகளின் அட்டூழி யத்துக்கு ஆட்பட்ட கிராமம். சில்லையூர் செல்வராசனின் ஊரும் இதுவே.

ஜெனத்தின் தாயார் முத்தம்மாவுடன் தந்தையார் அல்பிறெட் புகையிலை வியாபாரத்துக்காக தென்னிலங்கையில் 'பியகம' என்ற சிங்களக் கிராமத்திற்கு குடிபெயர்ந்தனர். அங்கே சிங்கள மொழி மூலமே கல்வி பயிலலாம் என்பதனால் முதலாம் வருடத்திலிருந்து மூன்று வகுப்புகள் சிங்கள மொழிமூலம் கல்வி பயின்றதாக ஜெனம் குறிப்பிட்டார்.

ஜெனத்துக்கு தங்கை ஒருவர் பிறந்ததும் சில்லா லைக்கு வந்தனர். சில வருடங்களில் தாயார் முத்தம்மா ஜெனத்தின் பதின்ம வயதில் மரிக்க வும் யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டத்தில் வந்து தந்தையார் அல்பிறட் பிள்ளைகளுடன் குடியேறினார்.

பின்னர் யாழ்ப்பாணம் புனிதபத்திரிசியார் கல் லூரியில் (சென். பற்றிக்ஸ்) ஜெனம் இணைந்து கொண்டார். அங்கு அவர் டபிள் புறொமோசனில் வகுப்பேற்றப் பட்டுத் தனது கல்வியைத் தொடர்ந்தார்.

இக்கல்லூரியில் அருட்தந்தை ஆம்ஸ் ரோங் அவர்களின் நெறியாள்கையில் 'திருப்பாடு களின் காட்சி'யில் அரிமைத்தியூர் சூசை என்ற பாத்திரத்தில் நடிகர் பேர்மினஸ் போன்றோருடன் இணைந்து நடித்தார்.

அதன் பின்னர் ஜெனம் யாழ். கடற் கரை வீதியில் அமைந்துள்ள கூட்டுறவுத் துறையில் கல்வி பயின்றார். தொடர்ந்து யாழ் நீதிமன்றுக்கு அருகில் 1ம் குறுக்குத் தெருவில் அமைந்த லங்கா சமசமாஜக் கட்சியின் வட பிரதேசச் செயலாளரா கவும் யாழ் மாநகர சபை உறுப்பினராகவும் ஆரம்ப வகுப்புகளுக்கு குடியியல் புத்தகங்களை எழுதியவருமான அரி யாலை அருளம்பலம் விஸ்வநாதன் என்ப வரின் அலுவலகத்தில் வகுப்புத் தொழி லாளர் சங்கத்தின் பொறுப்புகளை நிர்வகிக் கும் எழுத்தராக 1983வரை 25வருடங்களாக ஊழியம் புரிந்தார். அச் சமயங்களில் வட இலங்கை, தென்னிலங்கை இடதுசாரித் தலைவர்கள் தொடர்பும் காங்கேசன்துறை

" மேடையில் நடிப்பதன் மூலம் மாயாஜாலம் நிகழ்த்திக் காட்டிய மந்திரக்காரன். ஈழத்தமிழ் நாடக அரங்கின் சிம்மாசனம் பிரான்சிஸ் ஜெனம். சமூக, சமய, சரித்திர, புராண, இதிகாச நாடகங்களில் ஆரம்பித்துப் பின்னர் கூத்துவகை, நவீன நாடகங்களில் தன் ஆளுமையைச் செலுத்திய ஒரு அரங்கியலாற்றுப்படை"

**-ப. ஸ்ரீஸ்கந்தன்**

" நடிப்புக்கு இலக்கணம் வகுக்கும் ஆற்றலும் அறிவும் கற்பனை வளமும் உள்ளவராக இருந்து பல ஆண்டுகளாக பல்வேறுபட்ட குணவியல்பு கொண்ட பாத்திரங்களைத் திறம்படப் படைத்துப் பலரின் பாராட்டைப் பெற்ற பின்பும் ஏதும் அறியாதவர் போல் எவரிடமும் எதையும் கேட்டறிந்து கற்க வேண்டும் என்ற மனப்பாங்குடன் இருப்பவர் பிரான்சிஸ் ஜெனம். இவரது மனப்பக்குவம் கலைஞருக்கு இருந்தால் கலை வளரும். நிச்சயமாக மனிதன் வளருவான்.

**-குழந்தை ம. சண்முகலிங்கம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஜெனம் மகாபுத்திசாலி. ஆட்களை இலகுவாக அளவிட்டுவிடுவார். ஒவ்வொருவரைப் பற்றியும் அவருக்கு ஒரு அபிப்பிராயம் இருக்கும், ஆனால் சொல்லமாட்டார். சிலவேளைகளில் உரையாடலில் அது ஒரு பகிடியாக வெளிப்படும். மற்றவர் மனம் நோகாமல் அவர் குணாதிசயங்களை அவர்களுக்கு உணர்த்துவதில் சமர்த்தர். ஒரு நடிகனுக்குரிய அவதானம் அவரிடமிருந்ததை நான் நன்கு அவதானித்தேன்."

**-பேராசிரியர் சி. மௌனகுரு**

" ஜெனம் மிகப்பெரிய நாடக ஆளுமை எத்தனையோ நாடகங்களில் நடித்த பெருமைக் குரியவர். நாடகக்கலை வளர்ச்சிக்காகத் தன்னையே அர்ப்பணித்த ஒரு பெருந்தகை. எத்தனையோ வளரும் கலைஞர்களுக்குப் பாடமாக அமைந்துள்ளார்.

**-நாடகர் சதாசிவம் உருத்திரேஸ்வரன்**

துறைமுகத்திலும், குருநகர் துறையிலும் பணிபுரிந்த தொழிலாளர்களின் உறவும் ஊடாட்டமும் ஜெனத்துக்கிருந்தது.

1961ல் நாவலர் வீதி, அரியாலையில் வசித்த 'ராணி' என அழைக்கப்படும் மேரி வயலற் ராணி என்பவரை மணம்புரிந்தார். ஓர் ஆண் மகனையும் ஒரு பெண்பிள்ளையையும் பெற்றெடுத்தனர். மகளின் மூன்று பிள்ளைகளான பேரப்பிள்ளைகளுடனும் மனைவி, மருமகன் ஜேசுதாசன் ஆகியோருடன் வத்தளையில் வாழ்ந்து வந்தார் ஜெனம்.

3

யாழ்ப்பாணத்தில் நிஜபெண்கள் நாடக மேடையில் ஏறுவதே இயலாத ஆணாதிக்க கருத்தியல் மேலோங்கியிருந்தமையால் ஜெனத்துக்கு பெண் வேடத்துக்கான கேள்வி நிரம்பவே இருந்தது. அத்துடன் இவரது திருமணம் நடைபெறும் காலம்வரை இவரது தந்தையார் நாடக நடிகர்களின் ஒழுக்கம் பற்றிய பிரச்சனையால் கடும்போக்காளராய் இருந்தார். 'அப்பாவுக்கு நாடக ஈடுபாடெல்லாம் கிடையாது. ஆனால் கலையை ரசிக்கும் மனம் இருந்தது' என்பார் ஜெனம்.

"ஜுடித்" நாடகத்தில் நாடகம் எழுதிய ஆசிரியரும் அண்ணாவியாரும் ஜெனத்துடன் வீடு சென்று பெற்றோரிடம் அனுமதி பெற்று அதன் பிறகே நாடகம் பழக்கத் தொடங்கியுள்ளனர்.

ஜெனம் திருமணம் செய்வதற்கு முதல் நாடகங்களில் தான் விரும்பியபடி நடிக்க இயலாதவாறு தந்தையின் கட்டுப்பாடு இருந்தது. திருமணமான பின்னரே துணைவி ராணியின் ஆதரவுடன் உடையலங்கார வசதிகளுடன் "பெண்" வேடமேற்று பிரகாசிக்க வழி அமைந்தது.

யாழ்ப்பாண சமூகத்தில் சைவப்பெருங்குடி மக்களின் பொதுசன அபிப்பிராயத்தில 'கூத்தாடுவது... ஆத்தாதவன் செயல்' என்றும்; பெரும்பாலும் கத்தோலிக்கரும், தாழ்த்தப்பட்ட சாதியினருமே அதில் ஈடுபாடுள்ளார்களென்பதனால் 'நாடகம், கூத்து' கலைகள் தீண்டத் தகாததென கருதப்பட்டது; 200 வருடங்களின் முன் பெண்கள் கல்வி கற்றல் ஆகாது என்றும் இன்று வரை நாடகத்தில் பெண் கள் நடிப்பது 'கற்பு'க்குப் பெரும் பங்கம் என்றும் நம்பும் காலமாக இருப்பதாலும் கெடுகுடி சொற் கேளாத 'ஆட்டக்காரிகளே' நடிகை களாக வருகின்றனரெனப் பூராயம் சொல்லும் விஷப்பண்பாட்டுச் சூழலில் ஜெனம் தமிழ் நாடகக் கலைக்குக் கிடைத்த பெருஞ் சொத்து.

ஒரு முறை சங்காரம் நாடக ஒப்பனையின் போது சமூகத்துக்கு நடிக்கும் 'நிஜ'ப் பெண்ணான கலாலக்ஷ்மியிடம் 'தேவதைக்குரிய






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையலங்காரம் ஏன் எடுக்க வில்லை' எனக் கேட்க, அப்பெண் நடிகை 'வேதக்காரரிட்டை கேட்டனான். எடுக்கமுடியேல்லை' என்றதும் ஒப்பனையிலிருந்த ஜெனம் கைகட்டி, வாய் பொத்தி எழுந்து நின்று "ஓம். ஓம்.. நாங்கள் வேதக்காரர்தான்' என்றதுமே எல்லோருமே வாய்விட்டே சிரித்துவிட்டோம்.

கலைப்பேரரசு ஏ, ரி. பொன்னுத்துரை அவர்கள் நாடகம் பற்றிய பத்தி எழுத்துக்களை ஈழநாடு பத்திரிகையில் எழுதியபோது 'முற்போக்கு கலைஞர் தேவராஜா' என்று எழுதினார். எனது மாக்ஸீய கருத்துக்கள் குறித்து மதித்து எழுதி னாரென நினைத்தேன். அதுவல்ல. 'தனது மனை வியையே நாடகம் நடிக்க அனுமதித்தவர்' என்பதை 'செயற்கரிய செயல்' எனக் கலைப் பேரரசர் கண்டறிந்தார் என்பதே எனது வியப் பாகியது. "எல்லா நாடகங்களிலும் பெண் வேடம் எனக்குத் தான்" என்ற ஜெனத்தின் சிரிப்பின் அர்த்தம் இப்போது எனக்குப் புரிகிறது.

ஜெனம் நடித்த நாடக களங்கள்- சில்லாலை றோ.க.பாடசாலை, புனித பத்திரிராசியர் கல்லூரி, கொய்யாத் தோட்டத்தில் இயங்கிய 'பி, எஸ். கலாமன்றம்', ஓரியன்ஸ் நுண் கலை- விளை யாட்டுக் கழகம், திருநெல்வேலி 'அரங்கத்தார்' நாடகக்குழு, வண்ணை கலைவாணர் நாடக மன்றம், மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றம், அரி யாலை நாடக மன்றம், குருநகர் றெக்கிளமேசன் சனசமூகநிலையம், சுண்டிக்குளி நவரச நாட்டுக் கூத்துக் கலாமன்றம், நாடக அரங்கக் கல்லூரி, தேசிய கலை இலக்கியப் பேரவை, தமிழ்

> பிரான்சிஸ் ஜெனத்திடம் இருந்த தளர்வும். தளம்பல் இல்லாத அமைதியும் அவருக்கு உளச் சமநிலையைத் தந்திருந்தது. இப்பணியானது அனைத்தையும் அனைவரையும் சமமாகப் பார்க்கும் நுண்திறனை, ஞானத்தை அவருக்குத்தந்திருந்தது."
> பிரான்சிஸ் ஜெனம் தான் பங்குகொண்ட ஒவ்வொரு வகை நாடகத்தினதும் இயல்பு நிலையைத் துல்லியமாகப் புரிந்து கொள்ளும் ஞானத்தைப் பெற்றிருந்தார். அந்தப் புரிதலே அவர் படைத்த அத்தனை வகைப் பாத்திரங்களையும் நூற்றுக்கு நூறு வீதம் இயல்பு நிலையில் நிறுத்திப் பார்வையாளரின் ஏகோபித்த அங்கீகாரத்தைப் பெற்று நின்றார். இது அவர் தனது கலை வாழ்வில் அமைதியாக நிலை நிறுத்திச் சென்ற அசுர சாதனையாக உள்ளது.
> **-குழந்தை ம. சண்முகலிங்கம்**

**பிரான்சிஸ் ஜெனம் நடித்த நாடகங்களின் பட்டியல்**

**சமய நாடகங்கள்**

1. யூடித் என்ற விவியப் பெண் பாத்திரம்- சில்லாலை றோ.க.பாடசாலையின் பாடசாலை நாடகம்-1951
2. திருப்பாடுகளின் காட்சி—அரிமைத்தியூர் சூசை என்ற பாத்திரம், அருட்தந்தை ஆம்ஸ்ரோங் நெறியாளர் சென். பற்றிக் கல்லூரி
3. திருப்பாடுகளின் காட்சி- கைப்பாஸ் பாத்திரம்- இயக்குநர் மரிய சேவியர் அடிகள் யாழ். தூயமரியன்னை தேவாலய வெளியில்-1966
4. கல்வாரியில் கடவுள்- பரி சேயன் பாத்திரம்—மரியசேவியர்- உரும்பிராய் திருமறைக் கலாமன்றம்— 1967
5. காட்டிக் கொடுத்தவன்- யூதாசின் மனச்சாட்சி
6. திருப்பாடுகளின் காட்சி- பரிசேயர்களின் தலைவன்
7. களங்கம்—எழுத்துரு- மரிய சேவியர் அடிகள் 1968 நடுவர் பாத்திரம்
8. அன்பில் மலர்ந்த காவியம்—செனற் சபைத் தலைவர் பாத்திரம் (திருப்பாடுகளின் காட்சி) யாழ் கோட்டை மதில்களே மேடை-1971
9. சாவை வென்ற சத்தியன்- இந்திய தமிழகத்தில்- திருச்சி தேவர் மண்டபத்தில்-1972
10. அளவு கோல்—இராயப்பர் பாத்திரம்
11. கரம்—பரிசேயன் பாத்திரம்
12. வா மகனே வா
13. ஒரு துளி
14. அருளும் இருளும்
15. பலிக்களம்
16. தெய்வப்பாவை - திருநாவுக்கரசு நாயனார் பாத்திரம் - எழுத்துரு சொக்கன் -நெறியாள்கை எஸ்.ரி. அரசு- அகில இலங்கை சேக்கிளார் மன்றம் 1978
17. நீ ஒரு பாறை - மந்திரவாதி அண்ணாவி பாலதாஸ் எழுத்துரு- நீமரிய சேவியர் அடிகள் மேற்பார்வை- தென்மோடிக் கூத்து— 1988
18. கல்வாரிப் பரணி- பிலாத்து Centre for Performing Arts 1988 பண்பாட்டு தள நிறுவனமாக மீளமைப்பு செய்யப்பட்டது

**சமூக நாடகங்கள்**

19. அனலையின் நெஞ்சம்- பெண் பாத்திரம் பி.எஸ். கலாமன்றம் கொய்யாத் தோட்டம்
20. அன்புத்தெய்வம்- பெண் பாத்திரம் பி.எஸ். கலாமன்றம் கொய்யாத் தோட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் நாராய் நாராய் நாடகப் பயணம், திருமறைக் கலாமன்றமும் ஐரோப்பிய நாடுகளும்.

4

ஜெனம் என்ற நாடகர் மக்கள் கலைஞராக மலர்ச்சி பெற்றாரெனில் தனது பற்றுக்களை 'வெறி' நிலைக்கு மாற்றாது, தன்பற்றைக் கடந்து பற்றற்றான் பற்றினைப் பற்றுவதற்குரிய பக்குவம் கொண்டார். தன் சுய அடையாளப் பிரமைக்குள் மூளாது தான் வாழும் சமூகத்தி லுள்ள இனத்தவர், மதத்தவர், பால்நிலையினர், சாதியினர், பிரதேசத்தவர் என்ற குறுகிய எல்லைகள் கடந்து நின்ற கலைஞர் என்பதனால் அவர் மக்கள் கலைஞர் ஆக முதிர்ச்சி பெறுகிறார்.

இந்நாடக முதிர்ச்சி வயதால் வருவதல்ல. தான் வாழும் சமூகத்துச் சூழலால் வசப்படுவது. ஒரு கலைஞர் அல்லது புத்திஜீவியைச் சூழ்ந்து உழைக்கும் மக்கள் உறவும் தொடர்பும் தொடரும் போது மட்டுமே இம் முதிர்ச்சி சாத்தியமாகும்.

இலங்கைச் சூழலில் கொலனித்துவர்களால் கொண்டு உருவாக்கப் பட்ட 'மத்தியதர வர்க்கச்' சகவாசம் என்பது கலைஞர்க்கு மூடுதிரையாகும். திறந்த மனமும் வெளிப்படைத்தன்மையும் பரந்த நோக்கும் விரிந்த பார்வையும் மட்டுமே சக மனிதனின் சமூக நிலை, உளவியல் நிலை, நடத்தைக் கோலம், அங்க அவயங்களின் உடல் மொழி, பேச்சின் தொனி போன்றவற்றை அவதானிக்கும் நுண்ணிய கலைத் தொடர்பைத் தூண்டுவன. அப்போதுதான் ஒரு நடிகன் தான் ஏற்கும் கதா மாந்தரின் இயல்பை விருத்தி செய்து அப் பாத்திரத்தின் வகிபாவத்தைத் தன்னுள் உருவாக்கிக் கொள்கிறார். அரங்க வெளியில் நடிப்பின் மோடியை பெருமளவில் புத்தாக்கம் செய்து விடுவதன் மூலம் நடிப்பின் இலக் கணத்தைக் கண்டு கொள்கிறார்.

'எந்தையும் தாயும்' நாடகத்தில சங்கரப்பிள்ளையாக உருமாறிய ஜெனத்தின் முகத்தில் எவ்வித உணர்ச்சியுமற்று 'சும்மா' வைத்திருப்பதும் சுற்றிப்பார்ப்பதும் ஆழப்பயிற்சியின் மூலமே சாத்தியமாக முடியும். நடிப்பது சுலபம். நடிக்காமல் வெறுமையாகப் பார்ப்பதும், முகச் சுருக்கங்களின்றியே படர விடும் நடியாத நடிப்பு மிகக் கடினம். இதனையே ஜெனம் செய்தார். இதுவே ஜெனத்தின் நடிப்புத்திறன். கைத்தடியால் அயல்

21. மங்கள வாசா- பெண் பாத்திரம் பி.எஸ். கலாமன்றம் கொய்யாத் தோட்டம்
22. வழி தெரிந்தது- ஓரியன்ஸ் நுண்கலை விளையாட்டுக் கழகம்
23. அன்னத்திற்கு அரோகரா- பெண் பாத்திரம்- திருநெல்வேலி "அரங்கத்தார்" நாடகக் குழு
24. ஆரமுது அசடா- மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றம்
25. மல்லியம் மங்களம்- மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றம்
26. வழி தெரிந்தது- ஜி.பி. பேர்மினஸ் குருநகர் றெக்கிளமேசன் சனசமூக நிலையம் 1966
27. எங்கே நிம்மதி- பெண் பாத்திரம் -ஜி.பி. பேர்மினஸ்- குருநகர் றெக்கினமேசன் சனசமூக நிலையம் 1966

**இலக்கிய வரலாற்று நாடகங்கள்**

28. திப்பு சுல்தான் -பேகம் சாஹீயா என்ற பெண் பாத்திரம்- வண்ணை கலைவாணர் நாடக மன்றம்- எஸ். ரீ , அரசு இயக்குநர்
29. தமிழன் கதை- பெண் பாத்திரம் - 'வண்ணை கலைவாணர் நாடக மன்றம்' -எஸ். ரீ , அரசு இயக்குநர்
30. தேரோட்டி மகன்- குந்திதேவி பாத்திரம்- கலையரசு சொர்ணலிங்கம்
31. கர்ணன்- குந்தி தேவி- அரியாலை நாடக மன்றம் -1963
32. அசோகனின் காதலி
33. வையத்துள் தெய்வம்
34. அசோகனின் காதலி

**கூத்துகள்**

35. நீ ஒரு பாறை = சுண்டிக்குழி நவரச நாட்டுக்கூத்து கலாமன்றம்
36. கருங்குயில் = சுண்டிக்குழி நவரச நாட்டுக்கூத்து கலாமன்றம்
37. குன்றத்துக் கொலை - = சுண்டிக்குழி நவரச நாட்டுக்கூத்து கலாமன்றம்
38. மனம்போல் மாங்கல்யம் = சுண்டிக்குழி நவரச நாட்டுக்கூத்து கலாமன்றம்
39. எஸ்தாக்கியார் - பெண் வேடம் = சுண்டிக்குழி நவரச நாட்டுக்கூத்து கலாமன்றம்
40. விஜய மனோகரன் - அண்ணாவியார், நடிகர் பூந்தான் யோசேப்பு
41. சங்கிலியன் -= சுண்டிக்குழி நவரச நாட்டுக்கூத்து கலாமன்றம்
42. பூதத்தம்பி- அட்மிரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுச் சிறுவனை 'இவனும் உன்னைப் போலத் தான் சரியான குழப்படிக்காரன்' என்று அவனது காலில் தட்டுவது; கால் செருப்பைப் போடும் போது படும்பாடு; தபால்காரரின் 'பெல்' சத்தம் கேட்டு அமளிப்படுவதும் அரிச்சனைக் காசை கட்டில் தலையணையின் கீழிருந்து எடுத்து எண்ணுவதும் கொடுப்பதும்; அயல் வீட்டாருடன் பேசும் போது நாட்டு நடப்புகளே தெரியாதவராய், 'காரில் போகலாமோ' (1992ல் யாழ்ப்பாணத்தில் கார் ஓடாக்காலம்) என்பதும்; பாசத்துக்கேங்கிய தந்தையால் தனது இரு கைகளாலும் "மோகன் மோகன்" என தனது மகனெனும் பிரமையில் வெறுமையைக் கட்டியணைப்பதும்; அது வெறும் மனப்பிரமையேயென்று தளர்வதும் என்று இவ் வாறாக மிகத்துல்லிய உணர்வுகளை முகத்தால் செருப்பால், கைத்தடியால், கைகளால், நடையால், பேச்சால், பேசாதிருப்பதாலும் வெளிப் படுத்துவதே ஜெனத்தின் நடிப்புத்திறன்.

'பொறுத்தது போதும்' நாடகம் ஜெனத்தின் 'சம்மாட்டியார்' நடிப்புக்குக் கிடைத்த பாராட்டு. 'சம்மாட்டியார் பொல்லாதவர், பொல்லாதவர், கருணை சற்றும் இல்லாதவர் இல்லாதவர்' என்பது அவரைக் குறித்த கடற்றொழிலாளர் போடும் கணக்கு.

" உடலையும் குரலையும் அவர் லாவகமாக கையாண்டு கொடுத்த எந்தப் பாத்திரத்திற்கும் உயிர் கொடுக்கக்கூடிய அற்புதமான கலைஞர் என்பதனை அவதானித்தேன். அவர் ஒரு இயல்பான கலைஞர். அது அவருக்கு இயற்கையின் கொடை. ஒரு நெறியாளரின் எதிர்பார்ப்பினை அப்படியே அரங்கம் என்ற பௌதீக வெளியில் கொண்டுவரக் கூடிய ஆற்றல் சில நடிகர்களுக்கு மட்டுமே கைவர முடியும் என்பதனை கண்டிருக்கிறேன். அப்படியான ஒரு அலாதியான கலைஞர் அவர்."

நாடகவியலாளராக மட்டுமல்ல. சிறந்த மனிதராக பண்பும், அன்பும் நிறைந்த ஒரு நல்ல ஜீவனாக வாழ்ந்த அவரது புகழ் ஈழத்தமிழ் அரங்க வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்.

**-க. பாலேந்திரா**

சம்மாட்டியார் தொழிலாளர்களுக்குக் கடன் கொடுத்தே தன் கட்டுக்குள் கொத்தடிமைகளாக வைத்து தன் கருமங்களை தடையின்றிச் செய்யும் தந்திரசாலி. இதனை மிகைப்படுத்திக் காட்டும் மோடிப்படுத்திய நவீன நாடக வடிவத்தினுள் நாட்டாரிசைப் பாடலுடன் ஆட்டக்கூத்தும் இணைக்கப்பட்டது. இதில் ஒரு காட்சியில் நாய்களுக்கு எச்சில் எலும்புத் துண்டுகளை வீசுவது போல் துள்ளிக்குதித்து கடற்கூலித் தொழிலாளர்களிடம் 'எத்தினை வேணும்' என்று

**நவீன நாடகங்கள்**

43. பொறுத்தது போதும்– 1978.08.26 நாடக அரங்கக் கல்லூரி -அ.தாசீசியஸ் நெறியாள்கை எழுத்துரு
44. கோடை—1979.03.02 -மஹாகவி - நெறியாள்கை வீ. எம் குகராஜா
45. கந்தன் கருணை = எழுத்துரு ரகுநாதன், அம்பலத்தாடிகள் -தாசீசியஸ் நெறியாள்கை -1979.03.05
46. கூடி விளையாடு பாப்பா—குழந்தை ம. சண்முகலிங்கம் எழுத்துரு -அ. தாசீசியஸ்- நெறியாள்கை -1979.10.12
47. அவள் ஏன் கலங்குகிறாள் - வீ.எம். குகராஜா எழுத்துரு- குழந்தை ம. சண்முகலிங்கம் நெறியாள்கை- 1982.08.02
48. வாடகைக்கு அறை -ஏ. ரகுநாதன்
49. வேதாளம் சொன்ன கதை - கவிஞர் அம்பி
50. பாவிகள்
51. ஊமை நெஞ்சம்
52. சங்காரம்- சி.மௌனகுரு எழுத்துரு நெறியாள்கை - 1980.11.15
53. புதியதொரு வீடு - மஹாகவி. எழுத்துரு - L M றேமன் நெறியாள்கை 1981.03.21
54. அபசுரம்—நா. சுந்தரலிங்கம் எழுத்துரு - சி மௌனகுரு. நெறியாள்கை 1981.07.25
55. குருசேத்திர உபதேசம்—சி. மௌனகுரு நெறியாள்கை - ஞானியின் நவீன குசேலரைத் தழுவியது.1982.03.26
56. சக்தி பிறக்குது -குடிகாரக் கணவன் பாத்திரம்- சி.மௌனகுரு எழுத்து நெறியாள்கை 1986.03.08
57. வெறியாட்டு—பிரமுகர் பாத்திரம் -இ. முருகையன்- வீ.எம்.குகராஜா நெறியாள்கை -யாழ்பட்டப்படிப்புகள் கல்லூரி 1986.05.07
58. உயிர்த்த மனிதர் கூத்து—க.சிதம்பரநாதன் நெறியாள்கை
59. எந்தையும் தாயும்- குழந்தை ம.சண்முகலிங்கம் எழுத்துரு -க.சிவயோகன் நெறியாள்கை 1992
60. இருதுயரங்கள் -இ.முருகையன் எழுத்துரு (தழுவல்)- நெறியாள்கை பிரான்சிஸ் ஜெனம்- வைத்தியர் பாத்திரம் 1996
61. கெக்குளே இராசன் வழக்கு த்தீர்த்த கதை -குயவன் திருடன்- சி. சிவசேகரம் -எழுத்துரு
62. வலியவனும் சிறியவனும்- கோலியாத்தா பாத்திரம் -1999ல் 'யாதுமூரே' ஐரோப்பிய கலைப் பயணத்தில் இவரது தலைமையில்பிரான்ஸ் ,ஜேர்மனி. நெதர்லாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிப்பாடுவதும் 'ஜோசேப்பு உன் கணக்கென்ன சொல்லு' 'கணக்கொன்று மாத்திரம் கணக்காகப் பாக்கிறாய்' என்று எள்ளல், துள்ளல், ஆடல், கண்வீச்சுடன் வக்கிரத்தை வெளிப்படுத்துமாறு ஜெனம் காட்சிப்புலத்தை நம்பகத்தன்மை குலை யாமல் வெளிப்படுத்தியமை பார்வையாளர் மத்தியில் 'சம்மாட்டி' என்ற பாத்திரத்தின் கொடூரத்தை வெளிப்படுத்தின.

இதனால் முல்லைத்தீவுக் கடற்கரையில் இந் நாடகம் மேடையேறிய போது சில பாடல்கள் தணிக்கைக்குட்பட்டதும்; யாழ் மாநகர சபையில் மேடையேறிய போது குருநகரிலிருந்து சிலர் நாடகத்தை குழப்ப முயற்சித்தமையும் எமது கவனத்தைப் பாதித்தன. மேலும் தேசிய நாடக விழாவில் மேடையேறிய 'பொறுத்தது போதும்' நாடகத்தில் மன்றாடியார் "பணத்தை மதிக்காமல் துரைமார் உதவினார்" என்று பாடி வினவவும் சம்மாட்டி "பணம் பாதாளம் வரை பாயும் அதை நீயும் அறியாயோ?" என்ற பாடலைப் பாடுவது ஊழல் நிர்வாகம் பற்றிய சாடல் என்பதாய் அந்த வசனத்தை நீக்கும்படி கேட்கப்பட்டதால் அந்தப் பாடல் வரி நீக்கப்பட்டது. எனிலும் "பணத்தை மதியாமல் துரைமார்" என்று மன்றாடி பாடிய வரியைத் திருப்பிக் கிண்டலாய் பாடி ஒரு சிரிப்புச் சிரித்தபோது ரசிகர்கள் மத்தியில் கரகோஷம் ஏற்பட்டது. தணிக்கைக்குட்பட்ட பாடல் வரியை விட அந்த நடிப்பும் சிரிப்பும் உடலசைவும் தாக்கத்தை ஏற்படுத்திய கட்டம் அது.

'கந்தன் கருணை' நாடகத்தில் நாரதராக காத்தான் கூத்திலமந்த நவீனமோடியும்; சங்காரத்தில் வடமோடி கூத்துமோடியில் ஆடிப்பாடுவதும்; கோடையில் பாநாடக யதார்த்த மோடியிலும்; 'வெறியாட்டில்' பாநாடக பாவின மோடியிலும்; 'பொறுத்தது போதும்' நாடகத்தில் தென்மோடி நாட்டாரிசையிலமைந்த நவீன மோடியிலும் நடித்துப் பாராட்டுப் பெற்ற ஜெனம் என்றும் நடிப்பின் இலக்கணமாகத் திகழ்வார்.

தான் வரித்துக்கொண்ட கதாபாத்திரத்தின் உளவி யல், சமூகவியல், நடத்தைக்கோலம் போன்ற பிற பல்துறை அவதானிப்பில் தன்னைப் புடம் போட்டு, நடிக்கும் கதாமாந்தரினை உருவாக்கி புதிதாகக் கட்டியெழுப்புவதனூடாக அப்பாத்திரத்தின் வகி பாகத்தை நன்கு வெளிப்படுத்தியவர் ஜெனம் அவர்கள்.

அவரது நடிப்பு முறைமைபற்றி இன்னுமின்னும் அவரது நாடகங்களை ரசித்த ஆர்வலர்கள் எழுத வேண்டுமென்றும் தமது மனப்பதிவுகளைப் பதிய வேண்டும் என்ற எனது பெருவிருப்புடன் நிறைவு செய்கின்றேன்.

**சினிமா, வீடியோ நடிகராக**

63. வாடைக்காற்று - செங்கையாழியான்
64. நிர்மலா - ஏ, ரகுநாதன்
65. தெய்வம் தந்த வீடு - ஏ,ரகுநாதன்
66. கதை இதுதான் - வீடியோ நாடகம்- வீ. எம். குகராஜா, கே.எம். வாசகர்



**நெறியாளராக**

1. புனித யோன் பொஸ்கோ
2. புனித பெனடிக்ற் கல்லூரி
3. சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
4. திருமறைக் கலாமன்றம்
5. யாழ்ப்பாண மறைக் கல்வி நடுநிலையம்
6. வேம்படி மகளிர் கல்லூரி
7. கொழும்பு பல்கலைக்கழக வணிக பீட மாணவர்கள்- 'கிட்கிந்தை அல்லது அயலார் வருகை' -சி.சிவசேகரம்
8. கொழும்பு திருமறைக் கலா மன்றம்

* நாடகர் ச. உருத்திரேஸ்வரனின் 'நானும் ஜெனமும்-நனவிடைத்தோய்தல்' என்ற கட்டுரை * நாடகர் யோ.யோன்சன் ராஜ்குமாரின் 'பிரான்சிஸ் ஜெனம்- அரங்க வரலாற்றில் ஒருமைல்கல் -ஜீவந்தி 2017 வைகாசி இதழ்,* இழத்தற்கரிய இரண்டு அரங்க ஆளுமைகளின் நினைவுகளில் நனைந்து... * அ.பிரான்சிஸ் ஜெனம்-கலைமுகம் இதழ்62 ஏப்பிரல்- ஜனவரி 2017, கனடா பத்திரிகை 'தாய் வீடு' ஆகியவற்றிலிருந்தும் பெறப்பட்ட வற்றின் அட்டவணைக்குறிப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வியற் கலைகளும் சமூகக் கலைகளும்: பயனற்ற ஒப்பீடுகள்

சி. சிவசேகரம்

எச் சமூகத்திலும் உருவாகும் ஒவ்வொரு அறிவுத் துறையும் கலைகளும் இலக்கியங்களும் மொழி வழக்கும் சமூகத் தேவையின்றும் சமூக நடைமுறையினூடும் உண்டானவையே. அவற்றின் விருத்தியில் அயற் தாக்கங்கட்கு மிகுந்த இடமுண்டு. எனினும், அயல் உள்வாங்கல்கள் யாவும் சமூக உடன்பாட்டின் அடிப்படையிலேயே நிகழ்கிறன. இவ் உடன்பாடு சமூகத்தின் சுய விருப்பின் பயனானதெனின் உள்வாங்கிய கூறுகள் ஏலவே உள்ளவற்றுடன் எளிதாக இணைந்து அடையாளங் காண இயலாதவாறு கரைகின்றன. கட்டாயத்தின் பேரிற் பெறும் உடன்பாட்டின் வழி உள்வாங்கல் நீண்டகாலத்துக்கு அயற் பண்புடன் இருக்க நேரும். எனினும் சமூக விருத்தியும் சமூகத் தேவைகளும் பலவாறான உள்வாங்கல்களை இயலுமாக்குகின்றன.

செவ்வியற் கலைகளும் மொழியும் இலக்கியமும் அறிவுத் துறைகளும் சமூகத் தேவையினின்று எழுந்த மூல வடிவங்களினின்று விலகுகிறன. அவற்றின் பயன், பல சமயங்களில், சமூகத்தின் சிறுபான்மையோரின் பாவனைக்கும் நுகர்வுக்கும் உள்ளே ஒடுங்குகிறது. அதனால் அவற்றின் பயனை எப்போதும் சமூத்திற்கு புறம்பானதாக கொள்ளத் தேவையில்லை. அவை ஒரு சமூகப் பிரச்சினையாவது எப்போதெனின், அவற்றுக்குச் சமாந்தரமாகச் சமூகத்தில் உள்ள கலை, இலக்கிய, மொழி, அறிவுத் துறைகளுடன் ஏற்றத் தாழ்வாக ஒப்பீடும் போதும் செவ்வியல் வடிவினவாக ஏற்கப்படாதவற்றைப் புறக்கணிப்புக்கும் ஒடுக்குதலுக்கும் உட்படுத்தும் போதுந் தான். சமூகத்துடன் நேரடி, அன்றாட உறவுடைய மொழி எவ்வகையிலும் செம்மொழிக்குத் தாழ்வல்ல. சில வேளைகளில் சமூக மொழி வழக்கு இன்றியமையாததாகிறது. சில வேளைகளில் செவ்வியல் மொழி வழக்குப் பயன்மிக்கதாகிறது. இரண்டும் காலத்துடன் மாறுவன. இரண்டுமே தொடர்ச்சியான கொடுக்கல் வாங்கல் உறவுடையன.

மொழி பற்றி முற்கூறியவற்றை அறிவுத் துறைகட்கும் - குறிப்பாக மருத்துவம் போன்ற சமூகப் பண்புமிக்க துறைக்கும் - இலக்கியத்திற்கும் பல்வேறு கலைவடிவங்கட்கும் பொருத்திப் பார்ப்பது பயனுள்ளது. இக் கட்டுரையின் நோக்கம் அதல்ல. எச் சமூகக் கலை வடிவத்துக்கும் அதற்குச் சமாந்தரமான செவ்வியல் வடிவத்துக்குமிடையே உயர்வு தாழ்வுகளை ஒப்பிடுவதுமல்ல, அவ்வாறு ஒப்பிடுவோர் ஒப்பிடத்தகாதனவற்றை ஒப்பிடுகிறனர். அறிந்தோ அறியாமலோ ஏற்றத்தாழ்வான ஒரு சமூதாயத்தின் ஒரு பிரிவின் நலன்களை அவர்கள் வலியுறுத்துகிறனர். இக்கட்டுரை அதன் நுணுக்கங்களுட் செல்ல முனையவில்லை.

தென்னாசியச் சூழலில், குறிப்பாகத் தமிழக, ஈழத்துத் தமிழ்ச்சூழல்களில், செவ்வியற் கலை இலக்கிய வடிவங்களை மேம்படுத்திக் காட்டப் பயன்படும் சில உபாயங்களைப் பற்றிச் சிறிது பேசுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

செவ்வியற் கலை வடிவங்கட்கும் சமூகக் கலை வடிவங்கட்குமிடையில் ஏற்றத்தாழ்வான முரண் காண்பது தென்னாசியாவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமுரியதல்ல. வர்க்க சமுதாயம் ஒவ்வொன்றிலும் அது நிகழ்கிறது. எனினும் தென்னாசியாவில் நிகழும் விவாதங்களிற் தெய்வம் சான்றோருக்காகவும் செவ்வியல் மரபினருக்காகவும் பொய் சாட்சி கூற அழைக்கப்படுகிறது.

உலகின் எல்லாம் பெருமதங்களிலும் 'நாத்திக மதமான பவுத்தத்திலுங்கூட' எவ்வாறோ தெய்வங்களோ தேவுக்களோ வேறும் இயற்கைக்குப் புறம்பான கற்பனை மாந்தரோ விலங்குகளோ அற்புதங்களை நிகழ்த்தி மதத்தின் உண்மையை மட்டுமன்றி அதன் தெய்வீகத்தையும் நிறுவுவதை அறிவோம். தென்னாசியச் சூழலில் தெய்வங்களும் தெய்வங்களின் தூதர்களும் அத்துடன் நிற்பதில்லை. அவை செவ்வியல் வடிவங்கட்குத் தொன்மையும் தூய்மையும் மேன்மையும் வழங்கப் பயன்படுகிறன.

இந்திய மொழிகள் யாவும் சமஸ்கிருதத்திலிருந்து வந்தன என்ற கதையில் இரண்டு பெரிய பொய்கள் உள்ளன. ஒன்று சமஸ்கிருதத்தின் தொன்மையையும் முதன்மையையும் மிகையுறுத்துவது. மற்றது மொழி உருவாக்கத்தின் செயல்முறையைத் தலைகீழாக்குவது. அதன் பிற்சேர்க்கையாகப் பார்ப்பனிய வர்ணாசிரமச் சாதியத் தாக்கத்தால் சமஸ்கிருதம் தேவபாஷையாக உயர்வு கண்டது ஒருபுறமிருக்க, சமஸ்கிருதத்தின் இந்தியத் துணைக்கண்ட வேர்களைக் கொண்ட பல்வேறு பிராகிருதங்களும் திராவிட, முண்டா மொழிக் குடும்ப மொழிகளும் நீசபாஷையாகவும் பெருந்தெய்வ வழிபாட்டுக்கும் புலமைசார் பணிகட்கும் ஒவ்வாதவையாகவும் கீழிறங்குகிறன. அதைப் பார்ப்பனச் சதி என்று விளக்குவது பிரச்சினையை மிகையாக எளிமைப்படுத்துவதாகும். ஏனெனிற் பார்ப்பனியம் பார்ப்பனரின்றியே தனது இருப்பை நிலைநிறுத்திவிட்டது.

சமஸ்கிருதத்திலிருந்து தமிழ் வந்தது என்பதை விஞ்ஞான ரீதியாக மறுத்துத் திராவிட மொழிகள் வேறொரு மொழிக் குடும்பத்திற்குரியன என பிரித்தானிய அறிஞர் கால்ட்வெல் நிறுவியதையிட்டு அகமகிழும் தமிழர், அனைத்துத் திராவிட மொழிகட்கும் தாய்மொழி தமிழே எனப் பெருமை பேசுவர். தமிழின் இன்னொரு வட்டார வழக்கு மலையாளமானது என்பதை விட்டால், வேறெந்தத் திராவிட மொழிக்கும் தாய் தமி

**செவ்வியற் கலைகளாகக் கொண்டாடும் இசை, நடன வடிவங்களும் பிரதேசந் தோறும் இருந்து வந்த சமூகக் கலை வடிவங்களின் இணைவாலும் விருத்தியாலும் அமைந்தவையன்றி, அவை எக்காலத்திலும், தாம் பின்பு அறியப்பட்ட வடிவில் தொன்றுதொட்டு இருந்தவையல்ல.**

ழென்பதற்குச் சான்றுகளில்லை. மலையாளம் உண்மையில் தமிழின் சகோதர மொழி. எனவே இங்கு நாம் முகங்கொடுக்கும் பிரச்சினை வர்க்கமும் வர்க்க நலன் சார்ந்த அடையாள அரசியலுமாக உள்ளது. இவ்வாறான தொன்மை, தூய்மை, மேன்மை மயக்கங்களுட் சிறைப்பட்டோர் பார்ப்பனியத்துக்கு எவ்வகையிலுஞ் சோடை போகாத ஒரு மேட்டிமைத் தனத்தின் பிரதிநிதிகளாக உள்ளனர். அவர்கள் செய்ய முயல்வது ஏதெனின், அனைத்துச் செவ்வியல் வடிவங்கட்கும் உரிமை கோருமாறு தமிழிலும் தமிழ்ச் சூழலிலும் தோற்றுவாய்களை நிறுவுவதாகும்.

எவ்வாறு சமஸ்கிருதம் தொன்மையான ஒரு ஆரிய மொழியின் அடிப்படையில் இந்தியத் துணைக்கண்டத்தின் பல்வேறு மொழிகளினின்று தனது சொல்வளத்தையும் ஆற்றலையும் விருத்தி செய்ததோ அவ்வாறே தமிழகமும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களும் முழு இந்தியாவும் செவ்வியற் கலைகளாகக் கொண்டாடும் இசை, நடன வடிவங்களும் பிரதேசந் தோறும் இருந்து வந்த சமூகக் கலை வடிவங்களின் இணைவாலும் விருத்தியாலும் அமைந்தவையன்றி, அவை எக்காலத்திலும், தாம் பின்பு அறியப்பட்ட வடிவில் தொன்றுதொட்டு இருந்தவையல்ல.

சமஸ்கிருதத்தின் தோற்றுவாய் பேசப்படாது, அது அனாதியாகக் கொள்ளப்படுகிறது. பரதம் பரத முனிவர் மூலம் அருளப்பெற்றதாகவும் கர்நாடக இசை தென்னிந்திய இசை வடிவங்களின் தாய் வடிவமென்றும் நாம் நன்கறியும் சாகித்தியகாரர்கள் அனைவருக்கும் எவ்வாறோ தெய்வம் அருளியதாகவும் கதைகள் வழங்குகிறன. இவ்வாறு செவ்வியற் கலைகளையும் மொழியையும் மருத்துவத்தையுங் கூடத் தெய்வங்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***சமூகக் கலை இலக்கியங்கள் எனக்கூடிய நாட்டார் இசை, கிராமிய நடனங்கள், நாட் டார் பாடல்கள், கூத்து என்பன எல்லாப் போதும் சமூக வாழ்வைப் பேசாவிடினும் அவை சமூகத்து மாந்தரின் இருப்பைப் பற்றிய செய்திகளைக் கூறுகிறன. அவை நிரந்தரமாக ஒரே வடிவில் இருந்தவையல்ல. அவை வாழ்க்கை முறையின் மாற்றத் தோடும் அயல் உறவுகளின் தாக்கத்தின் பயனாயும் சான்றோர் வழக்குடன் ஏற்படும் பரிச்சயந்தாலும் மாறுவன.***

உறவுபடுத்துவதும் அவை வெகு சிலருக்கே கைகூடும் ஆற்றல்களெனக் கூறுவதும் ஏனென விசாரிப்பது தகும்.

பரதமும், கர்நாடக இசையும் தெய்வீகமா னவை எனப்பட்ட போதும், அண்மைவரை அவை சமூக அடுக்கில் தாழ்நிலையிலிருந் தோர் மேல் மட்டங்களில் இருந்தோரின் மகிழ்வுக்காக ஆடியும், பாடியும் வந்த கலை களானதாலேயே உயிரோடிருந்தன.

அரசவைகள், செல்வந்தரின் மனைகள்,வசதி படைத்த கோவில்கள் போன்றவற்றுக்குள் அவற்றுக்கான களங்கள் மட்டுப்பட்டிருந்தன. எனவே அவை சமூக வாழ்வினின்று எப் போதோ விலகிவிட்டன எனக் கொள்ளலாம்.

செவ்வியற் கலைகளின் பேசுபொருட்கள் ஒருபுறம் அவற்றின் தெய்வீகத்தன்மையால் மட்டுப்பட்டன. உயர்குடிப் பிறந்தோரான பிரபுக்களையும், மன்னர்களையும் போற்றும் வழமையும் இருந்தது. இசை, நடனம் போன்ற கலைகளில் அரங்கிற் தோன்றுவோர் சமூ கத்திற் தாழ்நிலையில் இருந்ததோடு அவர்க ளுடைய கல்வியறிவும் மட்டுப்பட்டே இருந் தது. எனவே சாகித்தியக்காரர்கள் பெரும் பாலும் உயர்குடிப் பிறந்தோராக இருந்ததில் வியப்பில்லை. எனினும், பார்ப்பன சாதியி னரின் ஆதிக்கம் சங்கீதமும் மூர்த்திகள் என் போரின் காலத்திலேயே வலுத்தது.

எவ்வாறாயினும் செவ்வியற் கலைகளின் விருத்தி சமூக வாழ்வினின்று விலகி அமைந் தமையை நாம் அவை கூறுகிற செய்திகளி னின்று காணலாம் அத்தோடு அவற்றின் உயர் வர்க்கச் சார்பு அவற்றோடொற்றி ஒரு புலமை மரபையும் பண்டித மனப்பாங்கை யும் ஊக்கிவித்தது அவற்றுக்கு வெளியேதான் சித்த மரபும் நாட்டார் கலை இலக்கியங் களும் இயங்கின. அவை இழிசினர் வழக் குக்கு உரித்தாகின.

மேற்கூறிய ஏற்றத்தாழ்வுகளை எப்போதும் ஒரேவாறாக இருந்தன என்பது என் கருத் தல்ல. ஆனால் அவை தமிழ்ச் சமூகத்தில் நிலவுடமை சார்ந்த வர்க்க ஏற்றத் தாழ்வு களின் அளவோடு மாறி வந்திருக்க இட முண்டு. ஒரே காலத்திலேயே வெவ்வேறு சமூகப் பிரிவினரை இலக்கு வைத்த செவ் வியற் கலைப் படைப்புக்களும் இருந் துள்ளன. உதாரணமாக மக்கள் பேசாத சமஸ்கிருதத்தில் எழுதிய முத்துசுவாமி தீட் சிதரும் கடினமான தெலுங்கில் எழுதிய ஷ்யாமா சாஸ்த்திரியும் எளிமையான தெலுங் கில் எழுதிய தியாகராஜரிடமிருந்து வேறு படுவதைக் கூறலாம். எவ்வாறாயினும் இப் படைப்புக்களில் எதுவும் சமூக வாழ்வு பற்றி யதல்ல என்பது முக்கிய மானது.

சமூகக் கலை இலக்கியங்கள் எனக்கூடிய நாட்டார் இசை, கிராமிய நடனங்கள், நாட் டார் பாடல்கள், கூத்து என்பன எல்லாப் போதும் சமூக வாழ்வைப் பேசாவிடினும் அவை சமூகத்து மாந்தரின் இருப்பைப் பற்றிய செய்திகளைக் கூறுகிறன. அவை நிரந்தரமாக ஒரே வடிவில் இருந்தவையல்ல. அவை வாழ்க்கை முறையின் மாற்றத் தோடும் அயல் உறவுகளின் தாக்கத்தின் பயனாயும் சான்றோர் வழக்குடன் ஏற்படும் பரிச்சயந்தாலும் மாறுவன. சமகாலத்து மேடை நாடகங்களும் சினிமாவும் சினி மாப் பாடங்களுங் கூட நாட்டார் கலை களைப் பாதிக்கிறன. ஆனால் எப்பாதிப்பும் நாட்டார் கலைகளை அவற்றின் சமூகத் தளத்தினின்று பெயர்ப்பதில்லை.

செவ்வியற் கலைகளின் தூய்மை, தொன்மை, மேன்மை என்பன பற்றிய படிமங்கள் அவற்றின் விரிவாக்கத்திற்கும் விருத்திக்கும் தடையாகவே இருந்தன. இன்று வணிக நோக்கங்கள் மரபு சார்ந்த இசை, நடன வடிவங்களில் சந்தையை நோக்கிய ஒரு பெயர்வைப் புகுத்தியுள்ளன. எவ்வாறாயி னும் பொழுதுபோக்கு, பொருளீட்டல் என்ற நோக்குகள் நடை முறையில் வென்ற அள வுக்குச் சமூகச் சார்பான திசையில் பரதத் தையோ கர்நாடக இசை யையோ பெயர்க்க இயலாமை ஆராய உகந்தது. இலங்கையில் கார்த்திகா கணேசர் தமிழகத்தில் சந்திரலேகா போன்றோர் புகுத்த முயன்ற சமூகப் பரி மாணம் எடுபடாமைக்கு அவர்களின் ஆக்கத் திறமைக் குறைபாடு காரணமாகாது. மாறா கப் பரதமும் கர்நாடக இசையும் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்குடி அடையாளங்களை உதறாமல் சமூக உள்ளடக்கத்தை ஏற்பது கடினம்.

செவ்வியற் கலைகளிலிருந்தே பிற கலை வடிவங்கள் தோன்றின என்ற பொய் திட்ட மிட்டுப் பரம்பப்படுவது. பரத முனிவரே பரதநாட்டியத்தைத் தோற்றுவித்தார் எனத் தனது ஆராய்ச்சி மூலம் நிறுவித் தமிழகத் தின் சிறந்த நடன விற்பன்னர் பத்மா சுப்ர மணியம் கலாநிதிப்பட்டம் பெற்றார். ஆனால் மனித சமூகப் பண்பாடுகளின் விருத்தியை வரலாற்றில் நோக்கும் எவருக்கும் அது பொய்யென விளங்கும்.

மேளகர்த்தா ராகங்களிலிருந்தே அனைத்து ராகங்களும் வந்தன என்ற கதை மேள கர்த்தா ராகங்கள் எப்போது அடையாளங் காணப்பட்டன என்ற விசாரணையின்றிக் கர்நாடக இசைத்துறையில் மேநிலையிலுள் ளோரால் பரப்பப்படுகிறது. ஆனால் அது ஆதாரமற்றது.

சமஸ்கிருதத்திலிருந்துதான் தமிழ் வந்தது என்று உறுதியாக நம்பிய சி.ராஜகோபா லாசாரி(ராஜாஜி) "பிறமொழிகளிலிருந்துதான் சமஸ்கிருதம் வந்தது என வாதிப்பது (இனிப் புப் பண்டமான) போளியிலிருந்து தான் சர்க்கரை (சீனி) வந்தது என்று சொல்வது போலாகும்." என்று கெட்டித்தனமாக வாதித் தார். மொழிகளின் வரலாரறிந்தோர், எந்த மொழியும் அடிநிலையிலிருந்து விருத்தி பெறுகிறதேயொழிய உயர்நிலையில் உருவா குவதில்லை என அறிவர். சமஸ்கிருதம் நிலைபெறு முன் இந்தியத் துணைக் கண் டத்தில் மனிதர் இருந்திராவிடின் சமஸ்கி ருதமே அனைத்து மொழிகளதும் தோற்று வாய் என்பதிற் பொருளுண்டு.

இப்பொய்கட்குப் பின்னால் வர்க்க, வர்ணா சிரம சாதிய நலன்கள் இருந்தன.

ஒவ்வொரு மொழியும் போல ஒவ்வொரு கலைத்துறைக்குமுரிய கலைவடிவமும் தனித் துவமானது. உயர்வு தாழ்வுகட்கான எந்தப் பொது அளவு கோல்களையும் வகுக்குமள வுக்கு ஒப்பீட்டுக்கான பொது அடிப்படை பல இடங்களிலும் இல்லை.

ஒரு மொழியோ, ஒரு நடன வகையோ, இசை வகையோ சிக்கலாயும் விரிவாயும் இருக்கலாம். ஆனால் அதன் சமூகப் பெறு மதி அதற்கும் சமூகத்துக்குமுள்ளஉறவு சார்ந் தது. அதை விடுத்துத் தொன்மையிலும் செவ்வியற் கலைகளுடன் அடையாளப்ப டுத்துவதிலும் சமூகப்பயனோ பெறுமதியோ இல்லை.

இப்பின்னணியில் சமூகக் கலைகள் எனக் கூடிய நாட்டார் கலைகள் மட்டுமன்றி நகர் சார்ந்து விருத்தி பெற்ற கலைவடிவங்களும் பலவாறான கூத்து வடிவங்களும் நாட்டார் இசை வடிவங்களும் நடன மரபுகளும் தமக்கான தனித்துவமான இருப்பையுடை யன என்பதும் அவை எங்கிருந்து வந்தன என்ற விசாரணை பயனற்றது என்பதும் விளங்கும்.


சமூகக் கலை வடிவங்களின் நிலைப்பு அவற் றின் சமூகச் சார்பிலும் கால இடச் சூழல் கட்கேற்பத் தம்மை மாற்றியமைக்கும் ஆற்றலிலும் தங்கியுள்ளது. மரபு நெகிழ் வானதும் வரலாற்றுத் தொடர்ச்சியுடையதும் என்பதை விளக்குவோமாயின் சமூகக் கலை வடிவங்க ளைப் பேணுவதன் நோக்கமும் சமூக இருப்பிற்கும் விருத்திக்கும் அவற்றின் பயன் விளங்கும். சமூகக் கலை வடிவங் களுக்கு அவ்வச் சமூகங்கள் சார்ந்த பெறும தியே முதன்மையானது. பிறரின் மெச்சு தலோ அங்கீகாரமோ அனுமதியோ அவசிய மற்றது. ஒரு சமூகம் எதிர் நோக்கும் சவால் ஏதெனின் அதன் வசமுள்ள பண்பாட்டு வளங்களை எவ்வாறு அடுத்தடுத்த தலை முறை கட்குக் கொண்டு சேர்ப்பது என்பதே.

செவ்வியற் கலைகளின் அயற்தன்மையைக் கூறுவதால் அவற்றின் பெறுமதியை நாம் மறுத்தற்கில்லை. செவ்வியற் கலைகள் பல ஊற்றுமூலங்களினின்று வளங்களைப் பெற் றுச் செழுமை கண்டவை என்ற வகையில், சமூகச் சார்பான கலை வடிவங்களின் விருத் திக்கு அவை பங்களிக்க இயலும். செவ் வியற் கலைகளில் அறிவும் ஈடுபாடு முடை யோர் அவற்றைத்தம்மளவிலேயே முழுமை யானவை எனநிறைவு காண்பதை விடுத்துச் சமூகக் கலைகளுடன் வளங்களைப் பகிர வும் பரிமாறவும் முன்வர வேண்டும். அல் லாவிடின் செவ்வியற் கலைகள் அவற்றைப் பயில்வோரின் வாழ்வின் ஒரு பகுதியாக அமைவது கடினம்.

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகா என்றெழுந்தது பார் யுகப்புரட்சி



உழைப்பின் ஆற்றல் ஒன்றாகத் திரண்டு
உலகமே சிலிர்க்க உயர்ந்து மேல் நின்றது
ஜார் மன்ன வரிசை தலை கீழாய் சாயவே
ஆகா என்றெழுந்தது பார் ரஸ்யாவின் யுகப்புரட்சி

லெனின் எனும் மேதை நெஞ்சை நிமிர்த்தினார்
வெற்றி கொண்டு சிவந்தார் விடியலில் சிரித்தார்
உலக உழைப்பாளர் உவகை கொண்டு மகிழ்ந்தார்
ஒரு நாள் நமக்கு வரும் ஊரதனை மாற்றவென்றார்

செங்கொடிகள் உயர சினமும் உயர்ந்தது பார்
சீறிப் பாய்ந்தார் செந்தனல் நிகர்த்தோர்
வெற்றி முழக்கங்களால் விண்ணதிர்ந்து போனது
வேரோடு சாய்ந்தது ஜார் மன்ன அநீதி அங்கே

சம்மட்டியும் அரிவாளும் சரித்திரத்தை எழுதியது
சமத்துவத்தின் வரலாறு சங்கை முழக்கியது
சிறுவர் மட்டுமென்ன சிரிக்க மட்டும் பிறந்தவரோ
செம்மை மிகு வாழ்வுக்காக சிங்கமென முன் சென்றார்

உறங்கும் எரிமலையாய் உழைப்பாளர் இருக்கின்றார்
உலகம் உய்திடவே ஒரு நாள் எழுந்திடுவார்
வரலாற்றை மாற்றி வையகம் வெற்றி கொள்வார்
வாழ்வதற்கான உலகை வடிவமைத்து தந்திடுவார்

**எஸ். இராஜேந்திரன்**
**(ரஸ்ய புரட்சியின் நூற்றாண்டு நினைவாக)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்டோபர் புரட்சி: உலகின் விடிவெள்ளி

ரஜனி எக்ஸ். தேசாய்

*கார்ல் மார்க்சின் மூலதனம் நூலின் 150-ம் ஆண்டு நிறைவு, நவம்பர் புரட்சியின் 100-ம் ஆண்டு விழா சிறப்புக் கூட்டம் நவம்பர் 19, 2017 அன்று சென்னையில் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு வாழ்த்து தெரிவித்து மும்பையிலிருந்து வெளிவரும் "ஆஸ்பெக்ட்ஸ் ஆஃப் இந்தியாஸ் எகானமி இதழின் வெளியீட்டாளர் தோழர் ரஜனி எக்ஸ். தேசாய் அனுப்பிய அறிக்கையின் தமிழாக்கம்.*

அக்டோபர் புரட்சியை நினைவு கூர்வதற்காகக் கூட்டப்பட்ட இந்தக் கூட்டத்தின் அமைப்பாளர் களுக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டிருப்பவர் களுக்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

20 - ஆம் நூற்றாண்டை அக்டோபர் புரட்சியைப் போலத் தீர்மானகரமாக மாற்றியமைத்த நிகழ்வு வேறெதுவும் இல்லை என்பது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. உலகின் ஆக மிகப் பெரிய மக்கள் தொகையின் வாழ்க்கையினை நேரடியாக மாற்றிய அசாதாரண சீனப் புரட்சிகூட, அதன் போல்ஷ்விக் முன்னோடி இல்லாமல் சாத்தியமாகியிருக்க முடியாது. இருப்பினும், பின்னர் நேர்ந்த பின்னடைவுகளுக்குப் பிறகு, மார்க்ஸ் 19 -ஆம் நூற்றாண்டின் தத்துவ மேதையாக மட்டும் பல அறிஞர் களால் பார்க்கப்படுவது போல, அக்டோபர் புரட்சி 20 -ஆம் நூற்றாண்டு நிகழ்வாக மட்டும் கருதப்படுகிறது. ஆகையால்தான் நாம் காலத்தால் அழியவொண்ணாத சில உண்மைகளைத் திரும்பவும் வலியுறுத்த வேண்டிய அவசரம் எழுந்திருக்கிறது.

முதலில், அக்டோபர் புரட்சியில்தான் மனித வரலாற்றில் முதன்முதலில் மக்கள் வெறுமனே காலத்தின் போக்கில் அனிச்சையாக எதிர்வினையாற்றாமல், ஒரு திட்டவட்டமான செயல்திட்டத்தின்படிச் செயல்பட்டு அதிகாரத்தைக் கைப்பற்றினர். மக்கள் தங்கள் சொந்த தலைவிதியைத் தாங்களே மாற்றிக் கொள்வதன் அறிவியல் கோட்பாடுகளைப் புரிந்து கொண்டால், அவர்கள் அவ்வாறு செய்து காட்ட முடியும் என்பதுதான் இந்த புரட்சியின் முக்கியத்துவமாகும். தங்கள் தலை விதியை அவர்களின் மனம் போன போக்கிற்கு மாற்றிக் கொள்ள முடியாது என்பது உண்மைதான். அவர்கள் குறிப்பிட்ட சூழ்நிலைகளின் மிகக் குறுகிய வரம்புகளுக்குக் கட்டுப்பட்டவர்கள் தான். முன்னால் பிப்ரவரி புரட்சி நடக்காமல் அக்டோபர் புரட்சி நடை பெற்றிருக்காது தான். பிப்ரவரி புரட்சியும் அதற்கு முன்னால் நிகழ்ந்த ஏதேச்சதிகார நாடுகளுக்கிடையிலான போர் உட்பட, பல மாற்றங்களால் தூண்டப்பட்டது தான்.

பிப்ரவரி புரட்சிக்குப் பிறகு கூட போல்ஷ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்குகள் தங்கள் விருப்பப்படி புரட்சியை துவங்கவில்லை. மக்கள் களத்தில் இறங்கத் தயாரான பிறகு தான், எதிரி குழப்பத்தில் இருந்த போதுதான், அவர்கள் எழுச்சியைத் துவக்கினார்கள். அக்டோபர் புரட்சி மிகத் துல்லியமாகவும், வலிமிகுந்ததுமான தயாரிப்புகளாலே சாத்தியமாயிற்று. திட்டமிடல் செயலளவில் மட்டுமல்ல, அமைப்பளவிலும், கோட்பாட்டளவிலும் செய்யப்பட்டது. பிறகு வந்த காலத்தில், லெனினிசக் கட்சி என்று அறியப்பட்ட கட்சியால் இந்தத் திட்டமிடல் செய்யப்பட்டது. (இந்தப் பரபரப்பான சூழலில்தான் 1917 -இல் ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம், அரசும் புரட்சியும் என்ற இரண்டு கோட்பாட்டு நூல்களை லெனின் வெளியிட்டார். அரசும் புரட்சியும் என்ற நூல் அவர் தேடப்படுபவராக அறிவிக்கப்பட்டு, தலைமறைவாக இருந்த காலக்கட்டத்தில் ஜூலை மாதம் எழுதப்பட்டது. ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம் என்ற நூல், வரப் போகும் புரட்சியின் சமூகப் பொருளாதார அடிப்படையை வரையறுத்தது; அரசும் புரட்சியும், புரட்சியின் அரசியல் நோக்கத்தை விளக்கியது.)

மக்கள் தங்கள் சொந்த முயற்சியால் வரலாற்றை மாற்றியமைக்க முடியும் என்ற இந்த உண்மை மனித வரலாற்றை அக் டோபர் புரட்சிக்கு முன், அக்டோபர் புரட் சிக்குப் பின் என்று இரு பகுதிகளாகப் பிரிக் கிறது. சில பத்தாண்டுகளுக்குப் பிறகு, கட்சி யின் உலக கண்ணோட்டம் மற்றும் பாதை யில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாகப் புரட்சி பின்னடைவுக்குள்ளானது என்பது அதன் வரலாற்று முக்கியத்துவத்தை எந்த வழியிலும் குறைத்துவிடவில்லை. வரலாற்றை உணர்வு பூர்வமாக படைக்கின்ற ஆற்றல் தங்களுக்கு இருக்கிறது என்பதை மக்களால் இனி மறக்கவியலாது. மக்களின் இந்த ஆற்றல் குறித்துத் தான் சுரண்டும் வர்க் கங்கள் அஞ்சுகின்றன. அதனால்தான் இக் கோட்பாடுகளை மக்களிடம் பரப்புபவர்களை அழித்துவிட அவர்கள் எத்தனிக்கிறார்கள்.

இரண்டாவதாக, உழைக்கும் வர்க்கத்தைச் சுரண்டுகின்ற ஒரு சமூக அமைப்பை உருவாக்குவதற்காக அல்லாமல், உழைப்புச் சுரண்டல் என்பதே இல்லாத ஒரு சமூகத்தைப் படைக்கும் பொருட்டு, ஒரு வர்க்கம் அன்றைய ஆளும் வர்க்கத்தை அகற்றி, தானே ஆளும் வர்க்கமாக மாற்றிக் கொண்டதென்பது வரலாற்றில் அதுதான் முதன் முறை. மழலைப் பருவம் தொடங்கிப் பிஞ்சு உள்ளங்களிலேயே திணிக்கப்பட்டிருந்த மரபு சார்ந்த கருத்துகள் எதையும் இந்தப் புதிய சமூகத்தால் பயன்படுத்திக் கொண்டிருக்க இயலாது.

முதலாளித்துவத்தைப் போன்று தன்னெழுச்சியாகத் தம்மைத்தாமே மறுஉற்பத்தி செய்து கொள்ளும் சக்திகளையும் இந்தப் புதிய சமூகம் நம்பியிருக்க முடியாது. வெகு மக்களின் உணர்வுபூர்வமான செயல்பாடுகளை மட்டுமே அது நம்பியிருக்க முடியும். எனவே, வரலாற்றில் நடைபெற்றுள்ள வேறெந்த ஆட்சி மாற்றத்தை விடவும் இந்த மாற்றம் மிக மிகக் கடுமையானதாகத் தான் இருந்திருக்க முடியும். இவ்வளவையும் எதிர்கொண்டு அது சாதித்த முன்னேற்றம் என்பது நிச்சயமாக அசாத்தியமானது.

மூன்றாவதாக, இந்தக் கடினமான பணி நடந்தது ஏகாதிபத்திய நாடுகளிலேயே தொழில் துறையில் மிகவும் பின் தங்கிய நாடு. உழைப்பாளர்களில் ஐந்தில் நான்கு பங்கினர் விவசாயிகளாக இருந்த நாடு. அந்தக் காலக்கட்டத்தில் செல்வாக்குப் பெற்றி ருந்த புரட்சிகரத் தன்மையற்ற மிதவாத மார்க்சிய வாதிகள், முதலில் ரசியா முதலாளித்துவ வழியில் போதிய வளர்ச்சி பெற்ற பின்னர் தான் பாட்டாளி வர்க்க ஆட்சி என்பதை நோக்கி முறையாக நகரமுடியும் என்று தொழிலாளி வர்க்கத்துக்குப் போதித்தார்கள். அன்றைய காலத்தின் முன்னனி மார்க்சிய வாதியான கார்ல் கவுட்ஸ்கி, "போல்ஷ்விக் புரட்சியானது பாட்டாளிகளின் மிக உயர்ந்த இலக்குகளுக்கும் நாட்டின் மிகத் தாழ்வான வளர்ச்சி நிலைக்கும் இடையேயான பாரிய வேறுபாட்டை மிகவும் தீவிரமானதாக ஆக்கி விடும்" என்று அறிவித்தார்.

ஆரம்பத்தில், போல்ஷ்விக்குகள்கூடத் தங்கள் புரட்சியைத் தொடர்ந்து ஐரோப்பாவின் தொழிற்துறையில் வளர்ச்சியடைந்த நாடுகளில் புரட்சிகள் வெடிக்கும் என்று எண்ணினார்கள். விரைவில் அத்தகைய மாற்றங்களை எதிர் நோக்கி கம்யூனிச அகிலம் என்ற அமைப்பையும் உருவாக்கினார்கள். ஐரோப்பாவில் சில நம்பிக்கையளிக்கும் மாற்றங்கள் நிகழ்ந்தன. ஆனால், அவை புரட்சிகளில் முடியவில்லை. ஆகையால், சோவியத் யூனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யனின் பாட்டாளிகள் மீண்டும் முதலாளித்துவத்திற்குத் திரும்புவது அல்லது தனியொரு நாட்டில் சோசலிசத்தைப் படைப்பது என்ற இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்யவேண்டிய இக்கட்டுக்கு ஆளானார்கள். மறுபடியும் மக்கள் தங்களது தலைவிதியைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ள முடியுமா, முடியாதா என்ற கேள்வியாகவே அது மாறியது. போல்ஷ்விக் தலைமையின் கீழ் மாபெரும் தியாகங்கள் பலவற்றின் ஊடாக, அதிசயிக்கத்தக்க வேகத்தில் தொழில் துறையில் முன்னேறிய ஒரு சோசலிச நாட்டை அவர்கள் படைத்தார்கள்

அக்டோபர் புரட்சியானது, பின்தங்கிய ஒடுக்கப்பட்ட நாடுகளின் மக்கள், காலனிய, அரைக்காலனிய ஆட்சியாளர்கள் தங்கள் நாடுகளை 'வளர்த்து விடுவார்கள்' எனக் காத்திராமல், தங்கள் விதியைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ளுமாறு விடப்பட்ட ஒரு அறைகூவலாக அமைந்தது. 1917 -க்கு பிறகு, சில ஆண்டுகளிலேயே சீனா, இந்தியா, ஈராக், இந்தோனேசியா போன்ற நாடுகளில் ஒரு பெரிய ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு கிளர்ந்து எழுந்தது. உண்மையிலேயே, மூன்றாம் நாடுகள் என்றழைக்கப்படும் நாடுகளின் மக்கள் அக்டோபர் புரட்சிக்குப் பெரிதும் கடன்பட்டிருக்கிறார்கள்.

நான்காவதாக, அக்டோபர் புரட்சியானது, தங்களது சொந்த அதிகார உறுப்புகளான சோவியத்துகள் என்ற மக்கள் மன்றங்களின் மூலம், நேரடியாக ஆட்சியதிகாரத்தில் பங்கு பெற்று, தங்களைப் பாதிக்கும் உண்மையான, பொருளாயத விவகாரங்கள் அனைத்தின் மீதும் முடிவெடுக்கும் அதிகாரத்தை மக்களே பெற்றிருந்த முதல் அரசை உருவாக்கியது.

சோவியத் மக்கள் தங்கள் அரசுக்கு தாங்களே சொந்தக்காரர்களாக இருந்தார்கள் என்ற உண்மையை நாம் புரிந்து கொள்ளாதவரை, எப்படி அந்த இளம் அரசு ஐந்து ஏகாதி பத்திய இராணுவங்களின் படையெடுப்பையும், உள்நாட்டு எதிர்புரட்சிப் படைகளின் தாக்குதலையும் மீறிப் பிழைத்தெழுந்தது என்பதையும், எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் ஐரோப்பிய அரசுகளை ஒன்றன் பின் ஒன்றாக வீழ்த்த முடிந்த இட்லரின் படைகளை சோவியத் மக்களால் எப்படி முறியடிக்க முடிந்தது என்பதையும் புரிந்து கொள்ளவியலாது.

(இந்த ஏகாதிபத்திய படையெடுப்புகளை மனதில் கொள்ளாமல் சோவியத் யூனியனின் சாதனைகளை மதிப்பிடுவது சாத்தியமில்லை. இத்தகைய முதல் படையெடுப்பின் இறுதியில், அதாவது 1921 -இல், நாட்டின் தொழில்துறை உற்பத்தி போருக்கு முந்தைய ஆண்டுகளைவிட 80 சதவீதம் வீழ்ச்சியடைந்திருந்தது. அடுத்த சில ஆண்டுகள் போருக்கு முந்தைய உற்பத்தி நிலையை மீட்டெடுக்கும் முயற்சியிலேயே கழிந்தன.

அதன் பின்னர்தான் திட்டமிட்ட, வேகமான வளர்ச்சி நிகழ்ந்தது. ஆனால், போர் மூளும் என்ற அச்சுறுத்தலும், அதன் பொருட்டு சில வகை கனரகத் தொழில்களை அவசரமாகத் தொடங்குவதற்கான தேவையும் அமைதி நிலவிய குறுகிய காலப்பகுதியிலும் தொடர்ந்தது. 1937 வாக்கில் நாஜி ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல் கவிந்தது. மத்திய திட்டப் பொறுப்பாளர்கள் மீண்டும் போருக்கு தயாரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பரவலாக தெரிந்தது போல ஸ்டாலின் தலைமையிலான சோவியத் யூனியன் பாசிசத்தைத் தோற்கடிப்பதில் முதன்மைப் பங்காற்றியது. இந்தப் போரில், உலகிலேயே மிகப் பெரிய பொருளாதாரப் பேரழிவையும் மனித உயிர் இழப்புகளையும் சந்தித்தது. இதற்காகவும் உலக மக்கள் சோவியத் மக்களுக்கு என்றென்றும் கடன் பட்டிருக்கிறார்கள்.)

எந்த வகையில் பார்த்தாலும், அக்டோபர் புரட்சி என்பது 20 -ஆம் நூற்றாண்டிற்கு மட்டுமானது அல்ல. தனது எதிர்காலத்தைத் தானே உருவாக்கிக் கொள்ள விரும்பும் வேட்கை மனித இனமாகிய நம்மிடம் இருக்கும் காலம் வரை அது நம்முடன் இருக்கும். அதனைச் சாதிப்பதற்கான அறிவை அது நமக்கு வழங்கும். அதன் நேர்மறை மற்றும் எதிர்மறை அனுபவங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ள முடியும் என்பதில் ஐயமில்லை. மாவோ கலாச்சாரப் புரட்சியின் போது முயற்சித்ததைப் போல, நாமும் அதை முன்னோக்கி எடுத்துச் செல்ல முடி யும். ஆனால், இந்த எல்லா முயற்சி களும், 21 -ஆம் நூற்றாண்டில் தொடரும் முயற்சிகள் உள்ளிட்ட அனைத்தும், அக்டோபர் புரட்சியின் வாரிசுகளே!

வாழ்த்துக்களுடன்,
ரஜனி எக்ஸ். தேசாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வறிவாளர்கள் பற்றி சில குறிப்புகள்

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

ஆய்வறிவாளர்கள் என்ற பதம் எம் சமூகத்தில் அடிக்கடி உச்சரிக்கப்படுகிறது. ஊடகங்களிற் கருத்துத் தெரிவிப்போராக, எதைப் பற்றியும் கருத்துரைக்கத் தகுதியுள்ளோராக, அனைத்தும் அறிந்தோராக இன்று புத்திஜீவிகள் எமக்கு அறிமுகமாகிறார்கள். இவ்வாறு உயர்நிலையில் வைத்துப் போற்றப்படும் இவர்களின் சமூகப் பெறுமானம் என்ன, உண்மையில் புத்திஜீவிகள் எனப்படுவோர் யார் என்பன முக்கிய கேள்விகளாம். அதேவேளை உழைக்கும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் ஆய்வறிவாளர்களின் பங்களிப்பு என்ன? அவர்களது பங்களிப்பு தொழிற்றுறையை வளர்க்கவும் இலாபத்தைப் பெருக்கவும் பங்காற்றியுள்ளதா, அல்லது தொழிலாளர்களின் உரிமைகளைப் பேணவும் வளர்க்கவும் உதவியிருக்கிறதா என்பன ஆராய வேண்டியன.

## ஆய்வறிவாளர் என்போர் யார்?

பொதுவாக எந்த நாட்டினதும் ஆய்வறிவாளர்கள் என்போர் நடுத்தர அல்லது உயர் நடுத்தர வகுப்பினராகவே இருப்பர். தொழிலாள விவசாயப் பின்னணியிலிருந்து வந்த ஆய்வறிவாளர்கள் கூடத் தமது அறிவு-சார் தொழில் மூலம் உயர் நிலைக்கு வந்து தமது பழைய வர்க்க அடையாளத்தை மறைக்க முயல்வதை நாம் காணலாம்.

ஏற்றத்தாழ்வு மிக்க சமுதாயங்கள் அனைத்திலும் உழைக்காத சுரண்டும் வர்க்கம் உச்சத்திலும் உழைத்து உடல் நலியும் சுரண்டப்படும் வர்க்கம் அடி நிலையிலும் இருக்கும் போது, சமூக மேம்பாடு என்பது உடல் நலுங்காமை என்ற கருத்து முழுச் சமூகத்தையும் பீடிக்கிறது.

இதன் விளைவாகப் ஆய்வறிவாளர்கள் எனப்படுவோர் நடுவே உடல் உழைப்பைக் கேவலமாக நோக்கும் போக்கை நாம் காணலாம். உடல் உழைப்பினின்று ஒதுங்குவதால் சமூக மேம்பாடு பெறலாம் என்ற சிந்தனை, ஏகாதிபத்தியம் ஊக்குவிக்கும் நடுத்தர வரக்கச் சிந்தனைப் போக்கிற்கு மிக உடன்பாடானது.

மறுபுறம், மூன்றாமுலக நாடுகளின் சமூக விடுதலைக்குப் புத்திஜீவிகள் ஆய்வறிவாளர்கள் ஆற்றக்கூடிய பணிகள் பல உள்ளன. கொலனிய யுகத்தின் புத்திஜீவிகள் ஆய்வறிவாளர்கள் பலர் இவ்வாறான பணிகளை ஆற்றியுள்ளனர். அதை இயலுமாக்கியது எது?

தொழிலாளி வர்க்கத்தோரல்லாத மார்க்ஸூம் ஏங்கல்ஸூம் தொழிலாளி வர்க்க விடுதலைக்கான சிந்தனை மார்க்கத்தைக் கண்டறிந்து ஒரு புதிய உலக நோக்கை காட்டினர். தொழிலாளி வர்க்கத்தைச் சேராத புத்திஜீவிகளால் ஆய்வறிவாளர்களால் அதை மனித விடுதலைக்கான உலகளாவிய நடைமுறை இயக்கமாக மேலும் வளர்க்க முடிந்தது.

இந்தியாவின் அதி உன்னத விடுதலைப் போராளி பகத் சிங்கும் சீனாவின் ஜோ என்லாயும்; புத்திஜீவிகள் ஆய்வறிவாளர்கள் தாம். அவர்களுடைய மனதில் பாட்டாளி வர்க்கச் புரட்சிச் சிந்தனையும் புரட்சியின் வித்துக்களும் வேர் விட்டுத் தழைத்தது எப்படி?

தன்னுடைய விவசாயி வர்க்கப் பின்னணி பற்றிப் பேசிக், கற்றோர் சமூகமான மண்டரின் சமூகப் பிரிவைச் சேர்ந்த ஜோ என்லாயை மட்டந்தட்ட முயன்ற குருஷ்சொவிடம், "தோழரே, நாம் இருவருமே நமது சொந்த வர்க்கங்கட்குத் துரோகம் செய்து விட்டோம்" என ஜோ என்லாய் உறைப்பாகப் பதிலளித்தாராம்.

இக் கதை மூலம் ஒரு ஆழ்ந்த உண்மை புலப்படுகிறது. அதாவது, ஒருவர் எவ் வர்க்கத்திற் பிறந்தவர் என்பதைவிட அவர் எவ் வர்க்க நலன்களுடன் தன்னைப் பிணைக்கிறார் என்பதே முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வறிவாளர்களைப் பொறுத்தவரை, அவர்கள் பெற்ற கல்வி அறிவும் விடயங்களை வாசித்து அறியவும் ஆராயவும் விவாதிக்கவும் உள்ள வசதிகளும் கால அவகாசமும் தம்மைச் சூழ உள்ள சமுதாயத்தையும் உலகையும் அறிய வாய்ப்பளிக்கின்றன. அதன் விளைவாகப் பலருக்கு மாணவப் பருவத்திலும் இளமையிலும் ஆழ்ந்த சமூக அக்கறை ஏற்படுகிறது.

குறிப்பாக, ஒரு நாடு அந்நிய ஆதிக்கத்திற்கு உட்பட்டுள்ள போதோ போர்ச்சூழலிலோ சமூக நெருக்கடிகளின் போதோ, விடுதலை சார்ந்த சிந்தனைகளும் கொடுமைகளை எதிர்த்துப் போராடும் இலட்சியங்களும் இளம் ஆய்வறிவாளர்களை எளிதாக ஈர்க்கின்றன. இவ்வாறு விளையும் ஈடுபாடு ஒருவர் முற்போக்குச் சிந்தனையுள்ளவராகவோ சமூக விடுதலைப் போராளியாகவோ வளர வழி வகுக்கலாம் அதே வேளை, ஒருவரது வர்க்கப் பின்னணி, குறிப்பாக நடைமுறையில் உள்ள சமுதாய அமைப்பில் ஒருவர் எவ்வாறு தன்னை மேம்படுத்திக் கொள்வது என்ற அக்கறை மிகுந்த நடுத்தர வர்க்கப் பின்னணி, இத்தகைய சமுக ஈடுபாட்டுக்கு எதிராக இயங்குகிறது.

எனவே பெரும்பாலான இளம் ஆய்வறிவாளர்களின் நிலைப்பாடு குறுகிய கால நோக்குடன்; சொந்த நலனுக்கும் நீண்டகால நோக்குடன் சமூக நலன் சார்ந்த செயற்பாட்டுக்கும் நடுவே ஊசலாடுவது இயல்பு. ஒருவரை முற்போக்கான திசையில் தொடர்ந்தும் பயணஞ் செய்யவும் பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்திற் சிந்திக்கவும் செயற்படவும் இயலுமாக்குவற்றுள் ஒருவரது சமூகச் செயற்பாடு தீர்மானமானது.

எவரும் பிறவியிலேயே முற்போக்காளரல்ல. சரிக்கும் பிழைக்கும் வேறுபாடு கண்ட மாத்திரத்திலேயே ஒருவர் சரியான பாதையைத் தேர்வதில்லை. சரியான பாதையை ஏற்ற எல்லாருமே சரியான பாதையில் பயணத்தைத் தொடர்வதில்லை.

ஏனெனில், மனித வாழ்வு ஒற்றையடிப் பாதையல்ல. சமூக விருத்தியும் ஒற்றை படிப்பாதையயல்ல. சமூக வாழ்விற் மீள மீள நெருக்கடிகள் வருகின்றன. தனிமனித நெருக்கடிகளும் சமூக நெருக்கடிகளும் ஒருவரை மீள மீளச் சோதனைகட்கு உட்படுத்துகின்றன. இங்கே, ஒருவரை உறுதியாக நிற்க உதவுவது அவரது தனிப்பட்ட மன வலிமைக்கும் மேலாக நடைமுறை அரசியலில் அவரது ஆழ்ந்த ஈடுபாடும் அயராத செயற்பாடுமே. அந்த அனுபவமே சிந்தனைக்கும் செயலுக்கும் உள்ள உறவை வலுப்படுத்துகிறது. அதுவே தவறுகளைக் காணும் போது ஏற்கவும் திருத்தவும் போதிய மனப்பக்குவத்தையும் நெஞ்சுறுதியையும் தருகிறது. அது மட்டுமே குழப்பத்தினூடு தெளிவைக் கண்டு முன்னோக்கிய பாதையில் வழி நடத்துகிறது.

**சொந்த நலனுக்கும் நீண்டகால நோக்குடன் சமூக நலன் சார்ந்த செயற் பாட்டுக்கும் நடுவே ஊசலாடுவது இயல்பு. ஒருவரை முற்போக்கான திசையில் தொடர்ந் தும் பயணஞ் செய்யவும் பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்திற் சிந்திக்கவும் செயற்பட வும் இயலுமாக்குவற்றுள் ஒருவரது சமூகச் செயற்பாடு தீர்மானமானது.**

1940கள் தொட்டு 1970கள் வரை இந்த நாட்டில் உருவாகி வளர்ந்த முற்போக்குப் புத்திஜீவிகள் பலர் இன்று புரட்சிகர அரசியலில் இருந்து ஒதுங்கிவிட்டனர். சிலர் மிகச் சீரழிந்து விட்டனர். இடதுசாரி இயக்கத்தின் பெரும் பகுதி பாராளுமன்றப் பாதையைத் தெரிந்ததால் அதனோடு ஒட்டிச் சென்ற பலர் அரசியலிலிருந்து ஒதுங்கினர் அல்லது சீரழிந்தனர். மறுபுறம் சரியான புரட்சிகர நிலைப்பாட்டை எடுத்த சிலரும் சீரழிந்தமை ஊன்றிக் கவனிக்க வேண்டிய விடயமாகும்.

இதற்கான காரணங்களுள் முக்கியமான ஒன்று, தங்களது புரட்சிகர அரசியலுக்கு ஏற்பட்ட பின்னடைவுகட்கு முகங்கொடுக்க இவர்கட்கு இயலாது போனமையாகும். இடதுசாரி இயக்கத்தின் எழுச்சிக் காலத்தில் தம்மை முன் வரிசைப் போராளிகளாகக் காட்டிய பலர், அதன் நலிவின் போது பின்தங்கலாயினர். 1977ம் ஆண்டு யு.என்.பி. பெற்ற தேர்தல் வெற்றியின் பின் துவளத் தொடங்கிய சிலர், 1983ல் தேசியவாத நிழலில் தஞ்சம் புகுந்தனர். பின்னர், வெவ்வேறு காரணங்களால், தேசிய இன விடுதலைப் போராட்டத்தை மட்டுமன்றி மாக்ஸிய அரசியலையும் வெறுக்கலாயினர். கட்சிக் கட்டுப்பாடு, சமரசமற்ற கொள்கைப் பிடிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றில் உறுதியாக நின்றவர்கள் கால் நூற்றாண்டு கடந்தும் அதே உறுதியுடனர் அரசியலில் நிலை தடுமாறாமல் நிற்பதை இவர்களாற் தாங்க இயல வில்லை.

புரட்சிகரப் பொதுவுடமை இயக்கம் மீண்டும் வீறு பெற்று எழுந்தால் அதில் தங்களுக்கு இடம் இராது என்று அஞ்சிப், புரட்சிகர மாக்ஸியத்துக்குக் குழி பறக்கத் தம்மாலான எதையும் செய்ய முற்படும் இவர்களது பலவீனம் ஏகாதிபத்தியத்துக்குச் சேவகம் செய்யும் என்.ஜீ.ஓ.க்களுக்கு மிக வாய்ப்பானது. என்.ஜீ.ஓ.க்களுக்கு இவர்களது முன்னாள் இடதுசாரி அடையாளம் பயன் படுகிறது. இவர்கட்கு என்.ஜீ.ஓ.ப் பணம் பயன்படுகிறது.

ஆய்வறிவாளர்கள் இவ்விதமாக உதிரிகளாகிச் சீரழிய ஒரு முக்கிய காரணம், அவர்களது தனிநபர் வாதம். கட்சிகளையும் இயக்கங் களையும் சார்ந்து பொதுமக்களின் நலன் கருதி விடயங்களை அணுக இயலாதபோது ஆய்வறிவாளர்கள் பிழைப்புவாதிகளாகவும் ஈற்றில் உதிரிகளாகவும் சீரழிகிறார்கள். இதிலிருந்து மீள, விமர்சனம்-சுயவிமர்சனம் என்ற நடைமுறைக்கு இவர்கள் பயிலவேண்டும். தாங்கள் என்றுமே தவறு செய்யாதோர் என நினைக்கும் ஆய்வறிவாளர்கட்கு இது இயலாது.

ஆய்வறிவாளர்களை சமூகப் பயனுள்ளவர் களாக வளர்ப்பது புரட்சிகர இயக்கப் பணியாகும். ஆய்வறிவாளர்களை ஆரோக்கிய மான திசையில் வளர்க்காமல் அவர்கட்கு எல்லாம் தெரியும் என்ற விதமாக அவர் களை அணுகுதல் அவர்கட்கு மட்டுமன்றிப் புரட்சிகர இயக்கத்துக்கும் ஊறு விளைக்கும்.

ஏட்டுப் படிப்பாலும் வெறும் வார்த்தைகளாலும் சுரண்டும் வர்க்கச் சிந்தனையைத் தூக்கியெறிய இயலாது. தொடர்ச்சியான அரசியற் செயற்பாட்டாலேயே அது இயலும். புரட்சிகர இயக்கம் ஆய்வறிவாளர்கள் வழி நடத்த வேண்டுமெயொழிய புத்திஜீவிகள் ஆய்வறிவாளர்களால் புரட்சிகர இயக்கத்தை வழிநடத்தலாகாது.

**அமைப்பும் ஆளுமையும்: அமைப்புக்களில் தனிமனிதப் பங்களிப்பு**

மனித அக்கறைகள் பல வகை. எல்லாரும் ஒரே வகை அக்கறைகட்கு முதன்மை வழங்குவதில்லை. எனினும் நமது இருப்புக்கும் நிலைப்பிற்கும் அத்தியாவசியமானவை என்று கருதும் விடயங்கட்கும் அப்பால் நமது அக்கறைகளும் தேடல்களும் செல்லும் போது, நாம் சமுதாயத்தின் இயக்கத்திலும் விருத்தியிலும் கூடிய பங்களிப்பை வழங்குகிறோம். இதுவே ஆய்வறிவாளர்களிடமும் வேண்டப்படுகிறது.

அறிவியல் சார்ந்தோ அரசியல் சார்ந்தோ அறவியல் சார்ந்தோ சமூகப் பணி சார்ந்தோ வேறு எவ்வகையிலுமோ சமூகத்தின் பொது நலன் சார்ந்திருக்கும் பொது அமைப்புக் களிற் பங்குபற்றுவோரின் ஆளுமையிற் தான் ஒரு சமூக உறுப்பினர் என்ற உணர்வு படிகிறது.

சமூக நலன் சார்ந்த பணியாற்றும் அமைப் புக்களில் எவரது தனிப்பட்ட பங்களிப்பும் அவர் தனியாக வழங்கக்கூடியதினும் பன் மடங்காக விரியலாம். அமைப்பின் நோக் கமும் தன்மையுமே ஒருவரது பங்களிப்பின் பெறுமதியின் பெருக்கத்தைத் தீர்மானிக் கின்றன.

ஒரு செயற்பாடு ஒரு கூட்டு முயற்சி எனவும் அதிற் தான் ஒரு முக்கிய பங்காளி எனவும் தனது பங்களிப்பு அமைப்பின் உள் ளும் பங்களிப்பின் பெறுமதியால் அமைப் பிற்கு வெளியிலும் மதிப்படைகிறது என வும் உணர்வது எந்த ஒரு உறுப்பினரையும் உற்சாகப் படுத்துவதுடன் பிறரை ஊக்குவிக் கவும் பிறருடன் ஒத்துழைக்கவுந் தூண்டு கின்றன. சனநாயகமாகச் செயற்படும் அமைப்புக்களில் இப் பண்புகளைக் காணலாம். சனநாயகம் என்பது தலைமை, தலைமைத்துவம், கட்டுப்பாடு, பொறுப்பு கள் என்பன அற்ற ஒரு அமைப்பைக் குறிக்காது.

நல்ல அமைப்புகள் ஒழுங்கை வேண்டுவன. தலைமை என்பது ஆதிக்கமல்ல என விளங் கும் அதேவேளை, நெறிப்படுத்தும் பொறுப் பும் அதற்கு உள்ளது. பொறுப்புக்கூறலும் சுயவிமர்சனமும் எந்த அமைப்பின் செயற் றிறனையும் வலுவையும் எதிர்காலத்தையும் தீர்மானிக்கும் சக்திகளாம்.

மதம், மரபு போன்ற அக்கறைகள் சார்ந்த அமைப்புக்களில், முக்கியமாகப் பழமை பேணும் நோக்குடையவற்றில், பிரபுத்துவச் சிந்தனையின் தாக்கமும் அதனோடு ஒட்டிய ஏற்றத் தாழ்வுகளும் ஆளுமை விருத்தியைப் பாதிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக விடுதலை, சமூக நீதி போன்ற இலக்குகளை உடைய அமைப்புகள் கொள்கை அளவிலேனும் மனித சமத்துவத்தை வற்புறுத்துவதால் அவற்றிற் பங்குபற்றுவோரிடையே சமத்துவமான உறவுகளைப் பேணும் வாய்ப்புகள் அதிகம். எனினும் இவ்வாறான விடயங்களில் ஒரு அமைப்புத் தன்னைத் தானே மீள மீள விசாரணைக்கு உட்படுத்த ஆயத்தமற்ற போது சமூக நடைமுறையிலுள்ள ஏற்றத்தாழ்வான சிந்தனைகளும் நடைமுறைகளும் அதிற் தொற்றுவதைத் தவிர்க்க இயலாதது.

நெகிழ்வான முறையிற் பொதுநோக்குகட்காக உருவாகும் பொது அமைப்புகள் உள்ளன. இவை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் வளரும்போது, அவற்றினுள் சனநாயகமானதும் மனித சமத்துவத்தையும் சுய மரியாதையையும் கவுரவிப்பதுமான நடத்தையைத் தொடர்ந்து வற்புறுத்தாவிடின் அவை பலவாறான சீரழிவுகட்குட்படலாம். அமைப்பு ஒரு நிறுவனமாகி அதற்குப் பொருள் வசதிகளும் வளங்களும் சமுதாயத்திற் செல்வாக்கும் உயரும் போது, பணம், புகழ், அதிகாரம் என்பனவற்றாற் கவரப்பட்டவர்கள் அதன் பால் ஈர்க்கப்படுகின்றனர். அதன் பயனாகப் பலவித ஒழுங்கீனங்களும் அதிகாரப் போட்டியும் குழு மனப்பான்மையும் விளையலாம். அவை, குறிப்பிட்ட அமைப்பைப் பற்றி மட்டுமன்றி, இத்தகைய அமைப்புகள் பற்றியும் பொதுவான அவநம்பிக்கையை உறுப்பினர்களிடையே உருவாக்குகின்றன.

தன்னார்வ அடிப்படையில் உருவாகும் மேற்குறித்தவாறான அமைப்புகள் மட்டுமன்றித் தொழில் சார்ந்த பொது நிறுவனங்களிலும் தொழிற் சங்கங்களிலும் அரசியற் கட்சிகளிலும் தனிமனிதவாதமும் சுயநலமும் புகழ் நாட்டமும் அமைப்புகளை மட்டுமன்றி அவற்றின் ஒவ்வொரு உறுப்பினரையும் பாதிக்கக்கூடியன. தொடக்கத்தில் மிகுந்த நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புக்களுடனும் உருவான நிறுவனங்கள் பல பலவீனப்படவும் சீரழியவும் தனிமனிதவாதம் ஒரு முக்கிய காரணமாக இருந்துள்ளது. எனவே, பொது அமைப்புகளைக் கொண்டுநடத்த நெறிப்படுத்தல்கள் தேவைப்படுகின்றன.

எந்நேரத்திலும் ஒரு அமைப்பும் அதிற் தலைமைப் பொறுப்புகளை ஏற்றோரும் மட்டுமன்றிச் செயற்படும் ஒவ்வொரு உறுப்பினரும் அமைப்பின் நோக்கம் பற்றி மிக்க தெளிவுடன் இருப்பதும் அமைப்பின் நடத்தை விதிகளை விளங்கி அவற்றைச் செம்மையாகக் கடைப்பிடிப்பதும் முக்கியம். குறிப்பாக, சமூகச் சீர்திருத்த, சமூக முன்னேற்ற, சமூக மாற்ற இலக்குகளை உடைய அமைப்புக்களிடம் இவற்றுக்கும் மேலாகக் கட்டுப்பாடான, பொறுப்பான நடத்தையைச் சமூகம் எதிர்பார்க்கிறது.

**ஒரு மனிதர் தன்னைச் சமூகத்தின் ஒரு உறுப்பினராகவும் ஒரு தனி மனிதராகவும் உயர்த்தக் கட்டுப்பாடும் சமூகப் பொறுப்பும் சக மனிதரைத் தனக்குச் சமமாகக் கருதும் மனப்பாங்கும் மிக முக்கியம். அமைப்பிற் கும் அதில் இணைந்தவர்கட்குமிடையே ஆரோக்கியமான உறவு பேணல் அதை இயலுமாக்கப் பெரும் பங்களிக்கும்.**

ஒரு மனிதர் தன்னைச் சமூகத்தின் ஒரு உறுப்பினராகவும் ஒரு தனி மனிதராகவும் உயர்த்தக் கட்டுப்பாடும் சமூகப் பொறுப்பும் சக மனிதரைத் தனக்குச் சமமாகக் கருதும் மனப்பாங்கும் மிக முக்கியம். அமைப்பிற் கும் அதில் இணைந்தவர்கட்குமிடையே ஆரோக்கியமான உறவு பேணல் அதை இயலுமாக்கப் பெரும் பங்களிக்கும்.

## தன்முனைப்பின் தளகர்த்தாக்களான ஆய்வறிவாளர்கள்

சமுதாயச் செயற்பாடுகளின் மூலம் சமுதாயத்தில் உள்ள பல்வேறு அமைப்புக்களின் பங்குபற்றுவதன் மூலமே தனிமனித உயர்வு இயலுகிறது. சமுதாயத்திலிருந்து தாம் பெற்றவற்றைப் பற்றிய உணர்வேதுமில்லாமல், தம்மைச் சுயம்பானவர்களாகக் கருதும் தன்முனைப்புடையோரைக் காணுகிறோம். அவ்வாறு தற்பெருமை பேசுவோர் மனமறியப் பொய்கூறிப் பின்னர் தமது பொய்களைத் தாமே நம்பி அந்த மயக்கத்தில் ஆழ்ந்து கிடக்கக் காணலாம்.

எல்லா மனிதரிடமும் ஆற்றல்கள் உள்ளன. அவை தன்மையிலும் அளவிலும் வேறுபடலாம். ஆனால் எந்த ஆற்றலும் எவ்வாறு பயன்படுகிறது என்பதே அதன் முக்கியமான பக்கம். இங்கே தான், அமைப்புக்களின் முக்கியம் கவனிப்புக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புக்கள், தமது நோக்கமும் இயல்பும் வலிமையுஞ் சார்ந்து, தமது உறுப்பினர் களிடையே பொறுப்புணர்வு, சமூக அக்கறை, மனித உறவுகள், கட்டுப்பாடான நடத்தை, ஒழுங்கான சிந்தனை போன்ற வற்றை வலுப்படுத்த இயலும். மேற் சொன்ன ஒவ்வொன்றும் ஓரளவுக்கேன் ஒருவரின் சுதந்திரத்தில் குறுக்கிடுவது போல் தோன்றலாம். ஆனால், ஒட்டுமொத் தத்தில், அச் "சுதந்திர மறுப்பே" உண்மையிற் பெருமளவு சுதந்திரத்தை உறுதி செய்கிறது.

தனிமனிதவாதம் ஒரு நோய். அது நம்மை எப்போது வேண்டினும் தொற்றலாம். அது மனித ஆளுமையைச் சிதைப்பதுடன் தன்னடையாளத்தைப் பொருளற்றதாக்கிவிடும்.

கூட்டுச் செயற்பாடுகளும் சமூக நடவடிக்கைகளிற் பங்குபற்றுவதும் ஒவ்வொருவரையும் தன்னடக்கமுள்ளவராகவும் அதேவேளை சிறந்த ஒரு தனி மனிதராகவும் உயர்த்த வல்லன. எனவே நம் ஒவ்வொருவர் முன்பும் உள்ள தெளிவு எளிது. நாம் கற்பனையான ஒரு சுயத்தைத் தேடி நம் வாழ்வைச் சமூகப் பயனற்றதாக்கப் போகிறோமா அல்லது சமுதாயத்தில் நமது இருப்பைச் சரிவர அடையாளங் கண்டு சமூகச் செயற்பாட்டின் மூலம் சமூகத்தையும் நம்மையும் மேம் படுத்தப் பணியாற்றப் போகிறோமா என்பதே அது.

சமுதாயத்தில் ஒருவர் தானும் பயன்பெற் றுப் பிறகும் பயன்பெற வாழச் சமுதாயத் தில் தானும் ஒரு அங்கம் என்பதையும் தனது நலன்கள் சமுதாயத்தின் நலனுடன் நெருக்க மாகப் பிணைந்து இருப்பதையும் நன்குணர வேண்டும். இவ் அணுகுமுறை ஊர், பிரதேசம், இனம், நாடு என்ற எல்லைகளைத் தாண்டி விரியுமாயின் நாம் ஒவ்வொருவரும் சிறந்த உலகக் குடிமக்க ளாக இயலும்.

**நிறைவாக**

ஒருபுறம் நவீனமயமாக்கம், மறுபுறம் ஊதிய வெட்டுகள் எனத் தொழிலாளர் உரிமைகள் தொடர்ச்சியாகப் பறிபோகும் சூழலில் ஆய்வறிவாளர்கள் வளமான பணியை ஆற்ற முடியும். ஆனால் அது தனிமனித நலன் களுக் கானதாய் இருக்க வியலாது. பரந்துபட்ட மக்கள் ஒற்றுமையையும் விடுதலையையும் நோக்கியதாக அமைவதே சமூகப் பயன் விளைக்கும். அதற்குப் புத்திஜீவிகளின் சமூக அக்கறையும் அதை நடை முறையில் செயற்படுத்தும் இயல்பும் முன்னிபந்தனைகளாம்.

# பண்பு

**அழ. பகீரதன்**

ஒருவரை அவர்
ஒத்தவர் இலையென
ஒருப்பட மறுப்பதே
பண்பெனவோ?
தூய்மையே பண்பெனத்
தகுமெனில்
பழமைக்குள் வீழ்ந்து
வழமைகள் காண்பதுவோ?
கண்டிட
எண்ணிய வண்ணம்
எவரும் இலையென
ஏற்கா எம்நிலை
நலமென கொள்வதுவோ?
தெளிவு ஞானம்
இருந்தால்
ஒளிவு மறைவின்றி
பேசிடல் கூடும்.
நோக்கு நல்லதெனில்
போக்கு மாறிடும்.
மேன்மை மனித பண்பதுவே!
ஒத்த தன்மையில் யாரையும்
ஒப்ப எண்ணிடில்
மெத்தப் படிக்கவிலையெனிலும்
சொத்து இலையெனிலும்
வீரம் இலையெனிலும்
மேன்மை கண்டிடல் கூடும்
வித்தகம் யார்க்கும் வாய்க்கும்.
பண்புடைமை
பழமை பேணலில் உளதெனும்
பாழ் மனம் மாறும்.
பண்பு புதுமையில் மிளிரும்.
மாறிவரும் உலகின்
மாற்றங்கள் நிகழ்ந்ததென
தேறியறிய
பண்பு இன்றிவ்வாறென
ஒப்ப எவரையும் ஏற்பமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2018 பாதீடும் நடைமுறை சிக்கல்களும்

அனுதினன் சுதந்திரநாதன்

2018ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டமானது, இலங்கையின் நிதியமைச்சர் மங்கள சமரவீரவால், அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது. கடந்த ஆண்டுகளைப் போன்றதாக இல்லாமல், மிக இலகுவான புரிதலுடன், மிகக் குறைந்த சர்ச்சை களுடன் இந்த வரவு-செலவுத் திட்டம், சபையில் சமர்பிக்கப்பட்டமைதான் இதன் விஷேட மான அம்சமாகும்.

அடுத்த ஆண்டுக்கான பாதீடு தொடர்பிலும் அதன் உள்ளடக் கங்கள் தொடர்பிலும், ஆய்வு செய்வதற்கு முன்பு, நாம் அனைவரும் தெரிந்துகொள்ளவேண்டிய முக்கியமானதொரு விடயம் இருக்கிறது. அது, இதே அரசாங்கத்தினால், கடந்த முறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட 2017ஆம் ஆண் டுக்கான பாதீடு என்ன ஆனது? அதன் அடைவுமட்டம் என்ன என்பது தொடர்பில், அறிந்துகொள்ள வேண்டியது அவசியமா கிறது. அப்போதுதான், தற்போதைய பாதீடு யதார்த் தத்துக்குப் பொருத்தமானதா என்பதனை, உறுதி செய்து கொள்ள முடியும்.

**2017ஆம் ஆண்டுக்கான பாதீடு என்ன ஆனது?**

2016ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், இலங்கையின் நிதியமைச்சராகவிருந்த ரவி கருணாநாயக்கவால் நாடா ளுமன்றத்தில் இந்தப் பாதீடு சமர்பிக்கபட்டது. இந்தப் பாதீடு சமர்பிக்கப்பட்டது முதலே, மிகப்பெரும் சர்ச் சைகளையும் மாற்றங்களையும், தன்னகத்தே கொண்ட தாகவே அமைந்திருந்தது. குறிப்பாக, பாதீட்டில் அறிவிக்கப்பட்ட சில விடயங்கள் மீளப்பெறப்பட்டுக் கொள்ளப்பட்டதுடன், பல விடயங்கள் மாற்றிக் கொள் ளப்பட்டன. அவ்வாறு மாற்றங்களுக்கு உட்பட்ட போதிலும், ஏனைய விடயங்கள் அனைத்துமே நடை முறைப்படுத்தப்பட்டு இருக்கின்றனவா?

கடந்த ஆண்டு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட பாதீட்டின் 51சதவீதமான விடயங்கள் என்ன ஆனது? அதன் நிலை என்ன என்பது தொடர்பில், போதுமான தகவல்கள் வெளிப் படையாக எங்கு மில்லை. அதாவது, இது தொடர்பான தகவல்கள் எதுவுமே பொதுமக்களுக்கு வெளியிடப்படவில்லை என்பதே, நிதர்சனமான உண்மையாகும்.இவ்வாறு வெளிப்படுத்தப்படாத திட்டங்களின் மொத்த பாதீட்டு பெறுமதி சுமார் 67 பில்லியன்கள் ஆகும்.

ஒட்டுமொத்த பாதீட்டில் வெறும் 49 சதவீதம் விடயங்கள் தொடர்பில் மாத்திரமே, மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டு இருக்கின்றன அல்லது 49 சதவீதமான விடயங்கள் மாத்திரமே முன்மொழி யப்பட்டன போல, நடைமுறைப்படுத்த உத்தேசிக் கப்பட்டிருக்கிறது; அது தொடர்பிலான தகவல்கள் மட்டுமே மக்களுக்குப் பயன்படுத்தக் கூடியவகையில் உள்ளன.

இந்தப் பாதீட்டில், நிதி அமைச்சரினால் 37 முக்கிய வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந்தன. இதற்காக ஒதுக் கப்பட்ட நிதி யின் அளவு, சுமார் 116.91 பில -லியன் ரூபாயாகும். இது, ஒட்டுமொத்த பாதீட்டின், 80சதவீத செலவீனமாகும். அவ்வாறு, உறுதியளிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட ஒட்டு மொத்த 49சதவீதமானத் திட்டங்களின் நிலை, என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா ?

- 3சதவீதமான விடயங்கள், குறித்த காலத்தில் நிறை வேற்றப்பட்டும், குறித்த காலத்தில் நிறைவேற்றப் படவும் உள்ளன.
- 14 சதவீதமான விடயங்கள் இதுவரை ஆரம் பிக்கப் படவேயில்லை.
- 32 சதவீதமான விடயங்கள், திட்டமிட்ட காலத் தையும் தாண்டிச் சென்றுக் கொண்டிருக்கின்றன.

இதில், 3 சதவீதமான திட்டங்கள் என்பது, வீதி அபிவிருத்தி மற்றும் கிராமப்புற பகுதிகளை மறு சீரமைப்பது ஆகும். இதற்கென ஒதுக்கப்பட்ட நிதி, 4.5 பில்லியன் ரூபாவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, செலவீனங்களுக்கு ஒதுக்கப்பட்ட மீதமாக வுள்ள 112.41 பில்லியன் ரூபாய் எப்படி, எவ்வாறு, எப்போது பயன்படுத்தப்படும் என்பது தொடர்பில், போதிய தகவல்கள், நிதியமைச்சு உட்பட, அந்தவந்தத் துறைகள்சார் அமைச்சுகளிலும் இல்லை. ஆக மொத்தத்தில், கடந்த ஆண்டு முன் மொழியப்பட்ட பாதீடானது, வெறுமனே தாள்க ளிலேயே தேங்கிப் போன பாதீடாகவே, இன்றுவரை இருப்பதாக எடுத்துக் கொள்ளவேண்டும். இது, கடந்த அர சாங் கத்திலிருந்து மாற்றங்களை எதிர்பார்த்து, நல்லாட்சி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவந்த மக்களுக்கு ஏமாற்றமே!

அரசாங்கமும் அதன் அதிகாரிகளும், இலங்கை வரலாற்றில் மற்றுமொரு ஆண்டை, மக்களுக்கு வெறும் வாக்குறுதிகளை வழங்கிவிட்டு, வீணாக்கி யிருகிறார்கள் என்பதுதான், ஜீரணிக்க முடியாத உண்மை.

**2018ஆம் ஆண்டுக்கான பாதீடு**

இந்தப் பாதீடு, "Blue Green Budget" என்கிற பெயரினால் அழைக்கப்படும் என, இதனைச் சமர்ப் பித்த நிதியமைச்சர் தெரிவித்திருந்தார். இதற்கானக் காரணம், இம்முறை பாதீடா னது, முழுமையாக, துறை ரீதியான வளர்ச்சியையும் பொரு ளாதார முன்னேற்றத்தையும், அடிப்படையாக கொண்டிருப்ப துடன், சூழலுக்கு இசைவானச் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்குவதுமேயாகும்.

இந்தப் பாதீட்டில், வரி மூலமாக 110,000 மில்லியன் ரூபாய் வருமானத்தைத் திரட்ட அரசாங்கம் எதிர் பார்க்கிறது. குறிப் பாக, இந்த வரிவருமானத்தின் 22 சதவீதமானது, மோட்டார் வாகன மற்றும் ஆடம்பர வரிகள் மூலமாகவும் (excise duty and luxury tax), அடுத்த 22 சதவீதமானது பெறுமதிசேர் வரி மற்றும் நாட்டை கட்டியெழுப்பும் வரி மூலமாகவும் திரட்ட எதிர்பார்க்கப்படுவதுடன், ஏனைய 33 சதவீதமான வரி வருமானம், இந்தப் பாதீட்டில், புதிதாக நடை முறைப்படுத் தப்பட்ட தொலைத்தொடர்பாடல் வரி, குறுஞ்செய்தி வரி, கடனை மீளசெலுத்துவதற்கான வரி, கார்பன் வரி போன்றவற்றின் மூலமாக திரட் டவும் எதிர்பார்க்கிறது. வருமான வரி மூலம் திரட்டிக் கொள்ள எதிர்பார்க்கப்படும் அளவு மற்றும் விகி தங்கள் இந்த வருமானத்தில் உள்ளடக்கப்பட வில்லை.

இம்முறை பாதீட்டின் மிகச்சிறந்த விடயமே, மறை முக வரிமூலமாக திரட்டப்படும் வரி வருமானத்தைக் குறைத்து, நேரடி வரி வருமானத்தை அதிகரிக்க முயற்சி செய்திருப்பதாகும். இதன் விளைவாக, வருமான ஏற்றதாழ்வுக்கமைய வரியும் மக்களிடையே தாக்கத்தைச் செலுத்தும்.

இந்தப் பாதீட்டில் கவனம்செலுத்தக்கூடிய மற்று மொரு வரி, "சீனி வரி" ஆகும். இதுமக்கள் நுகரும் சீனி சார்ந்த பயன்பாட்டைக் குறைப்பதன் விளை வாக, நமது நாட்டில் மிகப் பெரும் நோயாகவுள்ள நீரழிவு நோயைக் கட்டுக்குள் கொண் டுவருவதை நோக்காகக் கொண்டுள்ளது. இதன்போது, ஒரு கிராமுக்கு 50சதம் எனும் வகையில், சீனியைக் கொண்டுள்ள குடிபானங்களுக்கு, இந்த வரி விதிக் கப்படுகிறது.

வரிவிதிப்புக் கொள்கையில், சீனி வரி மற்றும் பொலித்தீன் வரி ஆகியவைதான், கொள்கை வகுப் பாளர்கள் விலை நிர்ணய நுட்பத்தைப் பயன்படுத்தி விலையிடல் கொள் கையை வகுத்துள்ளார்கள் என்ப தை வெளிப்படுத்துகிறது. பொலித்தீன் பாவனையை பொறுத்தவரையில், அதன் பயன்பாட்டை குறைக்க, சூழலுக்குமாசு ஏற்படுத்தக்கூடிய பொலித்தீன் ஒவ் வொரு கிலோவுக்கும் 10 ரூபாய் என வரி விதிக் கப்பட்டுள்ளது.

அடுத்து, "Blue Green Budget" எனும் பெயருக்கு ஏற்ப, சூழலுக்கு இசைவாக்கத்தன்மை கொண்ட வகையில், வாகனங்களுக்கான வரிவிதிப்பு உள்ளது. கடந்த காலங்களைப்போல் பொருத்தமான காரணங் களின்றி, வெறுமனே வாகன போக்குவரத்தை குறைப் பதற்காக வரி அதிகரிப்பதாகவில்லாமல், ஒரு இலக்கை நிர்ணயித்து, அதன் அடிப்படையில் வரி விதிப்பு நிகழ்த்தப்பட்டுள்ளது. 2040ஆம் ஆண்டளவில் முழுமையாக எரிபொருள் சார் வாகனப் பயன் பாட்டை நடைமுறைக்குக் கொண்டு வருவதை-த இலக்காக்கொண்டு மின்சக்தியில் இயங்கும் வாகனங் களுக்கு வரிச்சலுகை வழங்கப்பட்டுள்ளது. அதுபோல, சூழலுக்கு மாசுதரும் எரிசக்தியிலான வாகனங் களுக்கு தீர்வை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதனுடன் சேர்ந் ததாக ஆடம்பர வாகனங்களுக்கும் வரி விதிக்கப் பட்டுள்ளது.

இதன்போது, மின்பாவனை அதிகரிக்கும் என்பதனை கருத்திற்கொண்டு சூரியசக்தியை பயன்படுத்துவோருக் கும், அதனை பயன்படுத்தி மின் வாகனங்களுக்கு மின்சக்தியை வழங்குபவர்களுக்கும் அதற்கான உபகர ணங்களை கொள்வனவு செய்யவும், நிர்மாணித்துக் கொள்ளவும் வெவ்வேறு வகையிலான வரிச்சலுகை வழங்கப்பட்டு இருக்கிறது.

**மதுபான வரி**

மதுபானங்கள் மீது விதிக்கப்பட்ட வரி மற்றும் வரி குறைப் பானது மிகப்பெரும் பேசுபொருளாக உள்ளது. காரணம், பியர் போன்ற மதுபான வகைகளுக்கு விலக்களிக்கப்பட்ட வரிகளின் காரணமாக, அவற்றின் விலை குறைவடைந் துள்ளது. இது இலங்கையர்களை மேலும் மதுபாவனைக்குள் இழுத்து செல்வதாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இலங்கையில் மதுபாவனை அதிகரித்துவரும் நிலையில், இதனை பொருளியலாளர்கள் கவனத்தில் கொள்ளாமை, நிச்சயம் வருத்தத்துக்குரியதே!

ஆனாலும், மதுபானங்களுக்கான வரியை விதிக்கும் போது, கொள்கை வகுப்பாளர்கள் கவனத்தில், கொண்ட விடயம் வேறாக இருக்கிறது. இலங்கையில் 49சதவீதமான மதுபான நுகர்வோர், சட்டவிரோதமாக தயாரிக்கப்படும் மதுபானங் களை அருந்துவோராக இருக்கின்றார்கள். அத்துடன், சட்ட ரீதியான மதுவை அருந்துபவர்களில் 80சதவீதத்துக்கும் மேற் பட்டவர்கள் கடின மதுபானவகையை (Hard Liquor) அருந்து பவர்களாக இருக்கிறார்கள். எனவே, இதனைக் கட்டு படுத்தும் பொருட்டு, எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல், கடினவகை மது பானங்களுக்கான வரி விதிப்பை அதிகரித்து இருக்கிறார்கள். பெரும்பாலான நாடுகளில், கடினவகை மதுபான நுகர்வை தவிர்ப்பதை நோக் காகக் கொண்டு, மதுவின் அளவு விகிதாசாரம் அடிப்படையிலேயே, வரி விதிக்கப்படுகிறது. அதனை பின்பற்றியே, நமது கொள்கை வகுப்பாளர்களும் வரி கட்டமைப்பை நிர்ணயிக்கப்போய் சர்ச்சையில் சிக்கிக் கொண்டுள்ளார்கள்.

**ஆடம்பர வரி**

இலங்கையின் வரிக்கட்டமைப்பில் மிக முக்கிய மாற்றங்கள் 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடைமுறைக்கு வரும் புதிய இறைவரி சட்டம் மூல மாக அமுல்படுத்தப்பட இருக்கிறது. பெரும்பாலும், இந்தப் புதிய இறைவரி சட் டமானது, வருமானவரி, சொத்துகள் மீதான வரி, மூலதன ஆதாய வரி என்ப வற்றின் ஊடாக வருமானம் மற்றும் வளங்களை மக்களிடையே மீள் விநியோகிக்கும் ஓர் உபகரண மாகத் தொழிற்படும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, இது தொடர்பில், அதீதமாகப் பாதீட்டில் குறிப்பிடப்படாத போதும், ஆடம்பர செலவீனங் களுக்குத் தயாராகவுள்ளவர்கள், அதற்கென பிரத்தியேக வரியைச் செலுத்த வேண்டும் என்பதை, இந்தப் பாதீடு வலியுறுத்தியிருக்கிறது எனலாம். இதற்கு, மிக சிறந்த உதாரணமாக, ஆடம்பர வாகனங்களுக்கு விதிக்கப்பட்ட வரியைச் சுட்டிக் காட்டலாம்.

**பழைய பாதீடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டவை**

முன்னைய பாதீடுகள் சமர்பிக்கப்பட்டபோது, முன் மொழியப் பட்டு நடைமுறைக்கு வராத சில திட்டங்கள், இம்முறை பாதீட்டின் வழியாக நடை முறைப்படுத்தப்பட முயற்சி எடுக் கப்பட் டுள்ளது. குறிப்பாக, வெளிநாட்டு உரிமையாளர்களைக் கொண் டுள்ள நிறுவனங்கள் நிலக்கொள்வனவில் ஈடுபட அனுமதி, வெளிநாட்டவர், 4ஆம் மாடிக்கு கீழ் வீடுகளைக் கொள்வனவு செய்ய அனுமதி, சுற்றுலா பயணிகளுக்கு பெறுமதிசேர் வரி மீளளிப்பு, கடனை மீளச் செலுத்தும் வரி அமுலாக்கம் என்பவற்றை குறிப்பிட்டு சொல்ல முடியும்.

**பெறுமதிசேர் வரியின் பெருமதியிறக்கம்**

இலங்கையில் எந்தவொரு பொருளிலும் மறை முகமாக உட்சேர்ந்திருக்கும் வரிகளில் ஒன்று இந்தப் பெறுமதிசேர் வரியாகும். ஆனால், இந்த வரியின் தாக்கத்தைக் குறைக்கும் பொருட்டு, குறைந்தது 150 பொருட்களுக்கு வரிவிலக்கு அல்லது வரி குறைப்பு, இந்தப் பாதீட்டில் வழங்கப்பட்டு இருக்கிறது.

**சுற்றுலாத் துறை**

இலங்கை விவசாய நாடு என்பதிலிருந்து சுற்று லாவுக்கு உகந்த நாடு எனும் பெயரை நோக்கி நகர ஆரம்பித்து விட்டது. இதனை உறுதி செய்யக் கூடியவகையில், சுற்றுலாத் துறையை ஊக்குவிக்க NBT, PAL வரிகளில் விலக்களிக்கப்பட்டுள்ள துடன், சுற்றுலாத்துறை வருமானத்தை, அரசாங்கம் பயன்படுத்திக்கொள்ள, சுற்றுலாசார் தரகர்களின் வரு மானத்துக்கு வரி விதிக்கவும் உத்தேசிக்கப்பட் டுள்ளது.

**நல்லிணக்க பாதீடு**

நல்லிணக்கத்தைப் பற்றி பேசிக்கொண்டு இருக் கின்ற வேளையில், அதற்கு வலுசேர்க்கும் வகை யில், சில விடயங்களை, இந்தப் பாதீடு உள்ள டக்கி இருக்கிறது.

காணாமல்போனோர் தொடர்பான செயற்பாடுகளுக் கும் உதவிகளுக்கும் 1.4 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டமை, பாதிக்கப்பட்ட கிராமங்களின் அபிவிருத்திக்கு 2 பில்லியன் ரூபாய் ஒதுக்கப் பட்டமை, வடக்கிலுள்ள பெண் களது வாழ்வாதார முயற்சிகளை முன்னேற்றவும் தொழில்சார் உதவி களை வழங்கவும் 2.75 பில்லியன் ரூபாய் ஒதுக் கப்பட்டமை, விடுதலைப் புலிகளால் கட்டாயப் படுத்தப் பட்டு வடக்கிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம் மக்களின் புனர்வாழ்வுக்கு 2.5 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டமை, வடமாகாண கூட்டுறவு சங்கம் வாயிலாக சிறு உற்பத்தியாளர்களுக்கு 1 பில்லியன் ரூபாய் உதவு தொகை பகிர்ந்தளிக்க உத்தேசிக்கப்பட்டமை, மயிலிட்டி துறை முகம் சார்ந்த பகுதிகளின் அபிவிருத்திக்கு 150 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டமை, அச்சுவேலி தொழிற் றுறை வலயத்தில் செயல்படும் நிறுவனங்களின் 50சதவீத மின் கட்டணத்தைக் குறைந்தது, 2 வருடங்களுக்கு அரசாங்கம் பொறுப்பேற்கவுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளமை, அம்மாச்சி உணவகங்களுக்கான வரவேற்பு காரணமாக அவற்றை அதிகப்படுத்த, 25 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு, முன்னாள் போராளிகளை தொழி லாளர் படையில் உள்வாங்கவும், அவர்கள் திறனை விருத்தி செய்யவும் 25 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு, முன்னாள் போராளிகளை தனியார் நிறுவனங்கள் வேலைக்கு அமர்த்தும்போது, அவர்களின் முதல் 12 மாதங்களுக்கான 50சதவீதமான ஊதியத்தை (10,000 ரூபாய் அதிகபட்சம்) அரசாங்கம் பொறுப்பேற்கும் வகையில் 250 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மையைக் குறிப்பிட முடியும்.

நடைமுறைப்படுத்தல் (IMPLEMENTATION)

2018ஆம் ஆண்டுக்கான பாதீடானது, ஏனைய பாதீ டுகளுடன் ஒப்பிடுமிடத்து, கொள்கை வகுப்பாளர்கள் மிகத் தெளிவாகத் தமது நீண்டகால இலக்குகளை அடைவதனை நோக்காகக்கொண்டு கொள்கை வகுப்பை செய்துள்ளமை புலனாகிறது. பாதீட்டில் வழங்கப்பட்டுள்ள ஒவ்வோர் உறுதிமொழிக்குப் பின்னாலும், அதற்கான சரியான காரணங்களும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தெளிவுபடுத்தப் பட்டும் இருக்கிறது.

ஆனால், இவை எவ்வளவு தூரம் நடைமுறைப் படுத்தப் படும் என்பதுதான் மக்கள் ஒவ்வொருவரதும் கேள்வியாக இருக்கிறது?

கடந்த ஆண்டு அள்ளி வழங்கப்பட்ட பாதீட்டு வாக் குறுதிகளில் வெறுமனே 3சதவீதத்தை மாத்திரமே நடை முறைபடுத்தியுள்ள நிலையில், இந்தப் பாதீடு நம்பிக்கையான வாக்குறுதிகளைக் கொண்டுள்ள நிலையிலும் எவ்வளவு தூரம் நடைமுறைக்கு வரும் என்பது தொடர் பில் மக்களுக்குச் சந்தேகமேயுள்ளது.

ஒவ்வொரு வருடமும், மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்கிவிட்டு, அதன் பெறுபேறுகளைக் கவனிக்கா மலிருக்கும் அரசியல்வாதிகளும், திறனற்ற அரசாங்க அதிகாரிகளும் இருக்கும்வரை, 2018ஆம் ஆண்டு பாதீடு போல எத்தனை பாதீடுகள் வந்தாலும், மக்களுக்கான நலனில் மாற்றம் வரப்போவதில்லை. எனவே, திறமையான பாதீட்டுக் கொள்கை வகுப் பாளர்கள், அதே திறனுடன் அதன் நடை முறை படுத்தலையும் முறைப்படுத்துவது பிரதானமாகும்.

தமிழ் மிரர் 2017நவம்பர் 27 திங்கட்கிழமை.

> சகலவிதமான அடிமைத்தனத்தையும் ஒழிக்காமல் மனித விடுதலை சாத்தியமாகாது.
>
> காரல் மாக்ஸ்

**தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிதை, கட்டுரைப் போட்டி முடிவுகள்:**

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்ரோபர் ரஷ்ய சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை ( 1917 – 2017 ) முன்னெடுக்கும் முகமாக அகில இலங்கை அளவில் நடாத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்களினது விபரங்கள்:

**மாணவர் பிரிவு**

**கவிதை**

**முதலாவது பரிசு**
மாத்தளை எல்கடுவ தமிழ் மகா வித்தியாலய மாணவி
செல்வி வி. மேகலா

**இரண்டாவது பரிசு**
யாழ். இராமநாதன் கல்லூரி, சுன்னாகம் மாணவி
செல்வி வர்ஷனா வரதராசா

**மூன்றாவது பரிசு**
யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி
செல்வி மாதவி உமாசுதசர்மா

**கட்டுரை**

**முதலாவது பரிசு**
மாத்தளை எல்கடுவ தமிழ் மகா வித்தியாலய மாணவி
செல்வி தமயந்தி கருணாநிதி

**இரண்டாவது பரிசு**
யாழ். மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவி
செல்வி வினுஜா ஸ்ரீதரன்

**மூன்றாவது பரிசு**
யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி
செல்வி வானதி செங்கதிர்ச்செல்வன்

**திறந்த பிரிவு**

**கவிதை**

**முதலாவது பரிசு**
திருமதி தங்கராசா இராஜராஜேஸ்வரி,
குப்பிழான் தெற்கு

**இரண்டாவது பரிசு**
திரு ரி. கிரிதரன்,
சம்பூர் - 02

**மூன்றாவது பரிசு**
க. சுஜிபா,
காரைநகர்

**கட்டுரை**


**முதலாவது பரிசு**
திரு இராஜரட்ணம் தனிஸ்ரன்,
மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்.

**இரண்டாவது பரிசு**
காந்தரூபன் கேமலாரூபினி,
மல்லாகம்.


**மூன்றாவது பரிசு**
கீதாஞ்சலி சிங்கராசா
தேக்கவத்தை, வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சமூக விஞ்ஞான வட்ட கருத்தரங்கு பதிவுகள்



## புத்தூர் கலைமதி கலை இலக்கிய வட்டம் கவிதை நூல் வெளியீடு பதிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் க. கைலாசபதி அவர்களின் 14 ஆவது ஆண்டு நினைவுக் கருத்தரங்கு 11.12.2011 அன்று யாழ்ப்பாண தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோதான காட்சிகள்.
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org